
# எம்.ஜி.ஆர்

எழுதிய

# உலகம் சுற்றும் வாலிபன்

உருவான கதை



# எம்.ஜி.ஆர்

எழுதிய

# உலகம் சுற்றும் வாலிபன்

உருவான கதை

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

# முன்னுரை

**நா**ன் ஜூபிடரில் 'ஆபீஸ் பாய்'ஆக மாதம் பத்து ரூபாய் ஊதியம் வாங்கிய காலத்தில் இருந்து, பிரபல இசையமைப்பாளராக வளர்ந்த வரையில்... எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்னை நன்றாகத் தெரியும்.

'விசு' என்றுதான் அன்புடன் அழைப்பார்.

இசையமைப்பாளர் என்பதை விட, என்னை அவரது குடும்பத்தில் ஒருவராக – உடன் பிறந்தவராக– கருதினார் எம்.ஜி.ஆர்.



அவர் வெளிநாடுகளுக்கு போகும்போதெல்லாம் அங்கிருந்து இசை சம்பந்தமான கேசட்டுகளை வாங்கி வந்து, என்னிடம் தந்து கேட்கச் சொல்வார். அந்த அளவுக்கு அவருக்கு இசையார்வம் இருந்தது.

என் முதல் படம் 'ஜெனோவா'வில் இருந்து எம்.ஜி.ஆர். அவர்களின் பல வெற்றிப் படங்களுக்கு இசையமைப்பாளராக பணியாற்றிய பின், ஒரு நாள் எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்து எனக்குத் தொலைபேசி வந்தது. என்னை விக்ரம் ஸ்டூடியோவுக்கு வரச் சொன்னார், போனேன்.

''மேலே ஆகாயம், கீழே பூமி' படம் பண்றேன்... பத்து பதினைந்து பாட்டு இருக்கும். எனக்கு ரிக்கார்ட் பண்ணிக் கொடுக்கணும்'' என்றார் எம்.ஜி.ஆர்.

''என் பாக்யம்'' என்று சொல்லிவிட்டு வந்தேன்.

இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து செய்தித்தாள்களில் ஒரு செய்தியைப் படித்தேன். அதில் 'மேலே ஆகாயம் கீழே பூமி' படத்துக்கு 'உலகம் சுற்றும் வாலிபன்' என்று பெயர் வைத்திருப்ப தாகவும், அதற்காகக் குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைப்பில் நான்கு பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு நாள்—

எம்.ஜி.ஆர். தொலைபேசியில் என்னிடம் ''உலகம் சுற்றும் வாலிபன்' பெரிய படம். அதற்கு நீ இசையமைக்க வரவில்லையே'' என்றார்.

''நீங்கள் புதியவரை இசையமைப்பாளராக அமர்த்தியிருக்கிறீர்கள் என்னும் செய்தியை பத்திரிகைகளில் படித்தேன். எனக்கு ரொம்ப சந்தோஷம். அவரை வைத்து படத்தின் இசையமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து விடுங்கள்; என்னை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லி ரிசீவரை வைத்துவிட்டேன்.

ஒருநாள் மாலை ஆறு மணி இருக்கும். இயக்குநர் ப.நீலகண்டன், நாகேஷ், எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் குஞ்சப்பன், பத்மநாபன் உட்பட படத்தின் டெக்னிஷியன்கள் என் வீட்டிற்கு வந்தனர்.

''என்ன விசேஷம்?'' என்று அவர்களிடம் கேட்டேன்.

''எம்.ஜி.ஆர். அனுப்பினார், 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்கு நீங்கள் இசையமைக்க வேண்டும்'' என்று சொன்னார்கள்.

''தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்துக்கு நான் இசையமைக்க மாட்டேன். ஒரு படத்துக்குப் புதியவராக என்னை ஒப்பந்தம் செய்தபின் ரத்து செய்தால் எனக்கு எப்படி இருக்கும்? அதனால் அவருக்கு (குன்னக்குடிக்கு) ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்'' என்றேன்.

சிறிது நேரத்தில் அவர்கள் வெளியே போய் குன்னக்குடி வைத்தியநாதனை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். அவர் ஏற்கெனவே எனக்கு நன்கு பழக்கமானவர்.

''எம்.ஜி.ஆர்.தான் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார். நீங்கள்தான் இந்தப் படத்திற்கு இசையமைக்க வேண்டும். எனக்கு வேறு படம் தருவதாகச் சொல்லியிருக்கிறார். இந்தப் படத்திற்காக எனக்குப் பேசிய சம்பளத்தையும் கொடுத்து விட்டார். நீங்கள் இப்படத்திற்கு இசையமைத்தால்தான் நன்றாக இருக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். நீங்கள் 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்கு இசையமைப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதனால் நீங்கள்தான் செய்ய வேண்டும்'' என்றார் குன்னக்குடி வைத்தியநாதன்.

மறுநாள்—

'உலகம் சுற்றும் வாலிபன்' பாடல் கம்போசிங்குக்குப் போனேன்.

அப்போது படத்தின் கதை எம்.ஜி.ஆருக்கு மட்டுமே தெரியும். அதனால் சிச்சுவேஷன் சொல்லச் சொல்ல ''பாட்டு... அப்படி... இப்படி'' என்பார். பாடல்கள் எல்லா படத்துக்கும் பொருந்தும்படி இருக்கும்.

காலையில் பாடல் கம்போசிங்; மாலையில் ரிக்கார்டிங்.

அப்போது திண்டுக்கல் உப—தேர்தல் சமயம். அதனால் அவரால் பாடல்களைக் கேட்க முடியாதபடி 'பிசி'யாக இருந்தார். இருந்தாலும் அவர் 'ஓ.கே.' செய்த பாடல்களைத்தான் ஒலிப்பதிவு செய்ய வேண்டும். ''நீங்கள் 'உலகம் சுற்றும்

வாலிபன்' படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் 'திண்டுக்கல் சுற்றும் வாலிபன்' ஆக இருக்கிறீர்களே'' என்றேன் அவரிடம்.

''சரி... பாட்டைக் கேட்கிறேன்'' என்று சொல்வார்; ஒவ்வொரு பாடலையும் கேட்டுவிட்டு அவர் சொல்லும் பதில்— ''திருப்தியாக இல்லை.''

''நீங்கள் ஓகே செய்த ட்யூனை... பாடலை... இசைக்குழுவினருடன் சேர்த்து ஒலிப்பதிவு செய்தபின்— ஒவ்வொரு பாடலுக்கும் ஏராளமாக செலவு செய்தபின்— நீங்கள் திருப்தியாக இல்லை என்று சொன்னால் எனக்கு பயமாக இருக்கிறது'' என்பேன்.

''பயப்படாதே... இன்னொரு முறை எடு'' என்பார்.

எனக்கு 24 மணி நேரமும் 'உலகம் சுற்றும் வாலிபன்' பாடல்கள்தான். சாப்பாடு, தூக்கம் கிடையாது. இப்படி 15 நாட்களில் 10 பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

இந்தப்பட வேலையை முடித்தபின், நடிகர் — தயாரிப்பாளர் கே.பாலாஜி அவர்களின் கம்பெனியில் பாடல் கம்போசிங்கில் இருந்தேன்.

அப்போது— எம்.ஜி.ஆர். போன் பண்ணினார்: ''உன் பாட்டெல்லாம் கேட்டேன், சுமாராக இருக்கு. அதற்குப் பணம் (சம்பளம்) ஒண்ணும் வாங்கலையே'' என்றார்.

நான் பதிலேதும் சொல்லாமல் ரிசீவரை வைத்து விட்டேன். ஒரு மணி நேரம் கழித்து எம்.ஜி.ஆரிடம் இருந்து மீண்டும் தொலைபேசி அழைப்பு.

எம்.ஜி.ஆர். அவர்களின் தி.நகர் (மாம்பலம்) அலுவலகத்துக்குப் போனேன். அங்கே வெளியே பட விநியோகஸ்தர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள், ஆள் உயர மாலையை என் கழுத்தில் போட்டு, என்னை உள்ளே எம்.ஜி.ஆரிடம் அழைத்துச் சென்றார்கள்.

என்னை எதிரில் அமரச் சொன்னார் எம்.ஜி.ஆர். நான் தயங்கினேன்.

''விநியோகஸ்தர்கள் படத்தின் பாடல்களைக் கேட்டு ரொம்ப பிரமாதம் என்கிறார்கள். நீ பணமே வாங்கலையே... உனக்குப் பணம் வேண்டாமா?'' என்று கேட்டார்.

''நீங்கள்... ஒவ்வொரு பாட்டையும் கேட்டு எனக்குப் பிடிக்கவில்லை'' என்று சொன்னீர்கள். அது எனக்கு வருத்தம். அதனால் எனக்குப் பணம் வேணாம்'' என்றேன்.

''பையில் பணம் வைத்திருக்கிறேன். எடுத்துக் கொண்டு போ...'' என்றார் எம்.ஜி.ஆர்.

''நீங்கள் என் பாட்டு நன்றாக இல்லை என்று சொன்னீர்கள். அதனால் எனக்குப் பணம் வேண்டாம்'' என்றேன் மறுபடியும்.

''சரி... உங்க அம்மாவுக்கு போன் பண்ணி சொல்றேன்'' என்றார் சிரித்துக் கொண்டே.

என்னிடம் ஒரு பலவீனம் உண்டு. அது எம்.ஜி.ஆருக்கும் தெரியும். அது என் அம்மாவிடம் எனக்கு உள்ள பக்திதான்.

அப்போது எம்.ஜி.ஆர். சொன்னார்—

''ஒவ்வொரு பாட்டும் நல்லா இல்லைன்னு சொன்னாதான் நீ அடுத்த பாட்டுக்கு இன்னும் அதிகமாக கவனம் செலுத்துவே... அதனால்தான் அப்படிச் சொன்னேன்'' என்றார்.

''இதை நீங்க அன்னிக்கே சொல்லியிருந்தா பயமில்லாம, சந்தேகமில்லாம, சந்தோஷமாக இன்னும் சிறப்பாகப் போட்டிருப்பேனே. எனக்குப் பாராட்டுதான் முக்கியம்'' என்றேன்...

**எ**ன் திரை இசைப் பயணத்தில் ஒரு மைல் கல் — உலகம் சுற்றும் வாலிபன்.

இத்திரைப்படம் உருவாவதற்கு உழைத்த கலைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்களில் பலர் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் வெற்றிக்காக அவர்கள் பட்ட துன்பங்களையும், கடின உழைப்பினையும் அன்றே எம்.ஜி.ஆர். அவர்கள் 'பொம்மை' இதழில் தொடராக 'திரை கடலோடியும் திரைப்படம் எடுத்தோம்' என எழுதி வெளிப்படுத்தினார். அந்தத் தொடரை இன்றைய ரசிகர்கள் உணர்ந்து கொள்ளும் வண்ணம் இந்நூல் அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

புத்தகத்தின் வடிவமைப்பு, படங்கள் அனைத்தும் வெகு நேர்த்தியாக இருக்கின்றன... நூலில் இடம்பெற்றுள்ள வெளிப்படையான செய்திகள் ரசிக்கும்படி உள்ளது.

இது உழைப்பின் வெற்றியை பறைசாற்றும் மிக வித்தியாசமான புத்தகம். 'உலகம் சுற்றும் வாலிபன்' திரைப்படத்தினைப் போலவே இந்தப் புத்தகமும் மிகுந்த வரவேற்பினைப் பெறும் என்று நம்புகிறேன்.

நூலினை வெளியிடும் விஜயா பப்ளிகேஷன்ஸின் நிறுவனர் திரு. பி.விஸ்வநாத ரெட்டி அவர்களுக்கு என் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

'உலகம் சுற்றும் வாலிபன்' திரைப்படத்தில் என் பங்களிப்பு இடம் பெற்றது போலவே அது தொடர்பான புத்தகத்திலும் என் கருத்தளிப்பு இடம் பெறுவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

- எம்.எஸ்.விஸ்வநாதன்

*# 46, சாந்தோம் நெடுஞ்சாலை,*
*சென்னை – 28.*

# பதிப்புரை

தமிழ்த் திரைப்பட உலகில், வரலாறு படைத்த திரைப்படங்களின் வரிசையில் இடம் பெற்றுள்ள படம் - உலகம் சுற்றும் வாலிபன்.

நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் என திரைஉலகின் முப்பெரும் பரிமாணங்களில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப் பட்ட படம் - 'உலகம் சுற்றும் வாலிபன்.'

வெளிநாடுகளில் நடப்பது போல கதையை அமைப்பது சுலபம். ஆனால் கதையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களுக்கே கதாபாத்திர நட்சத்திரங்களை அழைத்துச் சென்று படப்பிடிப்பை நடத்தி வருவது... அந்தப் படத்தை மாபெரும் வெற்றிப் படமாக்குவது என்பதை அந்த நாளில் நினைத்துக்கூட பார்க்க முடியாது. சுமார் 38 ஆண்டுகளுக்கு முன் டோக்கியோ, பாங்காக், சிங்கப்பூர் என தென்கிழக்காசிய மாநகரங்களில் நடத்திய 'உலகம் சுற்றும் வாலிபன்' பற்றிய தமது படப்பிடிப்பு அனுபவங் களை 'திரை கடலோடித் திரைப்படம் எடுத்தோம்' என்னும் தலைப்பில், 'பொம்மை' இதழில் ஜூலை 1971 முதல் செப்டம்பர் 1972 வரையில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடராக எழுத, அது வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

முதன்முறையாக வெளிநாட்டில் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்திய போது 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்ட அன்றைய தயாரிப்பு அனுபவங்கள், இன்றைய வாசகர்களுக்கு மட்டுமல்ல, பட உலகினருக்கும் பயனுள்ளதாகவும் அடுத்து வரும் தலைமுறையினருக்கு ஒரு முன்னோடியாகவும் இருக்கும் என நம்புகிறோம்.

இந்த நூலுக்கு 'திரை இசை உலகில் வரலாறு' என வாழ்ந்து கொண்டிருக்கும் மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்கள் முன்னுரை வழங்கியிருக்கிறார். அவருக்கு விஜயா பப்ளிகேஷன்ஸ் சார்பில் எங்களது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-பதிப்பாளர்



எக்ஸ்போ 70–ல்
எம்.ஜி.ஆர்.



# 1

‘‘திரை கடலோடியும் திரவியம் தேடு’’ என்று பெரியவர்கள் சொன்னாலும் சொன்னார்கள்; அந்தச் சொல் என்னை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்து விட்டது என்பதை எண்ணும்போதெல்லாம், எனக்கே சிரிப்பு அடக்க முடியாத அளவுக்கு வருகிறது. ஏனெனில் பணம் சம்பாதிக்கச் சென்றேனா, செலவு செய்யச் சென்றேனா என்பதை நினைத்தல்ல; கையில் போதிய பணம் இல்லாத நிலையில், இயற்கை நியதியின் வலிவு பொருந்திய கரங்களில் என்னை ஒப்படைத்துக் கொண்டதன் வாயிலாக, என்னை நம்பிய நல்ல பண்புள்ள கலைஞர்களையும் பரிதாபமான நிலைக்கு ஆளாக்கும் விபரீதச் சூழ்நிலைக்கு அழைத்துச் சென்றேன்.

ஆமாம், அந்த அன்புள்ளங்கொண்ட, கடமையுணர்வைத் தனது மூலமாக மாற்றிவிட்டுச் செயல்படும் பக்குவம் பெற்ற அந்த நல்ல நண்பர்களை, கையில் பணமில்லாத ஏழைகளாக, உறவினர்களில்லாத அனாதைகளாக, என்னுடைய எந்த முடிவிலும் அவர்கள் அசைய வேண்டியவர்களாக, சுருங்கச் சொன்னால் என்னைத் தவிர, வேறு துணையற்றவர்களாக

ஆக்கிவிட்ட நிலையில் இவர்களை என்னோடு வெளிநாட்டுப் பயணத்தில் கலந்து கொள்ள அழைத்துச் சென்றேன்.

நான்தான் அழைத்துச் சென்றேனா?

இலங்கைக்கு முன்னொரு முறை பயணம் சென்றேன். அப்போது இலங்கை நண்பர்கள் எனக்கும் திருமதி சரோஜா தேவி அவர்கட்கும்- பட்டம் வழங்க முடிவு செய்து அழைத்திருந்தார் கள். அதைப் பெறவும், இலங்கையிலுள்ள நான் பிறந்ததாகச் சொல்லப்படுகிற கண்டியைக் காணவும் ஆவலோடு சென்றேன்.

நானா சென்றேன்! - எத்தனையோ நாட்கள் அனுமதிக்காகக் காத்திருந்தும், போலீஸ் அதிகாரிகளிடம் நான் அழைத்துச் செல்லப்பட்டும், புறப்படுவதற்குக் குறிப்பிட்டிருந்த நாள் நெருங்கி வந்து கொண்டிருந்தும் அனுமதி மட்டும் கிடைக்கப்பெற்றேனில்லை. ''டில்லியிருந்து வருகிறது'' என்பார்கள் ஒருநாள். ''விமானத்திலேயே அனுப்பப்பட்டு விட்டதாம்'' என்பார்கள் இன்னொரு நாள். அதென்னமோ எனக்கு இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கும் உரிமைச் சீட்டைச் சுமந்த அந்த விமானம் மட்டும், ஏறக்குறைய ஒன்றரை மாதங்களாகியும் சென்னை வந்து சேரவேயில்லை!

கடைசியில் ஒருநாள் ''சென்னை அரசினரின் சிபாரிசு இருந்தால்தான், டில்லியில் அனுமதி கிடைக்கும் என்ற நல்ல சேதி என்னிடம் சொல்லப்பட்டது. 'இல்லையென்று சொல்ல இத்தனை நாள் இந்த அனுமதிச் சீட்டு, ரயிலிலும் விமானத்திலும் அனாவசியமாகப் பயணம் செய்திருக்க வேண்டுமா?' என்று எண்ணிய போது என் மேலும் என்னைச் சுற்றியுள்ளவர் மேலும் வெறுப்பே ஏற்பட்டது.

'ஆபத்பாந்தவன்' என்பார்களே, அதுபோல் என் மீது அன்பும் பாசமும் கொண்ட நண்பர் ஒருவர் சமயசஞ்சீவியாக வந்தார். அவர் நல்ல எழுத்தாளர்; கவிதை புனையும் திறமை பெற்றவர்; பண்போடு பழகுபவர். அவருடைய பெயர் காஞ்சி அமிழ்தன் என்பது.

அவர் அன்றைய தமிழக முதல்வர் திரு.பக்தவத்சலனார் அவர்களிடம் என்னை அழைத்துச் சென்று, நான் எதற்காக

இலங்கை செல்லுகிறேன் என்ற விவரத்தைச் சொல்லி, அவருடைய உதவியால் அனுமதி வாங்க முயலலாம் என்றார்.

''சரி'' என்றேன். வேறு என்ன சொல்லுவேன்- அந்த நிலையில்? திரு.அமிழ்தன் அவர்கள் அன்றைய முதல்வரைச் சந்தித்து நான் சந்திக்கும் நாள், நேரம் இவைகளைக் குறித்துக் கொண்டு மகிழ்ச்சி பொங்க என்னிடம் வந்தார். என்னைச் சந்திக்க சம்மதித்து விட்டார் என்று கொஞ்சம் உரக்கவே சொன்னார்...

நான் அப்போதும் மகிழ்வெய்தவில்லை. அவரோ காங்கிரசைச் சேர்ந்தவர். நானே காங்கிரசிற்கு நேர் எதிரான கொள்கையைக் கொண்ட தி.மு.கவில் உறுப்பினன். பல்வேறு நேரங்களில் நகர சபைத் தேர்தலிலிருந்து சட்ட மன்றத் தேர்தல் வரை அவருடைய கட்சிக்கு எதிராகப் பணியாற்றியவன். அவருடைய கட்சியினர் சிலராவது எனது முயற்சியால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டிருப்பார்கள். இந்த அளவிற்கு எதிர்ப்புறத்தில் குறிப்பிடத்தக்க பணியாற்றிக் கொண்டிருக்கும் என்னை அவர் வரவேற்பார் என்றோ, என்னுடைய புகழ் ஓங்க, பரவ அவர் உதவுவார் என்றோ நான் எப்படி எதிர்பார்க்க இயலும்?

ஆனால் அவர் செய்த அந்த உதவி ஒரு நடுநிலையாளர் என்ற முறையில், தனது நேர்மையான நற்பண்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது என்பதை நான் எழுதாமலிருந்தால் என் மனச் சாட்சிக்கு நானே துரோகியாகி விடுவேன்.

அன்றைய தமிழக முதல்வர் திரு.பக்தவத்சலனாரை அவரது இல்லத்தில் சந்தித்தேன். நாலு முழக்கதர் வேட்டி, அரைக்கை உள்சட்டை, ஒரு துண்டு இவைகளோடு காட்சியளித்தார். எத்தகைய எளிமையோடுள்ள தோற்றம்...! நான் கற்பனை செய்திருந்ததற்கும் நேரில் பார்த்த அந்த முதல்வருக்கும் எள்ளத்தனையும் தொடர்பே கிடையாது. திகைத்தேன் எனினும் அதைப்பற்றி நினைக்கக் கூட அவர் எனக்கு வாய்ப்புத் தராமல், ''என்ன மிஸ்டர், ராமச்சந்திரன், இலங்கைக்குப் போகிறீர் களாமே? என்னைக்குப் புறப்படறதா உத்தேசம்?'' என்றாரே பார்க்கலாம்.

அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில், ''என்று புறப்படுவதாக உத்தேசம்?'' என்றல்லவா கேட்கிறார்! கேலி செய்கிறாரா? இப்படி ஒரு சிறு குழப்பம்.



எக்ஸ்போவின் வரைபடம் பார்க்கும் எம்.ஜி.ஆர்.

அதற்குள் திரு. அமிழ்தன் சொன்னார்: ''அனுமதி கிடைத்தால் சில நாட்களுக்குள்ளேயே புறப்படுவார்.''

திரு.பக்தவத்சலனார் எவ்விதமான சலனமுமின்றி சொன்னார்: ''உங்களுக்கெல்லாம் அனுமதி கொடுக்கல்லேன்னா என்ன அர்த்தம்? கலைஞர்கள் போகாமல் வேறு யார் போறது?...'' என்று சொன்னதைக் கேட்டதும் உள்ளத்தில் பூரிப்பு. மக்களுடைய அன்பைப் பெற உரிமையுள்ளவர்கள், வெளிநாடு சென்று தமது நாட்டின் மதிப்பையும் வெளிநாட்டினரின் உறவையும் காப்பாற்றத் தகுதி பெற்றவர்கள் கலைஞர்கள்தாம் என்றல்லவா சொல்லுகிறார்!! இனி அனுமதி கிடைத்தாலென்ன?... கிடைக்கா விட்டாலென்ன?... இப்படி நான் எண்ணினேன்.

அதற்குள் திரு.பக்தவத்சலனார் தொடர்ந்து பேசினார்: ''நான் வேண்டிய ஏற்பாடு செய்றேன். நீங்கள்ளாம் நிச்சயம் போய் வரணும்'' என்று சொல்லி அன்போடு அனுப்பி வைத்தார். நம்பிக்கையோடு புறப்பட்டேன்.

சில நாட்களில் அனுமதி கிடைத்தது. திரு.பக்தவத்சலனாரிடம் நேரில் சென்று நன்றி சொல்லி, விடை பெற்றேன். அவர் ஆசியோடு...

இலங்கைக்குப் பயணமான தினத்தில், விமான நிலையத்தில் ஓர் அறையில் காத்திருந்தேன். எதிர்பாராத விதமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் அறையில் நுழைந்தார்கள்

எழுந்தேன்.. உட்காரச் சொல்லி விட்டுத் தானும் அமர்ந்தார்கள்.

புறப்படுவதற்கு முன், ''தமிழக தி.மு.க. விற்கும் இலங்கை தி.மு.க.விற்கும் எந்த வகையிலாவது தொடர்புண்டா?... என்று அண்ணாவிடம் கேட்டேன்.

அண்ணா அவர்கள் உடனே பதில் சொன்னது இதுதான்: ''ஸ்தாபன ரீதியாக இரண்டிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது'' என்று சொன்னது மட்டுமின்றி, ஒரு காகிதத்தில் எழுதி ''அதிகார பூர்வமான எனது கருத்து, தங்களிடமிருக்கட்டும். தேவைப் பட்டால் அங்கு இதைப் படித்துக் காண்பியுங்கள்'' என்று சொல்லி என்னிடம் கொடுத்தார்கள்.

நான் புறப்படும் போது மாலையணிவித்து அண்ணா அவர்கள் அனுப்பினார்கள். புறப்படுவதைப் பற்றி நான் ஏதும் சொல்லாதிருந்தும், அவராகவே வந்து தனது குழந்தையை ஆசி கூறி அனுப்பியது போல் என்னை வழி அனுப்பி வைத்தார்கள்...

இந்த முறை வெளிநாட்டுக்குப் பயணமான அன்று, காலையிலேயே அண்ணா துயிலுமிடத்திற்குச் சென்றேன். முன்பு நேரில் வந்து எனக்கு மாலையணிவித்து வாழ்த்திய அந்த மாமேதை - அன்பு இதயம் இன்று...

எப்படி எழுத?... எதை எழுத?

அவருடைய பாதத்தைத் தொட்டேன். என் இதயத்தால் தொட்டேன். அந்தக் காலின் விரல்களை என் கைகளால் தடவி முன்பு வணங்கினேனே விமானத்தில் ஏறு முன்பு, அப்படி யல்ல!

''என் உள்ளமெலாம் சிலிர்க்க, ரத்தநாளமெலாம் துடிக்க, கண்கள் குளமாக, விரல்கள் நடுங்க அந்த மேடையில் அண்ணா வின் கால்களை வருடினேன்...''

அண்ணா ஏதோ சொல்வது போல் ஒரு பிரமை...

அதையும் மனதில் இருத்திக் கொண்டேன் பத்திரமாக.

'தம்பீ! தமிழகத்துக்கோ, தமிழ்ப் பண்புக்கோ, இந்தியத் துணைக் கண்டத்து உயர்வுக்கோ ஏதும் பங்கம் வராமல் நடந்து கொள்!'

இப்படி அண்ணா சொன்னது போல் ஓர் எண்ணம் தோன்றியது.

ஏன் சொல்லியிருக்கக் கூடாது? அவர் எத்தனையோ முறை, பேசி, எழுதி நமக்கெல்லாம் அறிவுறுத்திய ஒன்றுதானே!

இருப்பினும் அன்று அப்போது அது ஒரு புதிய கட்டளை போல், மனத் தெளிவை உண்டாக்கும் அறிவுரை போல் இருந்ததுடன், எனக்குப் புத்துணர்வையும் புதுத் தெம்பையும் அளித்த வரம் அதுவாகவும் இருந்தது.

கிடைத்தற்கரிய பெரு நிதியைப் பெற்று விட்டவனாக நான் மாறினேன். அந்தத் துணிவோடு நேரே சென்றேன்- என் உடன் பிறந்த அண்ணன் திரு.எம்.ஜி.சி.அவர்களைக் காண...

அண்ணனின் காலில் விழுந்து வணங்கினேன். தழுதழுத்த குரலில் அவர் சொன்னார்:

''உடம்பை ஜாக்கிரதையாகப் பாத்துக்க. எதுக்கும் அவசரப் படாதே. நீ குற்றமில்லாதவனா இருக்கலாம். உன்னைச் சுற்றி இருக்கிறவங்க எல்லாரையும் அப்படி எதிர்பார்க்காதே. எல்லாரையும் நம்பிடாதே; அதுக்காக எல்லாரையும் சந்தேகப் படாதே. எல்லாத்துக்கும் நீதான் பொறுப்பு! அதனாலே அமைதியா இருந்து எச்சரிக்கையா நடந்துக்க. படப்பிடிப்பிலே கவனமா தொழில் செய்யணும். முடிஞ்சா அடிக்கடி கடிதம் போடு''.

இந்த ஆசியை- தாய், தந்தை, ஆசான் மூன்றுமாக இருந்து வாழ்த்தி வழங்கியதை, எனது பாதுகாப்புக் கவசமாக்கிக் கொண்டு புறப்பட்டேன்.

வீட்டிற்கு வந்தேன். விமான நிலையத்தில் நண்பர்கள், தோழர்களின் நெரிசல் இருக்கும் என்ற கற்பனையில் வீட்டிலேயே மாலை அணிவித்து வழியனுப்ப வந்திருந்த நண்பர்களிடம் ஆசி பெற்றுக் கொண்டேன்.

எந்தத் தொழில் தொடர்பும் நேரடியாக இல்லாவிடினும், என்மீது உடன்பிறப்புப் போன்ற பாச உணர்வு காட்டி, எங்கும் எப்போதும் என்னிடத்தில் தனித்தன்மை வாய்ந்த அன்புணர்வோடு பழகும் திரு.என்.டி.ராமராவ் அவர்கள் வீட்டிற்கு வந்து



எம்.ஜி.ஆர்., ப.நீலகண்டன்

மாலை அணிவித்து வாழ்த்தினார்கள். அவரிடம் ஆசி பெறுமாறு மூன்று கதாநாயகிகளையும் (சந்திரகலா, மஞ்சுளா, லதா) வணங்கச் சொன்னேன். சந்திரகலா திரு.என்.டி.ஆர். அவர்களுடன் அதற்கு முன்பே சில படங்களில் நடித்து அறிமுகமானவர். அந்த உரிமையோடும் அவர் வாழ்த்தினார்.

இம்மூன்று பெண்களும் தங்களோடு எந்த உறவினரையும் அழைத்து வர இயலாதிருந்தது. எனவே, எனது வாழ்க்கைத் துணைவி ஜானகிதான் அவர்கட்குத் தாய், தமக்கை, அண்ணன் எல்லாம்.

டைரக்டர்கள் திருவாளர்கள் கிருஷ்ணன்- பஞ்சு இருவரும் மலர் மாலைகளை அணிவித்து வாழ்த்தினார்கள். திரு.கிருஷ்ணன் அதிகமாகப் பேச மாட்டார். அப்படி ஏதாவது பேசிச் சொன்னாரானால் அது ஆணித்தரமாக இருக்கும்; ஊக்கம் தருவதாக இருக்கும். அவர் சொன்னார்: ''கொஞ்சங் கூடப் பயப் படாதீங்க! ரொம்ப நல்லாப் படம் எடுத்துக்கிட்டு வருவீங்க...'' என்று

திரு.பஞ்சு கொஞ்சம் வெகுளி. எதையும் மனதில் வைத்துக் கொள்ளத் தெரியாது என்பது எல்லாருக்கும் தெரிந்த பகிரங்க ரகசியமாகும்.

அவர் சொன்னார்:

''செலபேர், போய் லாங்ஷாட் எடுத்துக்கிட்டு வந்து இன் செர்ட் போட்ற மாதிரி போட்டுடாதீங்க.''

யாரையும் குறை கூறும் எண்ணம் அவருக்கு எப்போதுமில்லை. இப்படிப் பேசுவது அவரது இயல்பு.

திரு.பந்துலு அவர்களும் வீட்டிற்கே வந்து மாலை அணிவித்து வாழ்த்தினார்.

''நாளாகுதுன்னு பார்க்காதீங்க. நல்லதைப் பாத்தா விட்டுடாதீங்க! நீங்க எங்கே விடப் போறீங்க? நான்தான் மொதல்லே போயி ஜெய்ப்பூர்லெ படம் பிடிச்சேன். அப்புறத் தான் நீங்க 'அடிமைப் பெண்'ணுக்கு போனீங்க! நான் எடுத்த மாதிரியா எடுத்தீங்க? ஒரு சந்து பொந்து விடாம எடுத்துட்டு வந்து என்னையே அசர வெச்சுட்டீங்கள்ளே, ஜப்பானெல்லாம் போனா விட்டுடுவீங்களா? போய் வெற்றிகரமா முடிச்சுட்டு வந்துடுங்க சுவாமி'' என்றார்.

அவர் எப்போதும் என்னைக் கண்டதும் ''என்ன ஸ்வாமி! சவுக்கியமா?'' என்று கேட்பது வழக்கம். இப்படிப் பல நல்ல நண்பர்கள் வந்திருந்தார்கள்.

திரு.நாகேஷ் அவர்களும் வீட்டிற்கே (எம்.ஜி.யார் தோட்டம் என்றழைக்கப்படும் வீட்டிற்கே) வந்துவிட்டார்- நாங்கள் முன்பே பேசி முடிவெடுத்தபடி.

அவரோடு அவருடைய நெருங்கிய நண்பர் நடிகர் திரு.ஸ்ரீகாந்த் அவர்களும் வந்திருந்தார்.

திரு.ஸ்ரீகாந்த் தனியாக என்னிடம் என் கையைப் பிடித்தவாறு கண் கலங்கச் சொன்னார்:

''நாகேஷை உங்கக்கிட்டே ஒப்படைக்கிறேன். நீங்கதான் உங்க தம்பி போலப் பாத்துக்கணும்''. அவரையே சிறிது நேரம் பார்த்தேன். அவர் ஏதும் களங்கமோ, கலக்கமோ இன்றி மேலும் தொடர்ந்தார்: ''அவன் நல்ல நடிகன், ஆனா ஒண்ணும் தெரியாதவன். ஆனா நல்லவன்''.

-இதை அவர் சொல்லுவதற்குள்ளே என் மனத்தில் ஓடிய எண்ணங்கள்தான் எத்தனை! எத்தனை!! நான் வயது முதிர்ந்த பின்பும் கூட எனது தாயார், பிறரிடம் என்னைச் சிறுகுழந்தையாக எண்ணியல்லவா ஒப்படைப்பார்!

அந்த அன்புத் தாயுள்ளத்திற்கும் இந்த நண்பரின் அன்புள்ளத்திற்கும் வித்தியாசமே காண முடியவில்லையே! இதைப்பற்றி நினைத்தவாறே அவர் தொடர்வதற்கு வாய்ப்புக் கொடுக்க

விரும்பாமல், ''நீங்க கொஞ்சங்கூடக் கவலைப்படாதீங்க! நான் இருக்கேன். நான் பாத்துக்குறேன்...'' என்று சொன்னேன்.

விவரம் தெரிந்த நாலு பேருக்கு அறிவுரை கூறுமளவுக்கு அனுபவத்திலும், அதாவது வாழ்க்கையின் கடைக்கோடியிலிருந்து மெள்ள மெள்ளத் துன்பச் சுவடுகளை ஆதாரமாகக் கொண்டு, ஆனால் கொஞ்சமும் அயராது கலங்காது, கண்ணீர் வடிக்க நேர்ந்தாலும் அதைத் துடைக்கும் போதே முன்னோக்கி ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துத் தனக்கு ஆதரவு காட்டிய, ஆளாக்க உதவி செய்த நண்பர்களை எந்த நேரத்திலும் மறவாத திரு.நாகேஷுக்கே 'நான் பொறுப்பேற்கிறேன்' என்று ஒருவரிடம் சொல்ல வேண்டியிருந்தது என்றால், விவரமறியாத வயதுடைய பதினாறு வயதிலிருந்து இருபது வயது நிரம்பாத இளம் பெண்களை அவர்களின் உறவினர் யாருமின்றி, தனித்து அழைத்துச் செல்லுகின்றோமே என்று எண்ணிய போது என் உள்ளத்தில் திகிலே பற்றிக் கொண்டது. என்றாலும் என்ன செய்வது? 'எண்ணித் துணிக கருமம். துணிந்த பின் எண்ணுவமென் பதிழுக்கு'



(இ.வ.) ஒளிப்பதிவாளர் வி.ராமமூர்த்தி, இயக்குநர் ப.நீலகண்டன், மஞ்சுளா, லதா, வி.என்.ஜானகி, எம்.ஜி.ஆர்., சந்திரகலா, உரையாடல்— சொர்ணம்.

இது நினைவிற்கு வராமலா இருக்கும்?

சந்திரகலாவின் தந்தையும், மஞ்சுளா, லதா இவர்களின் தாய் மார்கள் இவர்கள் எல்லாரும், 'வேனி'ல் இடமில்லாததால் எங்க ளோடு ஒன்றாக வர இயலவில்லை.

விமான நிலையத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொள்வதாக அவர்கள் தங்கள் மகள்களிடம் சொன்னார்கள்.

புறப்பட்டோம்.

விமான நிலையத்திற்குத் திரும்பும் வீதியில் சென்ற போது தான் புரிந்தது: என் மீது பற்றும் பாசமும் கொண்ட பொது மக்களும் அன்புத் தோழர்களும் கொடிகள், தோரணங்களைக் கட்டி மாலைகளோடுக் காத்திருப்பதைக் கண்டேன்.

வண்டியில் எழுந்து நின்றோம்.

நாகேஷ், அசோகன், மூன்று பெண்கள், நான் உட்பட எல்லாருக்கும் வேறுபாடற்ற முறையில் வாழ்த்துடன் மாலை களும் தந்தனர் மக்கள்.

இப்படி நெரிசல் ஏற்படும் அளவிற்கு மக்கள் கூட்டமாக கூடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் நானே ஓர் அறிக்கை வெளியிட்டு, ''எனது தொழில் பயணத்தை விழாவாக்க வேண்டாம்'' என்று வேண்டிக் கொண்டிருந்தேன்.

என்னுடைய வேண்டுகோளையும் புறக்கணித்து நெரிசலை உண்டாக்குவார்கள் என நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?

'அன்பிற்கும் உண்டோ

அடைக்கும் தாழ்?''

என்ற கருத்துக்கு அது ஓர் எடுத்துக்காட்டுப் போல் அமைந்து விட்டிருந்தது.

நாங்கள் சென்ற 'வேனி'லிருந்து விமான நிலையத்தில் இறங்கினேன்.

கலையுலகப் பிரமுகர்களும், நண்பர் ஜெமினிகணேசன் முதலான மதிப்புக்குரியவர்களும் மாலை அணிவித்தார்கள்.



எம்.ஜிஆர்., மஞ்சுளா

அண்ணா அவர்கள் வந்திருந்து முன்பு மாலை அணிவித்த அதே விமான கூடத்தில் அண்ணாவைத் தேடினேன்.

அண்ணா இல்லை என்பது எனக்குத் தெரியாதா? நன்கு தெரியும். ஆனாலும் உள்ளத்திலிருந்த எண்ணம், 'அண்ணா வந்து என்னை வாழ்த்தி வழியனுப்ப வேண்டுமே' என்பது. நான் அந்தப் பேராசையோடு சுற்றிலும் பார்த்தேன்.

சுற்றியலைந்த கண்களுக்கு முன் அதோ வருகிறார்!

அருகில் வந்து விட்டார்!

போலீஸ் அதிகாரிகள் அவரை என் அருகில் அழைத்து வர உதவினார்கள்.

ஆமாம்.

கலைஞர் வந்தார்.

கலைஞர் மாலையை என் கழுத்தில் அணிவித்தார்.

நான் உணர்ச்சிவசப்பட்டிருந்தபோதே அவர் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். வண்டியை நேராக விமானத்திற்கு அருகில் கொண்டு செல்லும் படி,

நான் 'வேனி'ல் ஏற்றப்பட்டேன்.

வண்டி நகர்ந்தது


தூரத்தில் அண்ணன் திரு.எம்.ஜி.சி.மற்றும் பல பெரியவர் கள், அன்பர்கள், தோழர்கள் இருந்தனர். எல்லாரிடமும் சென்று என் வணக்கத்தைச் சொல்ல ஆசைப்பட்டேன். இயலவில்லை. விமானத்தின் உள்ளே சென்று அயர்ந்து உட்கார்ந்தேன்.

பெருத்த ஏமாற்றம்!

திடீரென வெளியே இருந்து போலீஸ் அதிகாரிகள் சிலர் விமானத்திற்குள் வந்தனர்.

கலைஞர் கருணாநிதி மீண்டும் என்னைத் தேடி வந்தார். மறுபடியும் என் கழுத்தில் அவரது கரம் மாலையைச் சூட்டிற்று. என்னை ஆரத் தழுவினார்.

நான் புறப்படுவதைப் பற்றி அவரிடம் பேசியதுண்டு. ஆனால் குறிப்பிட்ட தேதியில் நான் புறப்பட இருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லவே இல்லை. முன்பு பேரறிஞரிடமும்



எம்.ஜிஆர்., அசோகன்

இப்படித்தான் செய்தேன்; அவரும் வந்தார். இப்போது இவரும் வந்தார்.

இவர் ஒருபடி மேலே சென்று, விமானத்திற்குள்ளேயே வந்து, இரண்டாவது முறையும் மாலை அணிவித்து எனக்கு வாழ்த்துக்கூறினார்.

நான் சுமார் ஏழு வயதுப் பையனாக இருக்கும்போது, என் தாயிடமிருந்து முதன் முதலாகப் பிரிந்து, நாடகக் கம்பெனியில் சேருவதற்காகப் புறப்பட்ட நாளன்று, வாயிற்படி வரை நாங்கள் (நானும் என் சகோதரரும்) வருவதும், உடனே ஓடிக் கூடத்தில் அழுதபடி உட்கார்ந்திருந்த தாயைக் கட்டி அணைத்து அழுவதும், எங் களைப் பெரியவர்கள் ஆறுதல் கூறி அழைத்துச் செல்வதும், வாயிற்படியைத் தாண்டும்போது மீண்டும் ஓடித் தாயை கட்டிக் கொண்டு ஓவெனக் கதறியழுவதுமாயிருந்த அந்தக் காட்சியினை இது இப்போது நினைவுறுத்தியது.

மனதிலிருந்த பெரும் பாரம் இறக்கி வைக்கப்பட்டது போன்ற உணர்வு.

ஒரு பெரு மூச்சு...

அது எத்தனை பேர் என்னைக் கவனிக்குமாறு செய்து விட்டது!



2

என்னைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த நான் என்னைச் சுற்றி இருந்தவர்களை ஒருமுறை கவனத்தோடு பார்த்தேன். பெரிய காரணம் எதையும் உடனே கூற முடியாத நிலைதான் எனினும், மற்ற எல்லோரும் என்னைப் போலத்தானிருக்கிறார்களா, அல்லது தெளிவாகக் குழப்பமின்றி இருக்கிறார்களா எனத் தெரிந்து கொள்ளத்தான் என்றால் ஒருவாறு பொருந்தலாம். அவர்களின் முகங்களை நோக்கினேன்.

டைரக்டர் திரு.நீலகண்டன் அவர்கள் எங்கேயோ கவனத்தைப் பகிர்ந்து, தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிக் கூடச் சிந்திக்க முடியாத நிலையில் இருந்தார் என்பதை அறிந்தேன். அவர் எப்போதும் எந்தச் சிறு காரிய மாயினும் அதைப் பற்றி விரிவாகப் பலப்பல கேள்விகளைத் தனக்குள் கேட்டுக் கொண்டு, பதில் பெற முயன்று, ஓரளவா வது வெற்றி பெற்றதாக நம்பிய பிறகுதான் அந்தக் காரியத்தில் செயல்பட முனைவார்! இந்த வெளி நாட்டுப் பயணத்திலும் அவர் அப்படித்தானிருந்திருப்பார் என்று நான் நம்ப இட மிருப்பினும், அவர் தனக்குள் என்னென்ன கேட்டுக் கொண்



எம்.ஜிஆர்., சந்திரகலா

டிருந்திருப்பார் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. அந்த நிலையில், சிறிய புன்சிரிப்போடு அவரை மீண்டும் நன்கு பார்த்தேன்.

அவரிடம் 'உலகம் சுற்றும் வாலிபன்' கதையின் ஆரம்பத்தைச் சொல்லி இருந்தேன். அதாவது ராஜ் என்கிற விஞ்ஞானி ஒருவன், தான் கண்டுபிடித்திருந்த புதிய விஞ்ஞான யுக்தியை தன்னைப் போன்ற சிறந்த விஞ்ஞானிகளின் மத்தியில் செயற்படுத்திக் காண்பிக்கிறான். உலகத்தின் நல்வாழ்வுக்காக புதிய விஞ்ஞான சாதனையை உருவாக்க முயன்ற அந்த இளம் விஞ்ஞானி, தனது உழைப்பின் விளைவாக உருவான புதிய சாதனை உலகத்தை அழிக்கும் அழிவுச் சக்தியாக மலர்ந்ததை மற்றவர்கட்குச் செயற்படுத்திக் காண்பிக்கிறான். இந்த அழிவுச் சக்தி தப்பான கருத்துகளை கொண்ட எந்த நாட்டினிடமாவது கிடைத்து விட்டால் அவர்கள் அதை மற்ற நாட்டை அடிமைப் படுத்த, அல்லது அழிக்கப் பயன்படுத்துவார்கள் என்ற காரணத்தினால் அந்த ஆராய்ச்சிக் குறிப்புகளையெல்லாம் அந்த விஞ்ஞானிகளின் கண்ணெதிரிலேயே தீயிட்டு அழித்துவிடுகிறான்.

ஆனால் மற்ற விஞ்ஞானிகளுக்கிடையில் இருந்த ஒரு விஞ்ஞானி, இந்தக் கூற்றினை (ஆராய்ச்சிக் குறிப்புகளை அழித்ததை) நம்புவதில்லை. இதன் நகல் எங்காவது இருந்து தீரும் என்ற எண்ணத்தில், முன்னவனைத் தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்து விட்டு, அவன் செத்து விட்டதாக உலகத்தை நம்பச் செய்து விடுகிறான்.

இளம் விஞ்ஞானியின் தம்பி இதை நம்பாமல் அண்ணனை தேடிப் புறப்படுகிறான். ஆராய்ச்சிக் குறிப்புக்களை பல நாடுகளில் உள்ள பலரிடத்தில் பிரித்துக் கொடுத்திருப்பதாக அறிந்து, அந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை, அவன் முதலில் கைப்பற்ற முனைகிறான்...

இவ்வளவுதான் நான் இயக்குநருக்குச் சொல்லியிருந்தது. அதுவும் குறிப்பாகத்தான்; இவ்வளவு விளக்கமாகக் கூட அல்ல!

நான் என்ன எடுக்கப் போகிறேன். எப்படிப்பட்ட காட்சிகளை உருவாக்க இவ்விதப் பெரிய பயணத்தைத் துவங்கி இருக்கிறேன், இந்த விவரம் எல்லாம் அப்போது அவரிடமில்லை.

ஆகவே அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்ததற்குக் காரணம்- இத்தனை பேருடன் புறப்பட்டுச் செல்லுகிறோமே, பிறர் நம்மைக் கேலி செய்யாத அளவுக்காவது ஏதாவது காரியம் ஆற்றி விட்டு வர வேண்டும்' என்ற அச்சம்தான் என்பது உண்மையாகத்தானிருக்கும்!

**நியாயமாக வாழ விரும்புகிறவர்களைச் சேர்த்து வைத்துப் பாதுகாப்புத் தரத்தான் சட்டம், சம்பிரதாயம் எல்லாம்.** ஆனால், இந்த முறை நான் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டபோது என் மனைவியை என்னோடு (கம்பெனியின் நண்பர்களோடு) சேர்த்து ஒருத்தியாக அழைத்துச் செல்ல இயலவில்லை!

அவள் தனது பணத்தில் வெளிநாடு வந்தாள்.

இங்கு சட்டம் எங்களைக் கொஞ்சம் பிரித்தே வைத்து வேடிக்கைப் பார்த்தது!

அமர்ந்திருந்த சந்திரகலா, மஞ்சுளா, லதா இவர்களையும் கவனித்தேன். ஒருவர் கூடச் சிரித்தபடி இல்லை. மூவரும் சிறு வயதுப் பெண்கள், தாய் தந்தையோ, சொந்தக்காரரோ யாருமின்றி, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் சென்று விட்டுத் திரும்ப வேண்டியிருப்பதையும், அதிலும் ஒரு மாதத்திற்கும் மேலாக பல ஊர்களில் மாறுபட்ட சூழ்நிலையில் தொழில் செய்ய வேண்டிய அவசியத்தையும் நினைத்து, அந்த இளம் உள்ளங்கள் அச்சப் படுவதோ, கலக்கமடைவதோ இயற்கைதானே?

முன்பு சிறு பையனாக இருந்த போது பர்மா சென்று அனுபவப்பட்ட நான், அந்த நாட்களைப் பற்றி இப்போது எண்ணிப் பார்க்காமலா இருப்பேன்?

என் தமையனாரும் அப்போது உடன் இருந்தார். திரு.எம்.கே.ராதா அண்ணன் அவர்கள், பி.யு.சின்னப்பா அண்ணன், பி.ஜி.வெங்கடேச அண்ணன் முதலிய பலர் என்னோடு சிறு வயது முதல் ஒரே நாடகக் கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தவர்கள். இவர்களும் இன்னும் தெரிந்த பலரும் எங்களோடு பர்மாவுக்கு வந்தார்கள் என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி இருந்தும் நாங்கள் எங்கள் அன்னையை விட்டுப் பிரிய, பட்டபாடும் அழுத அழுகையும் அப்பப்பா... எழுத்தில் விவரிக்க இயலாது!

''கடல் தாண்டிப் போறீங்களே, ஏதாவது ஆயிட்டா நான் என்னடா செய்வேன்?'' என்று என் தாயார் சொல்லி அழுதது, இதை எழுதும் இந்த நேரத்தில் கூட நேரில் நிகழ்வது போல் இருக்கிறது.

அன்று. பி.ஜி. வெங்கடேசன் என்பவர் நன்றாகப் பாடியும், பெண் வேடத்தில் பிறர் ஏமாறும் அளவிற்கு நடித்தும், 'இவர் பெண்தான்' என்று சிலரும் 'இல்லை! ஆண்தான்' என்று வேறு சிலரும் பந்தயம் கட்டி, தங்களது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் நிலையை ஏற்படுத்துபவர். அப்படிப்பட்ட அவரே வெளிநாடு போகும் போது அழுதாரே, இந்த இளம் பெண்கள் அழுதால், அச்சப்பட்டால் எப்படி அது தவறாக இருக்க முடியும்?

என் தமையனார் அநேகமாக விமானத் தில் பயணம் செய்வ தில்லை. ஒருநாள் என்ன காரணம் என்று அவரி டம் கேட்டேன்.

அவர் வேடிக்கை யாகச் சொன்னார்: ''கப்பல்லே போறோம், ஏதாவது இஞ்சின் கோளாறுன்னா கப்பலை சில மணிநேரங்கள் கடலிலேயே நிறுத்திப் பழுது பார்க்கலாம். கார்ல போறோம். எங்கேயாவது கோளாறுன்னா வண்டியை வீதி ஓரமா நிறுத்தி, சரி பார்த்துப் புறப்படலாம்.

விமான யந்திரத்திலே கோளாறுன்னா விமானத்தை எங்கே நிறுத்திப் பழுது பார்ப்பது? அது எங்கே போய்ச் சேருதோ அங்கே போன பிறகுதான் ரிப்பேர் பார்க்கணும். அதுக்குள்ளாறத்தான்

அதை ஓட்ற ஆளிலிருந்து, உட்கார்ந்திருக்கும் நாம எல்லோருமே பழுது பார்க்கப்பட வேண்டியவங்களாயிடுவோமே! அப்புறம் என்ன ஆனா என்ன?...''

இப்படிப் பேசுவார் என் தமையனார். அவர் வேடிக்கையாகச் சொல்லியிருந்தாலும், அந்தப் பெண்களைப் பெற்ற தாயுள்ளம் இதையெல்லாம் கற்பனை செய்யாமலா இருந்திருக்கும்? இருந்தும் இந்த இளஞ்சிட்டுகளை 'எம்ஜியார் பிக்சர்ஸ்' என்ற கூண்டிலே அடைத்து, கலை என்ற நல்ல இனிய பழங்களை தீனியாகவும், புகழ் என்ற நன்னீரை உழைப்பினால் ஏற்படும் தாகவிடாயைத் தீர்க்கவும் வைத்து, வருவாய் ஆசை சிறகடித்துப் பார்க்க அந்தக் கூண்டிற்குள்ளேயே அங்குமிங்கும் பறந்து கம்பிகளில் மோதி, இப்போது இவ்வளவுதான் என்று கட்டுப்பாடு விதித்திருப்பதை எண்ணி, வேறு வழியின்றி தம்மைத்தாமே சமாதானப்படுத்தி, திருப்தி செய்துகொள்ளும் நிலைக்கு ஆளாக்கப்பட்ட இந்தக் குஞ்சுகள் அடங்கிய



சந்திரகலா, எம்.ஜி.ஆர்., சொர்ணம், ப.நீலகண்டன்.

கூண்டைப் பூட்டி, எனது கையில் தரப்பட்டிருந்த நிலையில் இருந்தேன் நான். நானோ முன் பின் தெரியாதவன். எனது குணம், தன்மை, செயல் எதுவுமே தெரியாதவர்கள் அவர்கள்.

அந்தக் குஞ்சுகளை அப்படியே அழித்துவிடலாம்; அல்லது தீனி போட்டுப் பாதுகாப்பாக வளர்க்கலாம்.

இத்தகைய அச்ச முறுத்தும் ஒருவனாக நான் இருந்தபோது தான்...

அந்தோ பாவம்! அவைகள் என்னதான் செய்யும்? ஏக்கத் தோடும், அதே நேரத்தில் தனது ஏற்றமிகு வாழ்வின் எதிர்காலக் கற்பனையிலும், உறவினர்களைப் பிரிந்தும், பிரிவால் வாடியும், தெரியாதவர்களின் நாணயத்தை நம்பி எங்கோ போகிறோமே என்ற வேதனையில் துவண்டும், அவைகள் சோர்வடைந்தால் அது இயற்கைதானே?

சில படங்களில் நடித்தும், பரத நாட்டியம், குச்சுப்பிடி போன்ற நாட்டியக் கலைகளில் நல்ல தேர்ச்சியும், கல்லூரியில் இரு ஆண்டு பி.ஏ.வகுப்பில் படித்தும் இருந்த சந்திரகலா, இம்மூவரில் கொஞ்சம் விவரம் தெரிந்தவர். அவ்வளவுதான்!

யாரிடமும் அவர் அதிகமாகப் பேசுவதே இல்லை. அவ சியமிருந்தால், யாராவது கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால்தான் இவரிடமிருந்து பதில் கிடைக்கும். தனக்கு என்னென்ன தெரியும் என்று அவரே வலிய யாரிடமும் சொல்லுவது கிடையாது.

அடுத்தது மஞ்சுளா.

அவரை நான் ஒப்பந்தம் செய்தது திரு.கே.எஸ்.கோபால கிருஷ்ணன் அவர்கள் மஞ்சுளாவை நடிக்க வைத்து எடுத்திருந்த காட்சியை எனக்குக் காண்பித்த பின்தான். திரு.கே.எஸ். கோபால கிருஷ்ணன் அவர்களிடம் தயாரான மஞ்சுளா, இப்போது நல்ல தொரு பிரபல கதாநாயகியாக ஆகியிருக்கிறார்.

மஞ்சுளா அவர்கள் எப்போதும் யார் பேசினாலும் வாய் விட்டுச் சிரித்து விடுவார்.

'சாந்தி நிலையம்' என்ற படத்தில் நடித்து முன்னமேயே

படப்பிடிப்பின் வழி முறைகளைத் தெரிந்தவர். திரு.கே.எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் ஒரு சில மாதங்கள் பணி யாற்றியும் படப்பிடிப்பின் தன்மைகளைச் சிறிதாவது உணர்ந் தவர். அப்படிப்பட்ட குணம் படைத்த மஞ்சுளா கூட, எந்த மகிழ்ச்சியுமின்றி யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

அடுத்தது லதா. நான் ஏழு வயதில் நாடகக் கம்பெனியில் சேரும்போது, நாடகக் கம்பெனி நடிகர்களின் மனோபாவம், தகுதி, வயது இவைகளுக்கேற்ப எப்படிப் பிறரிடம் பழகுவது என்பதையெல்லாம் கிஞ்சித்தும் அறியாதிருந்தேனோ, புதிய தொரு உலகத்தில் நுழைந்தது போன்ற பிரமையில் இருந்தேனோ, அதே நிலையில்தான் லதா இருந்தார். அவர் கண்டது நடன ஆசிரியர் சோப்ரா, சரோஜா போன்ற ஓரிரு வரைத் தான். சினிமா உலக சம்பந்தப்பட்ட மட்டில் நெருங்கிப் பழ கும் வாய்ப்பை லதா பெற்றிருப்பாரோ என்று கூட ஐயுறுகிறேன். அவர் நல்ல சிவப்பு நிறமாகையால் அவர் வெளியே காட்டிக் கொள்ளாமல் அழுகிறார் என்பதை, அவருடைய மூக்கு நுனியின் இரண்டு பக்கங்களும் சிவந்திருந்தது நன்கு எடுத்துக் காட்டிற்று.

இத்தகைய அப்பாவிச் சிறுமிகளைத்தான் நான் அவர்களின் பெற்றோரிடம் திரும்பக் கொண்டு வந்து ஒப்படைக்கும் மிகப்பெரிய பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

எனக்கும் நான் செல்லும் ஊர்களைப் பற்றியோ சரிவரத் தெரியாது! மொழிகளைப் பற்றிக் கேட்பீர்களானால் அதைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது! கலாசாரத்தைப் பற்றியாவது தெரியுமா என்பீர்களானால், அதுவும் என் வரையில் எனக்கு முட்டாள் பட்டத்தைக் கட்டுவதற்காகவே கேட்கப்படும் கேள்வியாக இருக்கும்!

இத்தகைய மிகப்பெரிய தகுதி வாய்ந்த நான்தான் இவர் களையெல்லாம் வழி நடத்திச் செல்ல வேண்டியவன்! இந்த எண்ணத்தோடு, ஒரு பெருமூச்சோடு மறு பக்கம் திரும்பினேன். உரையாடலை எழுதும் திரு. சொர்ணத்தைப் பார்த்தேன். அவர் என்னைப் பார்த்ததும் ஏதோ யோசனையில் இருந்தவர், அவசர



எம்.ஜிஆர்., மஞ்சுளா

மாக என்னிடம் ''கதைக் குறிப்பை எடுத்துக் கொண்டு அங்கே வரட்டுமா?'' என்று கேட்டார்.

சிறிது நேரம் ஆச்சர்யத்தோடு அவரையே பார்த்தக் கொண்டிருந்தேன்.

என்னோடு வெளிநாடு புறப்பட்ட மற்ற ஆண்களை விட, இவர் சிறிது அதிகமாக வேதனைப்பட்டாலோ, கவலைப் பட்டாலோ அதற்கு நியாயமான பல காரணங்கள் உண்டு. வயதான தாயை - இவர் மீது அதிக வாஞ்சையும், எப்போதும் தன் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்ற பேரார்வமும் ஓரளவுக்கு உடல் நலமின்மையும் உடைய அந்தத் தாயைப் பிரிவது ஒன்றே போதும் இந்த சொர்ணத்திற்கு சஞ்சலம் ஏற்படுவதற்கு. இவரே ஒரு உணர்ச்சிப் படைப்பாவார். மகிழ்ச்சி யாயினும், துன்பமாயினும் அதை அளவோடு தாங்கிக் கொள்ளவே முடியாதவர்.

மிகச்சிறிய விஷயங்களைக் கூடப் பெரு மகிழ்ச்சியோடு ரசிக்கும் இனிய பண்பினர்.

பீடி, சிகரெட் போன்றவைகளைப் பிடிக்கும் பழக்கமே இல்லாதவர். இவைகளே இல்லை என்றால், மதுவை அருந்த மாட்டார் என்பதைச் சொல்லித்தானா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்? அவர் அப்படி கதையைப் பற்றி கேட்டதிலிருந்தே, அவர் தனது பொறுப்பினை எவ்வளவு ஆழமாக உணர்ந்திருக்கிறார் என்பதை அறிந்தேன். எனக்கு, நான் சொல்லும் ஊர்களைப் பற்றித் தெரிந்தாலென்ன தெரியா விட்டாலென்ன?

இத்தகைய ஆர்வமும், தனது பொறுப்பைச் சரிவரச் செய்து வெற்றி பெற வேண்டுமென்ற அக்கறையும் உள்ளவர்கள் என்னைச் சுற்றி இருக்கும்போது, எனது பயணம் வெற்றி பெறத்தானே வேண்டும்!

வெற்றி என்பது ஒருவருக்குக் கிடைக்கிறதென்றால் அது எப்படி? ஒரு பயில்வான் தன்னையொத்த இன்னொரு பயில்வானுடன் சண்டை செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இருவரும் ஒவ்வொரு வகையில் திறமை கொண்டவர்

களான காரணத்தால்தான், அவர்களின் சண்டையைப் பார்க்க மக்கள் ஆயிரக்கணக்காகக் கூடுகிறார்கள். இருந்தும் யாராவ தொருவர் வெற்றி பெற்று விடுகிறார் என்றால், இன்னொருவர் தோற்றார் என்பதுதான் காரணம் என்று சுலபமாகப் பேசி விடுகிறோம். உண்மை அதுதானா? மேலே குறிப்பிடப்பட்ட இருவரும் வலியும், மல்யுத்த நுணுக்கத் திறமையும் பெற்றவர் களாயிருந்தும், சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தத் தவறி விட்டதால்தான் தோல்வி அடைந்தார் ஒருவர் என்று நான் திட்டவட்டமாகச் சொல்லுவேன். வெளியூர் சென்று படமெடுக்கும் எனக்கு எந்த வகையில் வெற்றி பெறுவது? யாரிடம் வெற்றி பெறுவது?

வெளிநாட்டில் எனக்குக் கிடைக்க வேண்டிய வசதிதான் என்னிடம் போட்டியிட இருக்கும் எதிரியாகும். இந்த வசதி என்று குறிப்பிடப்படுவதில் இயற்கையும் ஒன்றாகும். இயற் கையை மனிதன் வெற்றி கொண்டான் என்று சொன்னாலும், அவன் மரணம் அடைந்தான் என்று சொல்லப்பட்டதும் அந்தோ! அந்த மனிதன் முடிவாக இயற்கையின் முன் மிகப் பெரிய தோல்வி அடைந்து விட்டான் என்பதைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோமே... எனக்கு மட்டும் அந்த இயற்கை சோதனைகளைத் தராமலிருக்குமா? ஆனால் அதே இயற்கை இதுவரையில் என்னை அபாயத்தின் எல்லை வரையில்தான் அழைத்துச் செல்ல விரும்பியதே தவிர, எனக்கு முடிவைத் தர இதுவரை அது விரும்பவில்லையென்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க உண்மையல்லவா?

எனினும் நான் வெளி நாட்டுக்குப் பயணம் புறப்படும் நிலையில் விமானத்தில் அமர்ந்து என்னையும் பிறரையும் கணக்கிட்டுக் கொண்டிருந்த போது, எங்கள் அத்தனை பேரையும் ஒரே ஒரு மனிதர் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார் என்பதையும் எப்படியோ கவனித்து விட்டேன். அவர்தான் எனது அன்புச் சோதரர் திரு.ஆர்.எம்.வீரப்பன் ஆவார்.

அவருடைய செயல் ஒரு கணக்கிற்குள், கட்டுக்குள் அடங்கியே செயல்படும்.

அவர் ஒரு அதிசய மனிதராவார். அவர் யாருக்கும் வலிய யோசனை சொல்ல மாட்டார்.

அப்படி யாராவது தேவைப்பட்டு கேட்டால், கேட்டவர்களின் விருப்பு வெறுப்பைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தனக்குச் சரி என்று பட்டதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லி விடுவார்.

தான் சொல்லும் கருத்தின் மூலம், கேட்பவர் உணர்ச்சி வயப்படும் நிலையினை உண்டாக்கவே மாட்டார்.

தனக்கு என்ன பலன் கிடைக்கும் என்று எண்ணி எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். அவர் உண்மையிலேயே மதித்தாரானால், அந்த நண்பர் இவரை விரோதியாகக் கருதினாலும் கூட, இவர் தான் செய்ய வேண்டிய கடமையை அந்த நண்பருக்காகச் செய்யாமல் இருக்கவே மாட்டார்!

இப்படிப்பட்ட ஆர்.எம்.வீரப்பன் என்பவர்தான் எனக்கு யோசனை கூறித் துணை செய்யும் முழுப் பொறுப்பினையும் ஏற்று உடன் வந்தவராவார்.

நானும் பங்குதாரனாக உள்ள எம்ஜியார் பிக்சர்சில் இப்போதும் அவர் மாதச் சம்பளம் வாங்கி நிர்வாகியாக இருக்கிறார். அவர் சொந்தத்தில் 'சத்யா மூவிஸ்' என்ற படக் கம்பெனியைத் துவக்கி, என்னை நடிக்கச் செய்து, லட்சக் கணக்கில், எனக்குச் சம்பளமும் கொடுக்கிறார். அவர் ஒரு சுதந்திரப் பறவையாக இருக்கும் வாய்ப்பினைப் பெற்றவர்.


இருந்தும் அவருக்குத் தேவைப்படும்போது, பறந்து வெளியே சென்று தனது எண்ணப்படி தொழில் செய்பவர். தொழில் செய்யும் போதும், ஓய்ந்து வீடு திரும்பும் போதும் கூடத் தானிருந்த கூண்டைப் பற்றிய நினைவை மறக்காதவர்.

அவர் 'சத்யா மூவிஸ்' படக் கம்பெனியில் முதலாளி. ஆமாம், நான் பார்த்த, நேரில் அனுபவித்த ஒரு சில 'தொழிலாளி முதலாளி'களில் திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்களும் 'தொழிலாளி முதலாளி' ஆவார். அதாவது முதலை ஆளும் தொழிலாளி ஆவார்!

இதை எனக்கு உணர்த்தியவர்களில் குறிப்பாக நால்வரின் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டிய வனாவேன். ஒருவர் திரு.ஸ்ரீராமுலு நாயுடு, அடுத்தவர் திரு. எஸ்.எஸ். வாசன், மற்ற இருவர்கள் திரு.சாண்டோ எம்.எம்.ஏ.சின்னப்பத் தேவர், திரு.டி.ஆர்.ராமண்ணா ஆவார் கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள்.

நான் 'மலைக்கள்ளன்' படத்தில் நடித்துக் கொண்டிருந்த நேரம். படம் முடிகின்ற வேளை. ஏறத்தாழ சுமார் மூன்று நாட்களுக்கு மேல் இரவு பகலாக நடித்துக் கொண்டிருந்தோம்.

மூன்றாவது நாள் இரவு இரண்டு மணி இருக்கும். ஒரே சமயத்தில் தெலுங்கு மொழியிலும் 'மலைக்கள்ள'னைப் படமாக்கிக் கொண்டிருந்ததால் எனது அன்புக்குரிய சோதரர் திரு.என்.டி.ராமாராவ் அவர்களும் சகோதரி பானுமதி அவர்களும் நடித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அனைவரும் சோர்ந்துவிட்டோம். திரு.ஸ்ரீராமுலு நாயுடு அவர்களுக்கோ சுமார் நூற்றிரண்டு டிகிரிக்கு மேல் காய்ச்சல்...



படகு சவாரியில் எம்.ஜி.ஆர். சந்திரகலா

அவர்தான் அந்தப் படத்தின் டைரக்டர். ஒவ்வொரு படப்பிடிப்பு நிலையமாகக் காட்சி சோடனைகளை அமைத்து, மாறி மாறி படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருந்தார். எங்களுடைய சோர்ந்து போன பரிதாபமான நிலையைக் கண்ட அந்த நல்ல மனிதர், தனது உடல் நிலையைப் பற்றிச் சிறிது கூடக் கவலைப்படாமல், ''நீங்கள்ளாம் கொஞ்சம் ஓய்வெடுத்துக் குங்க. (வெளிச்சம் போட்டது சரியாக இருக்கிறதா என்று ஒளி அமைப்பாளர் தெரிந்து கொள்ள) நானே ஒத்திகையில் நடிக்கிறேன்'' என்றாரானால், அவருடைய உழைக்கும் தன்மையை எப்படி மதிக்காமலோ, பாராட்டாமலோ இருப்பது?

பணம் சம்பாதிக்கத்தானே என்பார்களானால், யார்தான் பணம் சம்பாதிக்காமல் பணத்தைப் பெறாமல் தொழில் செய்கிறார்கள்?

நான் வெளிநாடு புறப்படுகின்றேனே, இந்தப் படம் வெற்றி பெற்றால் எனக்குப் பணம் வராதா? நான் பணம் சம்பாதிப்பதற்காக இத்தனை நல்லவர்கள் ஆயிரமாயிரமாக விமான நிலையத்திற்கு வந்து, என்னை எதற்காக மாலைகள் அணிவித்து வாழ்த்திப் பாராட்டி வழி அனுப்ப வேண்டும்?

**என்னுடைய வெற்றியில் நானடையும் பலன் இந்தத் தமிழ் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கோ; மன மகிழ்வுக்கோ பயன் தருமானால் அது எந்த அளவிருக்கும் என்று அடிக்கோல் வைத்துக் கணக்குப் பார்த்து மதிப்பிடக் கூடாது.** அவரவர்கள் எந்த அளவுக்குப் பலனைத் தரத் தகுதி பெற்றவர்களோ அதற்கேற்பத்தான் பலனின் பரிணாமமும் இருக்கும்.

இன்று என்னுடைய புகழை மனமுவந்து உயர்த்தும் தமிழக மக்களுக்கு நான் ஏதாவது சேவை செய்யும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேனென்றால் அதற்கு முக்கியமானவர்களில், குறிப்பிடத்தக்க இடத்தில் நின்று கொண்டிருப்பவர் திரு.ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் ஆவார்கள்.

அந்த 'மலைக்கள்ளன்' படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்பு கிட்டாதிருந்தால், எனது சினிமா வாழ்க்கையென்னும் கப்பல்

தரை தட்டியோ, பாறைகளில் மோதியோ விபத்துக்குள்ளாகிய நிலையை அடைந்திருக்கும். மறுமலர்ச்சிக்கு எனது உழைப்பு, ஒருவேளை திறமை முதலியவைகள்தான் காரணம் என்று வாதிப்பவர்கள் இருந்தாலும் அதை வெளிக்காட்ட அரியதொரு வாய்ப்பினைத் தந்தவர் திரு.ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள்தாம் என்பதை எப்படி மறக்க முடியும்?

இதைப்போலத்தான் 'ஒவ்வொருவரும் தனக்காக உழைத்தாலும், அதன் பலனைத் தான் அடையும் நேரத்திலேயே வேறு ஒரு சிலரின் வாழ்க்கை யிலாவது சிறிதளவு மகிழ்ச்சியை, மன நிறைவை, மறு மலர்ச்சியை ஏற்படுத்து வதாக அமைத்தாக வேண்டும்' என்று பேரறி ஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் போலும்! எனது தாயார் சொல்லுவார்கள்- யாராவது எதிரிகள் பிறருக்கு ஆபத்தை யுண்டாக்க குழி தோண்டுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

''குழியைப் பறிக்க மண்வெட்டி கொண்டு வெட்டும் போது மண் வெட்டியைத் தன் பக்கமாகத்தான் தரையிலே வெட்டுகிறார்கள். அதாவது பிறரை அழிக்க நினைக்கும் மனிதன், தன்னை நோக்கி எச்சரிக்கை செய்யும் விதத்தில் அமையும் அந்தச் செயலை, நினைவு கூர்ந்து சிந்தித்து திருந்துதற்கு அந்தச் செயல் உதவட்டும் என்பதற்காகத் தான்'' என்பார்கள்.



நாகேஷ், எம்.ஜி.ஆர்.

ஒருவர் மற்றொருவருக்குக் குழி தோண்டும் போதே, இவருக்கு மற்றொருவர் குழி தோண்டக் காத்திருப்பார் என்பதை

எடுத்துக்காட்டும் நிலையில்தான், மண்வெட்டி, வெட்டு பவரின் காலை நோக்கி வந்து தன் செய்கையை நிகழ்த்துகிறது'' என்ற கருத்தையே என் தாயார் குறிப்பிடுவார்கள்.

பிறருக்கு விபத்தை ஏற்படுத்துபவர்களே இவ்வளவு எச்சரிக்கை தரும் வாய்ப்பைப் பெறு வதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதை உணரும் நாம், பிறரை வாழ வைக்கும் எண்ணத்தைப் பெறும் நோக்கத்தில் எவ்வளவு சிந்தித்தாக வேண்டும்! 'பிறரை வாழ வைப்பது நல்ல காரியந்தானே? அதற்குமா சிந்திக்க வேண்டும்?' என்று கேட்கக்கூடும். ஒரு நல்லவரை வாழவைக்கும் எண்ணத்தில், நாம் அவருக்கு நன்மை செய்யும் அதே நேரத்தில், அக்காரியத்தால் வேறொரு நல்லவருக்குப் பாதகம் ஏற்பட்டுவிடலாம். அதனால்தான் 'சிந்தித்தே ஆக வேண்டும்' என்று வலியுறுத்திச் சொன்னேன்.

நமது சின்னப்பா தேவரையே எடுத்துக் கொள்வோமே! எத்தனை கோயில்களில் கல்யாண மண்டபங்கள், விளக்குகள், வீதிகள், பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எதற்காக? விளம்பரம் பெறுவதற்காகவா? இனி விளம்பரம் பெற செயல்பட்டால் சேர்க்க இருக்கின்ற பணத்திற்குத்தான் செலவே தவிர, வர இருக்கின்ற பணம் குறைந்து விடப்போவதில்லை. அல்லும் பகலும் அவர் ஓடியாடி வேலை செய்வதைப் பார்த்து ''இவருக்கு ஏன் இந்தத் தலைவிதி? நிம்மதியாக வீட்டில் இருந்து சாப்பிட்டு, மகிழ்ச்சியாக வாழக் கூடாதா?'' என்போர் விவரம் தெரியாதவர்கள், உழைப்பினால் மனத்திற்கு ஏற்படும் மன நிறைவை, மகிழ்ச்சிப் பெருக்கை உணராதவர்கள், அறியா தவர்கள், ஆனால் திரு.சின்னப்பா தேவர் அவர்கட்கு இதைப் பற்றிச் சிறிதும் கவலையே கிடையாது.

அவருக்கு அவர் உழைப்புண்டு; அவர் நம்பும் முருக னுண்டு. அவர் செய்ய விரும்பும் கடவுள் தொண்டுண்டு. அதன் விளைவாக பல லட்சக்கணக்கான மக்களின் மனத்திற்கு நிம்மதியை ஏற்படுத்த மனப்பூர்வமாக உழைக்கிறார். இவர்

இன்னும் பல்லாண்டுகள் உழைத்துக் கொண்டுதானிருப்பார். இப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து பழகும் நான் மட்டும் எப்படி உழைப்பதிலிருந்து விலக முடியும்?

என் ஒருவனுடைய உள்ளத்தில் தோன்றும் கற்பனையை, ஆசையை நிறைவேற்ற எத்தனை பேர்களின் ஆசி, ஆதரவு, உழைப்பு தேவைப்படுகிறது? எந்த ஒரு தனிமனிதனும், தான் ஒருவனாக நின்று எதையும் சாதித்து விட இயலாதே...

அப்படியிருக்க நான் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

என்னுடைய வெளிநாட்டுப் பயண வெற்றிக்குக் கோடிக் கணக்கான தமிழ் மக்களின் நல்லாசியும் ஆதரவும் இருப்பினும், என்னோடு தொழில் செய்ய வருகிறவர்களின் நல்லெண்ணமும் திறமையும் இன்றியமையாத ஒன்றல்லவா? வெவ்வேறு அரசியல் நம்பிக்கை, மத நம்பிக்கை, ஏன்? உணவிலே கூட வேறுபட்ட பழக்கங்கள், ஓரளவு சினிமாத் தொழில் எல்லாம் தெரிந்தவர்கள், ஏதுமே அறியாதவர்கள் இப்படிப்பட்ட எத்தனையோ மாறுபட்ட ஒரு கலைக்குடும்பத்தையல்லவா அழைத்துக் கொண்டு எனக்குப் புரியாத தெரியாத புதிய நாடுகளை நோக்கிப் புறப்படுகிறேன்!



3

வாழ்க்கைப் பயணம் மகிழ்ச்சிப் பயணமாக அமையத்தான் எல்லோரும் ஆசைப்படுவோம். இதை நினைக்கும் போதே நமக்கு நன்கு தெரியும். 'இந்த ஆசை தவறு... எங்கேயாவது எப்போதாவது இதற்கு இடையூறு ஏற்படத்தான் செய்யும்' என்று.

ஆனாலும் நாம், நமது ஆசைகளை நிராசையாக்கிக் கொள்ளும் எந்த நிகழ்ச்சியும் நமக்குத் தடைக்கல்லாக வராது என்று ஒரு நம்பிக்கையையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளு கிறோம். இந்த நம்பிக்கை ஒன்றுதான் நம் ஆசைத் திட்டங்களை 'அற்பாயுளாக'ச் செய்துவிடாமல் கொஞ்ச தூரமாவது இழுத்துச் செல்கிறது.

ஆமாம்; இழுத்துக் கொண்டுதான் செல்லுகிறது!

**ஆசை, நம்பிக்கை இந்த இரண்டுமுள்ள தொடர்பும் உறவும்தான் எத்தனை வலிமை பொருந்தியது தெரியுமா?**

**எத்தனை எமன்கள் வந்தாலும், மனித எதிரிகளே வந்தாலும், தோல்விகள் தொடர்ந்து வந்தாலும், இந்த இரண்டும் பிரிவதோ, இவைகளைப் பிரிக்க முயலுவதோ இயலாத காரியம்.**



எக்ஸ்போவில் எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

சில சமயம் தன்னைப் பற்றிப் போட்டுக் கொள்ளும் தவறான கணக்கினால் ஒரு மனிதன் தோல்வி கண்டு விடுவதும் உண்டு.

ஆனால் என்னைப் பொறுத்த வரையில் எனக்கு ஏற்பட்ட தோல்விகள் அனைத்தும் நான் போட்டுக் கொண்ட தவறான கணக்கினால்தான் என்பதை எப்போதும் மறுத்ததே கிடையாது. **என்னுடைய வெற்றிகள் என்று எவையேனும் இருந்திருக்கு மாயின், அதற்கு எனது தோல்வியினால் நான் தெளிவு பெற உதவிய, நியாயமான முடிவுதான் காரணம் என்பதைத் துணிவோடு, ஆதாரத்தோடு என்னால் கூற முடியும்.**

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தை வெளிநாடுகளில் படமெடுக்கும் துணிவை எனக்கு ஏற்படுத்தியவை ஜெயப்பூரில் நான் 'அடிமைப் பெண்'' எடுத்ததால் ஏற்பட்ட அனுபவமும் நண்பர்களின், கலைஞர்களின் திறமையும் ஒத்துழைப்பும்தான் என்பதை நிறை மனத்தோடு நான் சொல்லியே தீர வேண்டும். நான் விமானத்தில் உட்கார்ந்திருந்தேனே தவிர, எனது உள்ள மெல்லாம் இனம் புரியாதவாறு எங்கெங்கோ சுற்றிச் சுழன்று வட்டமிட்டுக் கொண்டே இருந்தது.

இதோ வானத்தை நோக்கிப் பறக்கப் போகிறதே இந்த விமானம், எவ்வளவு பறந்தாலும் இதற்கென ஒரு வரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதல்லவா? விமானத்தின் வலிவுக் கேற்பத்தான் 'எத் தனை அடிகள் உய ரத்தில் பறப்பது' என்ற ஒரு கட்டுக் கோப்பு அமைக்கப்பட்டிருக்கிறதல் லவா? பெரிய விமா னம் (காரவெல்) பறக்கும் அளவுக்கு சிறிய விமானம் (டகோட்டா) உயரப் பறக்க முடியாதே... என்ன செய்வது? அது அது தனக்கு அளிக்கப்பட்டுள்ள வலிவுக்கு ஏற்பத்தானே பறந்து தீர வேண்டும்.

இந்த நியதி யந்திரங்களால் அமைக்கப்பட்ட விமானத்திற்கு மட்டுந்தானா பொருந்தும்? மனிதர்களுக்கும் அதுதானே சரியான நியதி! நன்கு படித்த நல்ல அறிவாளிகளுக்கே இதுதான் நியதி என்றால், வெளிநாட்டைப் பற்றிஎந்த விவர மும் அறியாத என் நிலை என்ன? எனது கற்பனை எந்த வட்டத்திற்குள் இருந்தே ஆக வேண்டும்?

ஏதோ சில ஆங்கிலப் படங்களைப் பார்த்து விட்டு, இப்படி யெல்லாம் எடுக்கப்பட வேண்டும் என்று கற்பனை செய்து- சிறு பிள்ளைகள் திருமண விளையாட்டு விளையாடுவதைப் போன்று- செயலில் இறங்கினால் அது சரியா? அதிலும் எனது கற்பனைக் கோளாறால் விபரீதம் ஏற்படுகிறதென்றால் அந்தத் தவறுகளுக்கு உடந்தையாக்கப்படுபவர்கள் ஒருவரா, இரு வரா?...

இதையெல்லாம் சிந்திக்காமலா இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்? நன்கு யோசித்து முடிவு செய்த பின்தான் புறப்பட்டேன் என்றாலும், என் ஒருவனின் முடிவில் எத்தனை திறமைசாலிகளின் தகுதியை மக்கள் மதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டியவனாக இருக்கிறேன்...

ஒளி அமைப்பாளர் திரு.இராமமூர்த்தி அவர்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி அவருடைய தகுதிக்குக் குறைவாக இருந்தாலும் கூட, அதை அவர் செய்து காட்டுவதற்குச் சரியான வாய்ப்பை நான் அளித்தால்தானே அவர் பரிமளிக்க முடியும்?...

என்னைப் பொறுத்த மட்டில் திரு.இராமமூர்த்தி அவர்கள் என் மீது முழு நம்பிக்கை வைத்திருப்பவர். அவருடைய திறமைக்குக்களங்கம் ஏற்பட நான் எந்த விதத்திலும் காரணமாக இருக்கமாட்டேன் என்பது தான் அவருடைய திடமான எண்ணம். யாரிடமும் எதையும் தேவைக்கதிகமாக ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டார். அவருண்டு; அவர் வேலையுண்டு! பரிசுத்த சைவம்! அவரைப் பார்த்த நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன்; ''ஐயோ பாவம், வெளிநாட்டில் சாப்பாடு விஷயத்தில் என்னென்ன சோதனைக்கும் வேதனைக்கும் ஆளாகப் போகிறாரோ?'' என்று.

அந்தச் சோதனை எனக்கே ஏற்படப் போகிறதென்று அப்போது நான் எண்ணிப் பார்க்கவே இல்லை... சாப்பாட்டில் மட்டுந்தானா தொல்லை? முக்கியமான படப்பிடிப்பு விஷயங் களில் கூடப் பெருத்த சோதனை, விபத்து நேரக்கூடிய ஆபத்து- இவைகளும் இருந்தன என்பதையும் நான் ஏன் மறைக்க வேண்டும்?



எம்.ஜி.ஆர்., சந்திரகலாவிடம் உரையாடல் பற்றி
விவரிக்கிறார் சொர்ணம். அருகில் ப.நீலகண்டன்.

ஒரு வேளை நான் மறைத்தாலும் எனது அன்புத் தம்பி எஸ்.ஏ.அசோகன் எல்லாவற்றையும் கண்டிப்பாக வெளி யிட்டு விடுவாரே! பச்சிளங் குழந்தையையும் அவர் உள் ளத்தையும் ஒன்றாக்குவதில்கூடத் தவறு ஏற்பட்டு விடலாம்.

சில குழந்தைகள் கூட, ஏதாவது ஒரு பொருளை விரும் பினால் அதை ஒளித்து வைக்கவும் முயற்சிக்கலாம். ஆனால் தம்பி அசோகன் அதுவும் கூடச் செய்யத் தெரியாதவர். பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாதவர். தான் நினைப்பதை அப்படியே சொல்லிவிடும் குணத்தை படைத்தவர்.

இவர் வாழ்க்கையில்தான் இப்படி... ஆனால் நடிப்பில் நல்ல ஆற்றல் பெற்றவர். இவரிடம் ஒரு தனிச்சிறப்பு உண்டு. யார் எப்படி நடித்தாலும் அதை ஒரு முறை பார்த்தால் போதும்; அப்போதே அந்த நடிப்பை அவரால் நடித்துக் காட்ட முடியும். அதோடு அவைகளைத் தனது குரல், உடல், முக அமைப்பு இவைகட்கு ஏற்பத் தனதாக்கிக் கொள்வார்.

தனது நண்பர்களெல்லாம் சிறப்பாக நடிக்க வேண்டும்; நல்ல புகழ் பெற வேண்டும் என்ற மிகப் பெரிய உள்ளங் கொண்டவர். அவர் இந்தப் பயணத்தில் தனக்கு நெருங்கிய தோழர் ஒருவரைச் சேர்த்துத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். அவர் வேறு யாருமல்ல: தம்பி நாகேஷ்தான் அவர்.

நாகேஷ் எப்போதும் யாரையாவது கேலி செய்து கொண்டே இருப்பார். சிலர் அதை ஜீரணித்துக் கொள்ளுவது பல நேரங்களில் கஷ்டமானதாகக் கூட இருக்கும். அதைப் பற்றியெல்லாம் இவர் கவலைப்படுவதில்லை. தன்னைப் பிறர் அதே போல் கேலியோ, கிண்டலோ செய்தால், ஆஹா! அதை அவரே ரசிப்பதை இன்றைக்கெல்லாம் பார்த்து நாம் வாய்விட்டுச் சிரித்து மகிழ் வோம். ஒவ்வொருவராக அழைத்து, ''இதோ பார்த்தீங்களா! இவர் என்னைப் பற்றி இப்படிப் பேசினார். எப்படி ஜோக்? புத்திசாலித்தனமாக மடக்கிவிட்டார் பார்த்தீர்களா?'' என்று திரும்பத்திரும்பச் சொல்லி ஆனந்தப்படுவார். அப்படிப்பட்ட பெருமனம் அவருக்கு.

ஒருவரோடு ஒருவர் நெருக்கமாகிவிட்டார்கள் என்பதை வெளிக்காட்ட நமது பெரியவர்கள் எத்தனையோ சிறப்பான வழிகளைச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். ஆனால் இந்தத் தமிழ் சினிமா உலகத்தில் ஒரு சிலர் அவர்களுக்கென்ற ஒரு தனி வழியைக் கடைப்பிடிப்பதைக் காணுகின்றேன்.

அதாவது நெருங்கிப் பழகியதும் தங்கள் இருவருக்கு மிடையில் உள்ள வயது வித்தியாசத்தைக் கூடக் கவனியாது, ''ஏண்டா! எப்படா வந்தே...ஏ கழுதே... என்னெப் பாக்காம எங்கே போறே?'' என்று இப்படி ஏக வசனத்தில் பேசுவதையும், வேறு யாரிடமாவது தனது நெருங்கிய நண்பரைப் பற்றிப் பேசும் போது கூட, ''அவன் ஒரு ஃபூல் (Fool) அவன் எப்பவும் இப்படித்தான்'' என்றெல்லாம் குறிப்பிடுவதையும், தங்களுக் கிடையில் இருக்கும் நட்பை வெளிக்காட்டுவதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள்!

எனது நெருங்கிய நண்பன் ஒருவன் ஒரு நாள் என்னைக் காண என் வீட்டுக்கு வந்தான். அப்போது நான் குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொண்டிருந்தேன். வந்த நண்பன் என்

தாயாரிடம், ''ஏம்மா ராமச்சந்திரன் இருக்கானா?'' என்று கேட்டான்.

**தாயார்:** ஏம்பா!... உன்னெ வரச் சொன்னானா?

**நண்பன்:** சுத்த மடப்பய! என்னெக் காலங்காத்தாலெ வாடான்னு சொல்லிட்டு, இவன் பாட்டுக்கு எங்கேயோ போயிட்டானே!... சேசேசே!

இப்படி மிகச் சாதாரணமாகப் பேசிவிட்டான்.

**தாயார்:** நீங்க ரெண்டு பேரும் சிநேகிதர்களா?

**நண்பன்:** ஆமாம்மா, இவனெப் போய் சிநேகிதம் பண்ணிக்கிட்டேனே... என்னெ அடிக்கணும்!

என் தாயார், அவனை அதற்கு மேல் பேச விடாது தடுத்து, ''ஏம்பா!... நான் சொல்றதைக் கவனி! உன்னுடைய சிநேகிதனெப் பத்தி நீயே தரக்குறைவாப் பேசினா, அவனை யார் மதிப்பா? நீ அவனெ மதிக்காத போது அவனுடைய சிநேகிதனா உனக்கு எப்படி மத்தவங்க மரியாதெ காண்பிப்பாங்க?

உன் நண்பனுக்கு நீ பெருமை தேடித் தரணுமே தவிர, அவனுக்கு இருக்கிற நல்ல பேரையும் கெடுத்துடக்கூடாது. உங்க சிநேகிதம் எப்படியோ இருக்கட்டும். அது நீங்க ரெண்டு பேரும் தனியா இருக்கும் போது வெச்சுக்குங்க... ஆனா பலர் முன்னிலையிலே இதெல்லாம் வேண்டாம்'' என்றார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்ததுதான் அன்று முதல் பிறர் முன்னிலையில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் யாரைப் பற்றியும் ஏக வசனத்தில் பேசுவதே கிடையாது. பிறர் முன்னிலையில் தரக்குறைவாக நடந்து கொள்வதும் கிடையாது.

ஆனால் சில இளைஞர்கள் இந்தச் சினிமா உலகத்தில் இப்படித் தரக்குறைவாகப் பிறர் முன்னிலையில் நடந்து கொள்வது பற்றிச் சிந்திப்பதேயில்லை என்று தோன்றுகிறது.

இதுவும் எனக்கு நினைவுக்கு வருகிறது. இதெல்லாம் தவறான வழியில் தன் மனத்தை வளர்த்துக் கொண்டு, நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு, மேலே மேலே செல்லும் துணிவில் ஏற்படுகின்ற விபரீதத்தினால்தான் என்பதை நாம் உணருகிறோம்.

நெருங்கிய நண்பர்களாகட்டும், அல்லது உரிமையோடு பழகும் தன்மை பெற்றவர்களாகட்டும், அவர்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் தனிமையில் பேசிக் கொள்வதே போல் பொது இடத்திலும் பேசுவது சரியாயிராது என்றுதான் நான் நினைக் கிறேன்.

இங்கே இது பற்றி நான் நினைவுபடுத்திக் கொண்டதற்குக் காரணம் உண்டு.

இந்தப் பயணத்தின் போது, தம்பி நாகேஷ் எல்லாரிடத்திலும் பழகும் போது காட்டும் நல்ல பண்புகளைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதே நேரத்தில் அவர் ஒரு சிலரிடம் மட்டும் உரிமையோடு பேசுவதையும் கவனித்தேன்.

தம்பி அசோகன், ஸ்டில் போட்டோ எடுக்கும் சங்கர்ராவ்-இந்த இருவரை மட்டும்தான் அவர் 'டே' போட்டுப் பேசினார்.

அந்தப் பேச்சு கீழ்த்தரமாகவோ, கேவலமாகவோ இல்லை. அவர் அப்படிப் பேசவும் மாட்டார். ஆனால் உரிமையுடன் அவர் அப்படிப் பேசும்போது, புரியாதவர்களுக்கு அது வேறு விதமாகத் தோன்றி விடக் கூடுமே என்று நான் எண்ணினேன்.

தன்னால் அடக்கிக் கொள்ள முடியாத மகிழ்ச்சி ஏற்பட்ட போதுதான் அப்படி அவர் அந்த இருவரிடம் நடந்து கொண் டாரே தவிர, வேறு எப்போதும் யாரிடமும் எத்தகைய மரியாதைக் குறைவான பேச்சையோ, கருத்தையோ வெளிப் படுத்தியதே கிடையாது என்பதையும் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. அவரால்தான் எங்களது பயணம் பெரும் பாலும் மகிழ்ச்சியோடும், வேடிக்கை விளையாட்டு என்ற வகையிலும், கலகலப்புக் கலந்ததாகவும் இருந்தது என்று சொல்லுவதுதான் மிகமிகச் சரியாயிருக்கும்.

நான் புதுடில்லியில் எனது குறிப்புப் புத்தகத்தில் எழுதி யுள்ளதை அப்படியே எழுதுகிறேன்:

''பயணம் மகிழ்ச்சியும் மனநிறைவும் கொண்டது. உடனிருப்பவர்கள் குடும்பப் பாசத்தோடு பழகுகின்றனர்'' இதைத்தான் எனது சிறு குறிப்புப் புத்தகத்தில் எழுதினேன்.



சந்திரகலா, எம்.ஜி.ஆர்., நாகேஷ்.

திரு.சித்ரா கிருஷ்ணசாமி அவர்கள் எனக்குப் பல ஆண்டுகளாக நண்பராக இருப்பவர். ''இவர் காலில் சக்கரத்தைக் கட்டிக்கிட்டுப் பொறந்தவர்! அதனால்தான் ஒரு இடத்துலெ தங்கறதில்லே' என்று சிலரைப் பற்றிச் சொல்லுவோமே, அந்தக் கருத்து இவருக்கு மிகப் பொருந்தும்.

**உலகில் உழைப்பவர்களில் பல தரத்தினருண்டு. தனக்காக உழைப்பவர்கள்; தனது குடும்பத்துக்காக உழைப் பவர்கள்; தனது ஜாதிக்காக உழைப்பவர்கள்; தனது மதத்திற்காக உழைப்பவர்கள்; ஊருக்காக உழைப்பவர்கள்; தனது பரந்த லட்சியத்துக்காக உழைப்பவர்கள்...**

இதில் திரு.சித்ரா கிருஷ்ணசாமி அவர்கள்...

**'நண்பர்களுக்காக உழைப்பவர்'** என்ற புதுப் பட்டியலை உருவாக்கிவிட்டவர்.

அவர் செல்லாத வெளிநாடுகள் மிகக் குறைவு. அவர் தனக்காகச் சேர்த்துக் கொண்ட பொருள் அதை விடக் குறைவு!

இவரால் நன்மை பெற்ற நண்பர்கள் மிக அதிகம்.

அதே நண்பர்களால் இவருக்குக் கிடைத்த இழிவுகளோ அதைவிட மிக அதிகம்!

இவருடைய துணையைப் பெறுபவர்கள் வளருகிறார்கள்.

ஆனால் இவரோ தன்னுடைய துணையைப் பெற்றவர் களாலேயே தூக்கியெறியப்படுகிறவர்!

இதை அறிந்தும் தனது கடமையைச் செய்யப் பின் வாங் காதவர்...

அவர் விமானத்தில் இருந்த போதும் சரி, டில்லியில் சில மணி நேரம் தங்கிய போதும் சரி, எழுதுவதும் அங்குமிங்கும் சென்று யார் யாரையோ பார்த்துப் பேசுவதும் விமான நிலை யத்திற்குச் செல்லுவதும் மீண்டும் ஓட்டலுக்கு வருவதும்... இப்படி ஓயாது வேலை செய்து கொண்டிருந்தார். இதற்காக இவருக்கு ஏதேனும் லாபத்தில் பங்குண்டா...? ... இல்லவே இல்லை!

பணம் ஏதாவது பேசப்பட்டதா? கிடையவே கிடையாது. எனினும் தன்னுடைய சொந்த வேலையாக எண்ணி இடை யறாது உழைத்துக் கொண்டிருந்தார்.

விமானம் பறந்தது. சிறிது உயரப் பறந்த போதுதான் எத்தனை ஆயிரம் மக்கள் விமானக் கூடத்தில் கூடியிருந்தார்கள் என்பதைச் சரிவர உணர முடிந்தது. அத்தனை நன்மக்களின் ஆசியும் எப்படி வலிவில்லாமற் போய் விடும்? எங்கள் தகுதி சிறிதாயினும் இந்த மக்களின் நல்வாழ்த்துக்களின் வலிவு எங்கள் பயணத்தின் நோக்கத்தை வெற்றிப் பெறச் செய்துதானே ஆக வேண்டும்! இன்னொரு எண்ணம் என்னை அச்சுறுத்தியது. இத்தனை மக்களும் மாலைகள், ஆசிகள், வாழ்த்துக்கள் அனைத்தையும் தருகிறார்களே; எந்த நம்பிக்கையில்? வெளிநாடு சென்று, நல்ல

முறையில் படம் எடுப்போம்; நல்ல கருத்துள்ள கதையை திரைப்பட மாக்குவோம்; மக்கள் மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் வண்ணக் கோலங்கள் படத்தில் காட்சி தரும்; என்றும் அல்லவா இந்த மாபெரும் மக்கள் வெள்ளத்தின் நிர்மலமான உள்ளத்தில் பல நம்பிக்கைகள் உறுதியாகத் தேங்கிக் கிடக்கின்றன! அவற்றை உடைத்து விடும் எந்தக் காரியத்திலும் எனது குழுவினர்களோ, குறிப்பாக நானோ ஈடுபட்டு விடாதிருக்க வேண்டுமே!

இந்த அச்சச் சுமையோடிருந்த என்னையும் நண்பர்களையும் சுமந்து கொண்டு விமானம் டில்லியை நோக்கிப் புறப்பட்டது.

முன் வரிசையில் பல முக்கியமானவர்கள் உட்கார்ந்திருந் தார்கள். அவர்கள் என் கவனத்தைக் கவர்ந்தவர் மைசூர் மகாராஜா அவர்கள். டில்லிக்கு ஏன் இவர் போகிறார்? இந்தக் கேள்வி எனக்கெதற்கு? பலர் இந்த விமானத்தில் டில்லிக்குப் போகிறார்கள். ஆனால் இவரைப் பற்றி மட்டும் என் சிந்தனை சுழல்வானேன்?...

பளிச்சென்று நினைவு வந்தது. மறுநாள் ராஜமான்ய ஒழிப்பு மசோதா ஓட்டுக்கு வரப் போகிறதே... அதற்காக இருக்கலாமோ? வரட்டுமே... அதற்காக இவர்கள் எல்லோரும் சென்று என்ன செய்யப் போகிறார்கள்?

அவைக்கு வெளியில்தானே இவர்கள் பேச முடியும்? அவையில் ஓட்டுப் போடுவதற்கு இவர்கட்கு உரிமையிருந்தால் சரிதான். பின் எதற்காக?

இதைப் பற்றி சிந்திக்கும் போதே என்னுள் சிரித்துக் கொண்டேன்.

''உனக்குள்ள பெரிய வேலையைப் பற்றிச் சிந்திப் பதற்கே உனக்குப் பிறருடைய உதவி தேவைப்படுகிறது! இன்னும் சுமார் 12 மணி நேரத்திற்குள் இந்தியாவை விட்டு வெளிநாட்டிற்குப் போகப் போகிறாய்... இந்த நிலையில் ராஜமான்ய ஒழிப் பைப் பற்றியும் ஓட்டுகளைப் பற்றியும் நினைக்கிறாயே!...'

உண்மைதான்.. எதையும் செய்ய இயலாத நான் இவைகளைப் பற்றி சிந்தித்து என்ன பயன்?

அப்போதுதான் உரையாடல் சொர்ணத்தை மீண்டும் கவனித்தேன். என்னோடு வராத அவர், ''என்னிடம் கதையைப் பற்றி எப்படிக் கேட்டார்? நான் எவ்வாறு அவருக்குப் பதில் அளித்தேன்?'' என்று குழப்பத்தோடு யோசித்து அவரை அழைத்தேன். ''நீங்களும் 'எக்ஸ்போ'வுக்கா? எத்தனை நாட்கள் தங்குகிறீர்கள்?'' என்று அவரிடம் கிண்டலாகக் கேட்டேன்.

''எனக்கு 'எக்ஸ்போ' பார்க்க மிகுந்த ஆசை. செல்லுகிறேன். உங்கள் படப்பிடிப்பும் நடக்க இருக்கிறது. உங்கள் படத்திற்கு நான்தானே உரையாடல் ஆசிரியர்! ஆகவே ஆங்காங்கு உங்களொடு கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நானும் ஒத்துழைத்தால், உங்களுக்கும் உதவியா இருக்கும். எனது ஆசையும் நிறைவேறும்'' என்ற அவர் தந்திரத்தைப் பெருமகிழ்வோடு சொன்னார். அப்போதும் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏதோ பேச்சுக்குச் சொல்லுகிறார் என்று எண்ணினேன்.

டில்லிக்கு சுமார் மாலை ஆறரை மணிக்கு விமானம் போய்ச் சேர்ந்தது. திரு. எஸ்.எஸ்.ஆர். (எஸ்.எஸ். ராஜேந்திரன்) அவர்களும் நண்பர்களும் விமான நிலையத்தில் எங்களுக்கு மாலைகள் அணிவித்தனர்.


இரவு நெடுநேரம் வரையில் திரு.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் என்னோடிருந்தார். என்னுடனேயே இரவு உணவு உட்கொண்டார். அதிகம் ஏதும் சாப்பிடவில்லை. அவருக்கு வயிற்றுக் கோளாறென்று தெரிந்தது. கட்சியைப் பற்றியும் கழகத்தின் எதிர்காலச் செயல் முறைகளைப் பற்றியும் நீண்ட நேரம் ஆர்வத்தோடும் அக்கறையோடும் பேசினார். தொழிலில் அவர் காண்பித்த அக்கறையை விட, கழகத்தின்பாலும் தோழர்கள் பாலும் அவர் காண்பிக்கும் பற்று, கவனம் மிக அதிகமாகும். **யாருக்காகவும் எதற்காகவும் தனது உள்ள உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ளவோ, மாற்றிக் கொள்ளவோ விரும்பாத ஒருவர், எத்தகைய நெருக்கடி ஏற்படினும் கழகத்தை விட்டுக் கொடுக்காத, கொள்கையிலிருந்து வழுவாத ஒரு நல்ல தொண்டர் திரு.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்.**

அவர் சென்ற பிறகும் நீண்ட நேரம் நான் தூங்கவில்லை... இல்லை இல்லை... தூக்கம் வரவில்லை. திரும்பத் திரும்ப

எஸ்.எஸ்.ஆரின் கொள்கைப் பிடிப்பு, கழகத்தின் பால் அவர் காட்டும் அக்கறை, எனது பயணம் இவை பற்றிய சிந்தனைகள்...

விடியற்காலை ஐந்தரை மணிக்கே விமானம் புறப்பட இருப்பதால் மூணரை மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும். நண்பர்கள், அதோடு அந்த மூன்று இளம் பெண்கள் இவர்களையெல்லாம் எழுந்திருக்கச் செய்ய வேண்டும்...

ஓட்டல் வந்ததும் இம்மூன்று பெண்களும் அங்குமிங்கும் ஓடுவதும், ஒருவர் பெட்டி சாமான்களை இன்னொருவர் தூக்கிக் கொண்டு சென்று, எடுத்து வைத்துச் சரி செய்வதும்... குடும்பத்தை விட்டு, சொந்த ஊரை விட்டு யாரையோ நம்பித் தன்னந்தனியாக வந்திருக்கிறோம் என்ற எண்ணம் சிறிதுமின்றி, ஒரே அமர்க்களம்தான்!



இப்படிப்பட்ட விவரம் தெரியாதவர்கள் காலையில் நன்றாகப் படுத்துத் தூங்கி விட்டார்களானால்?

நான் யாருக்காவது சொல்லி ஆகவேண்டுமே! வேறு யாரிடம் சொல்வேன்? சித்ரா கிருஷ்ணசாமி அவர்களுக்கு போன் செய்தேன். அவரது பதில்:

''அவங்களை ஓட்டல் காரர்களே எழுப்பி விடுவாங்க! நானும் எழுப்பிடுவேன். நீங்க பயப்படாதீங்க. இன்னைக்கு அவங்க யாரும் தூங்கப் போறதா எனக்குத் தெரியலே... ஒரே அரட்டை! காலேஜ் லீவு விட்டு, எக்ஸ்கர்ஷன் போறவங்க மாதிரியும், பிக்னிக் போறவங்க மாதிரியும்தான் இருக்காங்க'' என்றார்.

மறுநாள் காலையில வெகு சீக்கிரமாகவே எழுந்துவிட்டோம் - எல்லோரும்தான்.

விரைவிலேயே விமான கூடத்துக்குச் சென்று விட்டோம். பெண்கள் மூவரும் கையில் சில அட்டைப்பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்தனர்.

அவைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவரும் மாற்றிக் கொண்டாலும் தங்கள் ஒவ்வொருவரிடம் ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளப் பிடிவாதம் பிடித்தனர்.

திருவாளர்கள் எஸ்.எஸ்.ஆர்., கமலநாதன், தட்சிணாமூர்த்தி போன்றவர்களும் தமிழ்நாடு விடுதி அதிகாரிகளும் வந்திருந்து உதவினர்; வழி அனுப்பி வைத்தனர்.

நாங்கள் கொண்டு போயிருந்த சாமான்களின் குவியலைப் பார்த்து அதிகாரிகள் அசந்து விட்டனர்.

உடைகள் 'விக்'குகள், நகைகள், காமெராக்கள் முதலியவை களைக் கொண்ட பல பெட்டிகள்.

அவசர அவசரமாகக் குறித்துக் கொண்டு அனுமதித்தனர்.

சுமார் ஐந்தரை மணிக்கெல்லாம் தமிழக மக்களின் ஆசியை மீண்டும் பெற்று, இந்திய மண்ணிலிருந்து வெளிநாடு நோக்கிப் புறப்பட்டோம்.

புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாமே வெய்யில் வந்து விட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக அல்ல, வெகு விரைவிலேயே இந்தியா எங்கள் கண்களுக்கு மறைந்து விட்டது. நாங்கள் கற்பனையில் கண்டு வந்த அழகுமிகும் நாடுகளைக் காண நம்பிக்கையென்றே ஒரே பற்றுக் கோட்டைப் பற்றிக் கொண்டு பயணம் புறப்பட்டோம்.



# 4

விமானத்தில் இளஞ் சிவப்பு (குங்குமப் பூ) நிறத்தில் உடை அணிந்த 'ஏர் பிரான்ஸ்' விமானப் பணிப் பெண்களின் அக்கறையும் கடமையுணர்வும் கொண்ட உபசரணையை எவ்வளவு போற்றினாலும் பொருந்தும்.


டைரக்டரும் சொர்ணமும் அவர்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்ப்பதும், உடனே இருவரும் என்னைப் பார்ப்பதும் ஏன் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. இடையில் என்னைப் பார்த்து உதடுகள் குவிந்தவாறே சிரிப்பதையும், ஒருவரிடம் மற்றவர் ஏதோ சொல்வதையும், கேட்டவர் சிரிப்பை மாற்றிச் சிந்தனையோடு தலையாட்டுவதையும் கவனித்தேன். எனக்குப் புரிந்தது. டைரக்டர் சொன்னதும் என் காதில் விழுந்தது. எனக்குக் கேட்க வேண்டுமென்றே தான் பேசினார். ஆனால் எனக்குக் கேட்காதவாறு பேசியதைப் போல் நடித்தார். இன்று,நேற்றா அவரை எனக்குத் தெரியும்?

நடிப்பிசைப் புலவர் திரு.கே.ஆர்.ராமசாமி அவர்களைச் சந்திப்பதற்காக ஏவி.எம்.படப்பிடிப்புக் கொட்டகைக்குப் போனேன். அப்போது 'செல்லப் பிள்ளை' என்ற படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

ஒரு நண்பர், என்னை ஒரு சிறிய கூரைவேய்ந்த கொட்டகையில உட்காரச் சொல்லிவிட்டுத் திரு.கே.ஆர்.ஆர். அவர்களை அழைத்து வரப்போனார்.

கிராமத்தில் உள்ள சிறிய பள்ளிக்கூடத்தின் பள்ளி அறை போல் இருந்தது. அந்தக் குடிசையின் நடுவில் கைப்பிடி உள்ள மர நாற்காலி, அதற்கு எதிரில் டீ ஓட்டல்களில் முன்பெல்லாம் போட்டிருக்குமே, அது போன்ற ஒரு மர மேடை. நான் உட்கார்ந்தது அந்தக் குடிசையின் இடப் பக்கத்தில்; அதாவது அந்த நாற்காலியின் இடப் பக்கத்திலிருந்த இன்னொரு மர மேடையில்.

நாற்காலியில் தமிழ் ஆசிரியரோ என்று கருதும் வகையில் அமைதியான முகத்தோடும், நிர்மலமான தூய வெண்மை நிறத்தில் கதராடையுடனும், நெற்றியில் திருநீறுடனும் ஒருவர் அமர்ந்திருந்தார். ஸ்டுடியோவில் ஏதாவது பாடம் சொல்லிக் கொடுக்க ஆசிரியரை அமர்த்தியிருக்கிறார்களோ என்று நினைத்தேன். அதற்கு மேல் அவரைப் பற்றி நான் கற்பனை செய்ய எனது நண்பர் தடையாக நின்று...'' இவர்தான்



'செல்லப்பிள்ளை'யின் டைரக்டர் திரு.ப.நீலகண்டன்!'' என்றார்.

'டைரக்டரா... இவரா? என்ன ஆச்சர்யம்! ஒரு சில பிரபல டைரக்டருக்குரிய எந்த அடையாளமும் காணோமே! பூட்ஸ், பாண்ட், ஷர்ட், கையில் சிகரெட் பாக்கெட் போன்ற எந்த ஒரு நாகரீகத்தின் சாயலும் இல்லாமல் இருக்கிறாரே!'

இப்படித் திகைத்தவாறு அவருக்கு 'வணக்கம்' செலுத்தி விட்டு அமர்ந்தேன்-முன் சொன்ன இடத்தில், அவருக்கு இடது புறமாக.

அவர் என்னையே பார்த்தவாறு கேட்டார், ''பாய்ஸ் கம்பெனி நடிகரா?'' என்று

''ஆமாம்'' என்றேன்.

''ஊம்...'' என்று அடிவயிற்றிலிருந்து வந்த சப்தத்தை எனக்குப் பதிலாகத் தந்துவிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

சில நிமிடங்களுக்குள் ஒருவர், கையில் சிறு நோட்டுப் புத்தகத்துடன் நுழைந்தார்- இளம் வயதினர்தான்.

எழுதிக் கொண்டிருந்த டைரக்டர் திரு.ப.நீலகண்டன் அவர்கள் தலை நிமிர்த்திப் பார்த்து விட்டு, ''வாப்பா வா... படியிலே கால் தவறி விழுந்துடாதே! பாத்து வா!...'' என்று சொல்லி விட்டுத் தனக்குள்ளேயே மேலும் ஒன்றைச் சொன்னார். அவர் நினைப்பு அப்படி இருந்தது போலும்! ஆனால் எங்களுக்கு அது நன்கு கேட்டது.

''கண்ணாடியிலெ முகத்தைப் பார்க்காமெயே நடிக்க வந்துடறாங்க... கருமம்... கருமம். நல்ல தலையெழுத்து! இப்படிப்பட்டவங்களையெல்லாம் டெஸ்ட் பாக்க வேண்டி இருக்கு!''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. உள்ளத்தில் சுருக்கென்று தைக்கவும் செய்தது.

என்ன குறும்புத்தனம்! இத்தனை அமைதியோடிருந்த வராலா இவ்வளவு கேலியாக, கிண்டலாகப் பேசி முடிகிறது!

அவருடைய மறைமுகத் தாக்குதலுக்காளான அந்த அப்பாவி இளைஞனைத் திரும்பிப் பார்த்தேன். நல்லவேளை! அவ

ருடைய செவிகளில் இது விழவில்லை போலும், எந்த முகபாவ பேதமுமின்றி உள்ளே நுழைந்து வந்து, திரு. ப.நீலகண்டன் அவர்கட்கு முன்னால் போடப்பட்டிருந்த மர மேடைக்குப் பின் நின்றார்.

எழுதியவாறே கேட்டார்: ''பாடம் பண்ணியாச்சா?''

இளைஞன்: ஆமாம் சார். (தடுமாற்றத் தோடுள்ள பதில்)

திரு.ப.நீலகண்டன் அவர்கள் தலையை நிமிர்த்திப் பார்த்தார். ''என்ன, சாரா! நேரா பள்ளிக்கூடத்துலேந்து வந்திருக்கியா. இல்லெ பள்ளிக்கூடத்தை விட்டு, வீட்டுக்கு வந்து, அப்புறம் நடிக்கலாம்னு வந்திருக்கியா?'' என்று கேட்டார்.

அந்த இளைஞன் எந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு தென்று தெரியாமல் தவிப்பதைக் கவனித்தேன்.

''ஊம்.. (பெருமூச்சோடு) சரி, சரி... சொல்லு'' என்றார். அந்த இளைஞர் அக்கறையோடும் ஆர்வத்தோடும் உரையாடல் களைப் பேசினார்.

அவர் பேசி முடித்த பின் திரு.ப.நீலகண்டன் சொன்னார்: ''பிரமாதம்! டயலாக்கை ரொம்ப நல்லாக் கரைச்சுக் குடிச் சிருக்கே! மத்தியானச் சாப்பாடு தேவையில்லே! பசிக்காது!'' என்றார். முதல் பகுதியை நேராகச் சொல்லிவிட்டு, ''மத்தியானச் சாப்பாடு தேவையில்லே! பசிக்காது'' என்பதைத் தலை குனிந்த போதுதான் சொன்னார். மேலும் தொடர்ந்து ''தம்பீ! இன்னும் பள்ளிக்கூட ஞாபகத்திலேயே படிக்கிறே... வீட்டுக்குப் போய் பேசிப் பழகிட்டு வா... நடிக்கிறதுன்னு பாடத்தை ஒப்பிக்கிற தில்லெ; சாதாரணமா வாழ்க்கையிலெ அந்தந்த நேரத்துக்குத் தகுந்தாற்போலெ ஒருவருக்கொருவர் பேசிக்கிறாங்களே, அது போலத்தான் சினிமாவானாலும் நாடகமானாலும் உணர்ச்சி யோடெ இயற்கையாப் பேசணும்''... என்று சொல்லிவிட்டு, 'சரி போயிட்டு வா. தகவல் அனுப்புவாங்க'' என்றார்.

அந்த இளைஞன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையோடு அந்த இடத்தை விட்டுப் போனார். அந்த இளைஞர் வாசற்படியைத் தாண்டியிருப்பார். அவ்வளவுதான்! திரு.ப.நீலகண்டன் அவர் கள் முன்பு போல் குனிந்து எழுதியவாறு பேசினார்: ''கலையைக் காப்பாத்தறத்துக்கு ஆள் இல்லையாம்! இவர் அதுக்காகவே

பூமியிலே உதிச்சிருக்காராம்.. ஐயோ கடவுளே... உனக்கு இப்படியும் ஒரு வேண்டாத வேலையா!'' - இதை அவர் சொன்னதும், நான் வாய் விட்டுச் சிரித்து விட்டேன்.



மேட்டா ரூங்ராத்

உடனே பதட்டத்தோடு திரும்பிப் பார்த்து என்னிடம் ''பாய்ஸ் கம்பெனி நடிகர் தானே?'' என்றார். ''ஆமாம்'' என்றேன், சிரிப்பை அடக்க முயன்றவாறு. ''தெரியுதே... விளம்பரம் வேண்டாம்.. கொசம் கூட அடக்கமே இல்லே... 'நாடகமே உலகம்!' இப்படி இருந்தவங்கிட்டெ வேறெ என்னதான் இருக்கும்?''

நல்லவேளை, அதற்கு மேல் அவர் என்னைப் பற்றித் திறனாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்காமல் திரு.கே.ஆர்.ஆர். அவர்கள் வந்து, என்னுடன் தனியாகப் பேசிவிட்டு, வெளிப் புறப்படப்பிடிப்புக்காக திரு.ப.நீலகண்டன் அவர்களுடன் சென்றார்.

இப்படிப்பட்ட திரு.ப.நீலகண்டன் அவர்களுக்கு இவ்வாறு பேசவேறு யாராவது கற்றுத் தர வேண்டுமா?

அவர் பேசியது, எப்படியாவது கதையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

நான் உடனே சொன்னேன்.

''கவலைப்படாதீங்க! ஜப்பான் போய் பேசிக் கொள்ளலாம்'' என்று.

சொர்ணம் உடனே கீழே காணும் காட்சிகளை ரசிக்கத் துவங்கிவிட்டார். அவர் மட்டுமல்ல; டைரக்டரும் கூட.

விமானம் வங்கக் கடலை கடந்து பாங்காக் நகரம் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

கீழ்த் திசை நாடுகளின் ''வெனிஸ்'' என்று போற்றப்படும் பாங்காக் நகரின் குறுக்கு ஆறுகள், ஆற்றின் கரையில் வீடுகள். நீரிலே படகுகள் அனைத்தையும் கண்டோம்.

இவைகளை ஆகாயத்திலிருந்து அப்படியே படமாக்கினால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று தோன்றியது.

எனது ஆசை நியாயமான ஆசைதான்! எனினும் பயன் என்ன? விமானத்தை வாடகைக்கு எடுத்துப் படமாக்க வேண் டும். எங்களால் முடியுமா? ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் தானே பணத்தச் செலவு செய்ய இயலும்? இருப்பினும் சபலத்தோடு திட்டமிட்டேன்.

'எக்ஸ்போ'வுக்கும் பிறகு ஜப்பானுக்குச் சென்று திரும்பும் வழியில் பாங்காங்காக்கும் வர இருக்கிறோமல்லவா? அப்போது ஏதாவது வகையில் 'ஹெலிகாப்டர்' கிடைத்தால் முயலுவோம் என்ற நம்பிக்கையோடு, எனது ஆர்வத்தை அந்த நேரத்தில் நம்பிக்கையோடு அடக்கிக் கொண்டேன்.

விமானம் பாங்காங் விமான நிலையத்தில் சுமார் 8.50க்கு இறங்கியது.

கைக் கடிகாரத்தைச் சுமார் ஒரு மணி இருபது நிமிடங்கள் தள்ளி வைக்க வேண்டியதாயிருந்தது.

ஐந்து மணி நேரத்தில் மாறுபட்ட பூமி, மாறுபட்ட உருவங் கள், சயாமிய நாட்டு அழகிய பணிப்பெண்கள், விமானத் திலிருந்து இறங்கிய பயணிகளை இன்முகத்துடன் வரவேற் றனர்.

நாங்கள் அனைவரும் 'லாபி'க்கு போனோம்.

ஒரே மாதிரி துணியில் எனது குழுவினர் உடைகளைத் தைத்துக் கொண்டிருந்தனர். ஆங்கில நாகரிக உடைகள், பாண்ட், கோட் முதலியன.

பலர் ஒரே மாதிரியான உடைகளில் வருவதை அதிசயத் தோடு அந்த விமான நிலையத்தில் இருந்தவர்கள் ரசித்துப் பார்த்தார்கள். நான் இவர்களிலிருந்து முற்றும் மாறுபட்ட உடை யில் காட்சி அளித்தது அந்த மக்களை வியப்பில் ஆழ்த்தியது. இங்கு எப்போதும் அணியும் வேட்டி, ஜிப்பா, போர்வை, தலையில் குல்லாய் இவைகள்தான் நான் அணிந்திருந்தது.

வியப்போடு பார்த்தவர்கள் வேறு எங்கோ பார்ப்பது போல் மிக அருகில் வந்து உற்றுநோக்கிவிட்டு (உடைகளைத்தான்) திரும்பிப் போனார்கள். என்னைப் பார்த்தவாறே, சயாமியப் பெண்களும் என் அருகே சூழ்ந்து நின்று வியப்போடு பார்த் தார்கள். ''என்னண்ணே, உங்களுக்கு இங்கும் ரசிகைகளா?'' என்று கேட்டார் திரு.நாகேஷ் அவர்கள்.

''இல்லை, வேட்டியின் நுனியை எங்கே எப்படிச் சொருகி யிருக்கேன் என்று ஆச்சரியத்தோடு பாக்கிறாங்க!'' என்று சொல்லிவிட்டு, திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்களிடம் நண்பர் களுக்கு செலவிற்குப் பணம் கொடுக்கச் சொன்னேன்....

விமானப் பணிப் பெண்கள் அழகான இறகுகளினால் தலை அணிகள் அணிந்து கொண்டிருந்தனர்.

விமானம் எங்களைச் சுமந்து கொண்டு 9.50-க்குப் புறப் பட்டது. எனது உடற்சுமை இப்போது கொஞ்சம் அதிகமாயிருக் கும் என்று எனக்குத் தோன்றியது.

அலைகள் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து, ஒன்றை ஒன்று அழுத்துவதைப் போல் எனது சிந்தனைகள் எங்கெங்கோ மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் என் அறிவை மோத, அதன் விளைவாக ஏற்பட்டிருந்த மனச்சுமை இவ்வாறு என்னை எண்ணச் செய்தது.


இயற்கைக் காட்சிகள் என்னை மேலும் மேலும் குழப்பிக் கொண்டிருந்தன.

இவைகளையெல்லாம் தமிழக மக்கள் நேரில் காண முடியாவிடினும் படங்களிலாவது பார்க்கும் வாய்ப்பைப் பெற வேண்டாமா? நான் காணும் இவைகளை என்னால் படமாக்க இயலுமா?...

இப்படி - ஏக்கம்... திட்டம், வசதியின்மையின் அச்சுறுத்தல், முயன்று பார்த்தால் என்ன என்ற துணிச்சலான கேள்வி....

முதலில் 'எக்ஸ்போ'வையாவது படமாக்க முடிகிறதா பார் என்று கேலி!

இப்படி சினிமாவிலே பல வேடங்களில் ஒருவரே தந்திரக் காட்சியில் நடிப்பது போல், என் உருவங்களே என்னைக் கேள்வி



'எக்ஸ்போ'வில் நடைபெற்ற படப்பிடிப்பில் (இ–வ) ஒளிப்பதிவாளர் ஹரிதாஸ், எம்.ஜி.ஆர்., ப.நீலகண்டன், சந்திரகலா, சொர்ணம்.

கேட்டுத் தலை குனியச் செய்து கொண்டிருந்தன.

டில்லி மாநகரை விட்டுப் புறப்படும் போது எவ்வளவு பெரிய நம்பிக்கை!

ஏறத்தாழ ஐந்தாறு மணி நேரத்திற்குள்ளாகவா அது சிதிலமாகிக் கொண்டிருக்கின்ற காட்சியை நான் காண வேண்டும்?

**மனிதன் தனது வலிவை நன்கு புரிந்து திட்டம் போட்டாலும் கூட, அது முழு வெற்றி பெற்று விடும் என்று உத்தரவாதம் தர முடியவில்லையே!**

இப்படி எண்ணியவாறு உட்கார்ந்து கீழே கவனித்துக் கொண்டிருந்தேன்.

சுமார் பத்து மணி நாற்பது நிமிடங்களுக்கு கம்போடியா நாட்டின் தலைநகரான 'பானம் பான்' விமான நிலையத்தில் விமானம் இறங்கியது.

இது வியட்நாமுக்கு அருகே உள்ள நாடு.

விமான நிலையத்தில் சிப்பாய்களின் நடமாட்டம் தீவிரமாக இருந்தது.

விமான நிலையத்தில் பெரிய 'பானர்'கள் சிவப்பு நிற எழுத்துக்களைக் கொண்டு ஆங்காங்கு காட்சி அளித்தன.

அவற்றில் ஒன்றில் கீழ்க் காணும் வாக்கியங்கள் ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டிருந்தன.

''கம்போடியர்கள் தங்கள் நாட்டை வாடகைக்கு விட மாட்டார்கள். வியட் காங்குகளோ, வடக்கு வியட்நாமியர்களோ அதை விழுங்க முடியாது.''

வியட்நாம் சண்டை கம்போடியாவிலும் பரவி விடுமோ என்பது அன்றைய நிலைமை. அதனால்தான் கம்போடிய மக்கள் இவ்வாறெல்லாம் எழுதி வைத்துள்ளனர்.

'பானம் பான்' விமான நிலையத்தில் நாங்கள் கூட்டமாக இறங்கிச் சென்றபோது, அங்கே அமர்ந்திருந்த அமெரிக்கர்கள் வியப்புடன் பார்த்தனர்.

''இந்தியர்கள் எல்லாம் ஏன் இந்தியாவிலிருந்து ஓடி வருகிறார்கள்? அங்கே என்ன நேர்ந்து விட்டது?'' என்று ஓர் அமெரிக்கர் கேட்க, நாகேஷ் ''நாங்கள் திரைப்படக் குழுவினர்'' என்பதைச் சொல்லி விளக்கமும் தந்தார்.



# 5

விமான நிலையத்தில் நாங்கள் இருந்த நேரத்தில், நாட்டுப்பற்றுக் கொண்ட வீரர்களின் வீர நடையையும் அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் சிரித்துப் பேசி மகிழ்வதையும் கவனித்தேன். இளைஞர்கள் பலர் அந்தக் கூட்டத்தில் இருந்தனர்.

அவர்களின் பெற்றோர்களைப் பற்றியோ, உற்றார் உறவினர்களைப் பற்றியோ அந்த வீர இளைஞர்களுக்குச் சிறிதும் நினைவிருப்பதாகவே தெரியவில்லை.

சுமார் பதினொன்றரை மணிக்கு கம்போடியா விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டோம். இடையில் மேகத்தால் விமானம் நிலை தடுமாறியவாறு சென்றது.

விமானத்தில் அறிவிப்பாளர் பேசினார். ''ஹாங்காங்குக்கு அருகில் செல்லச் செல்ல மேக மூட்டம் அதிகமிருக்கும் பெல்ட்டைப் போட்டுக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டு, மேலும் தொடர்ந்து, ''மேகமூட்டம் அதிகமாக இருப்பினும் உங்கள் கழுத்தையோ முதுகையோ உடைக்காமல் ஹாங்காங் கொண்டு சேர்க்க முயலுகிறேன்'' என்று நகைச்

சுவையாக சொன்ன போது, 'ஆபத்து' என்று அச்சப்பட்டவர்களும் கூட வாய் விட்டு சிரித்தார்கள் என்றால், அறிவிப்பாளரின் திறமையைப் போற்றாமல் இருக்க முடியவில்லை.

நாங்கள் பயணம் செய்த விமானம் ஒண்ணேகால் மணிக்கு ஹாங்காங் விமான நிலையத்தில் இறங்கியது. விமான நிலையத்தின் முன்னாலும் இரு புறத்திலும் நீர்ப்பரப்பு. விமான ஓட்டி கொஞ்சம் தவறிடினும் சமுத்திரத்தில் இறங்கி விடுவார்.

சமுத்திரத்தைக் தூர்த்து, நிலப்பரப்பை அதிகப்படுத்தி, விமான நிலையத்தை விரிவுப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். பல தமிழ் மக்கள் எங்களைக் கண்டதும் அவர்கள் காட்டிய ஆர்வம் கலந்த அன்பு வரவேற்பு, மறக்க வொண்ணாத ஒன்றாகும்.

இளைப்பாறுமிடத்தில் புத்தகங்கள், கலைப்பொருள்கள் முதலியவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இயக்குநர் திரு.ப.நீலகண்டன் அவர்களிடம் ஹாங்காங் விமான நிலையத்தில் எந்தெந்த காட்சிகளை எடுக்கவேண்டும் என்பதையும், கதையின் ஒரு பகுதியையும் சொன்னேன். அருகில் ஒன்றும் கவனியாதவர் போலிருந்த திரு.சொர்ணம் குறித்துக் கொள்வதை நானும் ஒன்றுமறியாதவன் போலவே கவனித்தேன்.

விமானம் பயணமாகும் நேரம் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் அவசரம் அவசரமாகப் புறப்பட்டோம் விமானத்திற்கு.

அங்கு சிறிது நேரம் தங்குவதற்கும், திரும்ப விமானத்திற்குச் செல்லுவதற்கும் அடையாள அட்டைகள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த அட்டைக்கு 'டிரான்சிட் கார்ட்' (Transit Card) என்று பெயர் சொல்லப்படுகிறது.

ஆண்கள் எல்லோரும் அடையாள அட்டைகளைக் கொடுத்துவிட்டு விமானத்திற்குப் போய்க் கொண்டிருந்தனர். பெண்களும் தங்களிடம் தரப்பட்டிருந்த அட்டைகளைத் திரும்பக் காவலர்களிடம் (அவர்கள் அனைவரும் பெண்களே) கொடுத்தார்கள்.

ஆனால் நளினி (லதா)யின் அடையாள அட்டை காணவில்லை. எல்லாப் பெண்களும் விமானத்திற்கு போகாது

நளினியின் அட்டையைத் தேடினர். நேரம் ஆகிக் கொண்டிருந்தது.

பயணத்தை நிறுத்தி, நளினியை எங்கள் குழுவைச் சேர்ந்தவர் என்று உறுதிப்படுத்தி அழைத்துச் செல்வதா, அல்லது மேலதிகாரிகளிடம் ஆதாரங்களை எடுத்துக் காட்டி அவர்கள் சம்மதம் பெற்று அழைத்துச் செல்வதா?

எல்லோருக்கும் ஒரே குழப்பம்.

அதற்குள் ''கிடைத்து விட்டது! கிடைத்து விட்டது!'' என்று சந்திரகலாவும், மஞ்சுளாவும் சப்தம் போட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். லதாவும் ஓடி வந்தார். எல்லோருடைய முகத்திலும் பெரு மகிழ்ச்சி.

முகம் கழுவக் குளியல் அறைக்குள் சென்ற லதா அங்கு அதை வைத்துவிட்டு வந்திருக்கிறாள். எப்படியோ ஒரு சில நிமிடங்களில் பல்வேறு பிரச்னைகளின் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டது போல் திகைப்படைந்து விட்டிருந்த எங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் பெருமூச்சுகள் வெளிப்பட்டன. என் மனைவி சொன்னாள்: ''இனிமே லதா தன்னுடைய பாஸ்போர்ட் முதற்கொண்டு பிறரிடம் கொடுத்து வைத்துவிட வேண்டும். தன்னிடம் வைத்துக் கொள்ளக் கூடாது.''

இரண்டு மணி, இருபது நிமிடங்களுக்கெல்லாம் விமானம் புறப்பட்டது.

நாங்கள் முதல் முதல் நாடகக் கம்பெனிக்குப் புறப்பட்ட போது எங்கள் நிலை எதுவோ அது போன்றதுதான் லதாவின் நிலையும். இப்படிப்பட்ட ஒரு பெண்ணை எங்களை நம்பி அனுப்பிய அதன் தாயிடம் பத்திரமாகக் கொண்டு சேர்க்க வேண்டுமே என்ற கவலை. இன்னும் அதிகமாக என்னைக் கப்பிக் கொண்டது.

ஹாங்காங்கிலிருந்து புறப்பட்ட விமானம் ஜப்பான் கடலைக் கடந்து ஒசாகா நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

''ஏன் மிஸ்டர் நாகேஷ், நாம் இப்ப எவ்வளவு தூரம் வந்திருப்போம்?'' - இது கேள்வி.



எக்ஸ்போவில் சந்திரகலா, எம்.ஜி.ஆர்., நாகேஷ்

''கொஞ்சம் இரு. வெளியே எட்டிப் பார்த்துச் சொல்றேன். மைல் கல் வெளியே தானே நட்டிருப்பான்! பார்த்துட்டாப் போறது!'' என்ற பதிலைச் சொன்னார். அவ்வளவுதான்! சொர்ணமும் மற்றவர்களும் சேர்ந்து வாய்விட்டுச் சிரித்தனர்.

ஒசாகாவை நெருங்க நெருங்க விமானம் மேலும் கீழும் ஆடியது.

இதுவரையில் வெளிப்படையாக உரத்துப் பேசாதிருந்த திரு.அசோகன் கேட்டார்: ''என்ன நாகேஷ்! கீழே கீழே அப்படி இப்படி இறங்கிப் பயமுறுத்துறான்!''

திரு.நாகேஷின் பதில்: ''ஒண்ணுமில்லே. ஒசாகா எங்கே இருக்குதுன்னு குனிஞ்சு குனிஞ்சு தேடுறான்!''

இப்படிப்பட்ட பதில்களைக் கேட்டு யாரால்தான் சிரிக்காமல் இருக்க இயலும்?

ஐந்து ஐம்பதுக்கு ஒசாகா விமான நிலையத்தில் இறங்கிய விமானம் ஆறு இருபதுக்கு அங்கிருந்து புறப்பட்டு டோக்கியோ நோக்கிப் பறந்தது.

சுமார் ஏழு இருபதுக்கு டோக்கியோ விமான நிலையத்தை விமானம் அடைந்தது.

இங்கே குறிப்பிட்ட மணி, இந்திய நேரத்தைக் காட்டுவதாகும். டோக்கியோவின் நேரம் சுமார் பத்து மணி முப்பது நிமிடங்கள். பாஸ்போர்ட், விசா போன்றவைகளை விமான நிலைய அதிகாரிகளிடம் காண்பித்துக் கொண்டிருந்தோம். வெளியே ஓரிரு தமிழன்பர்கள் குடும்பத்தோடு நிற்பதைக் கண்டேன்.

பாஸ்போர்ட், விசா போன்றவைகளைக் காண்பித்துவிட்டு நான் காவலரைத் தாண்டி, இடுப்பளவு உயரமே உள்ள கம்பிக் கதவுகளுக்கு மறுபுறம் நின்றுகொண்டிருந்தேன். நாகேஷும் தன்னுடைய பாஸ்போர்ட், விசாக்களைக் காண்பித்துவிட்டு வந்தவர், என்னருகில் வந்ததும், அதுவரையில் நான் காணாத ஒரு பெரிய பயங்கர மாற்றம் அவரிடம் உண்டாக்கியது.

கொடூரத் தன்மையைக் காண்பது போல் அவருடைய கண்கள் பெரிதாயின. முகம் ஒரு பக்கம் நோக்கி விகாரமாக

இழுக்கப்பட்டது போன்றாயிற்று. சொல்ல முடியாத ஏதோ ஒரு வார்த்தை வெளியே வந்தது.

பேச இயலாத ஊமையன் தன்னைப் பயங்கரமான ஆயுதங்களால் தாக்க வருபவர்களைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல விரும்பினால், என்ன செய்வான்? பயத்தினாலும் தன்னால் ஏதும் செய்ய இயலவில்லை என்கிற கோழைத்தனத்தோடும் எப்படியாவது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு சப்தமிட விரும்பி கத்தினால் எப்படி இருக்கும்? உருவில்லாத வார்த்தைகள் அடிவயிற்றிலிருந்து அழுத்தித் தள்ளப்பட்ட காற்றின் உதவியால் வார்த்தைகட்குப் பதில் இனம் புரியாத கூச்சல் கரகரத்த குரலில் வெளிவருமோ, அதுபோல், இல்லை அதை விடப்பயங்கரமாக அலறியவாறு கீழே விழுந்து விட்டார் நாகேஷ்.

அவரது வாயிலிருந்து நுரை நுரையாக வெளி வந்தது. நான் பிடிக்காவிட்டால் அவர் தரையில் ஆபத்து விளைவிக்கும் நிலையில் விழுந்திருப்பார். மீண்டும் மீண்டும் மிரண்ட பார்வைகளோடு அலறினார். உட்கார்ந்து பாஸ்போர்ட் முதலியவை களைப் பரிசீலித்துக் கொண்டிருந்த அதிகாரிகள் கூட, புரியாத நிலையில் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து நின்றனர். நான் அவருடைய நெஞ்சைத் தடவிக் கொடுத்தேன்.



மேக்—அப் முத்து, நடன இயக்குநர் கோபாலகிருஷ்ணன், எஸ்.ஏ.அசோகன், சொர்ணம்.

அங்கு என்னைக் காண வந்திருந்த திரு. மணியன் அவர்கள் அருகில் வந்து விசாரித்து விட்டு எங்கோ விரைந்து சென்றார். சிறிது நேரத்திற்

கெல்லாம் ஒரு டாக்டரோடு வந்தார். அந்த டாக்டர் பரிசோதித்து விட்டு ''பலவீனம், ஓய்வு எடுத்தால் போதும்'' என்றார். வேண்டுமாயின் நர்சிங் ஹோமில் சேர்க்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். சிறிது விவாதத்திற்குப் பிறகு வேண்டாமென்று முடிவு செய்தோம்.

அதற்குள் திரு.நாகேஷுக்கு உடல் நலமாக அறிகுறிகள் தென்பட்டன. மெல்ல எழச் செய்து வேறு ஒரு இடத்தில் இருந்த சோபாவில் உட்கார வைத்து விவரம் கேட்டேன். அவரால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. அங்கிருந்து புறப் பட்டோம்.

நாகேஷை அந்த நிலையில் விட்டுவிட்டு நான் மட்டும் எப்படி டோக்கியோவிற்குள் நுழைவது? திரு.நாகேஷ் ஓரள விற்குக் குணமாகும் வரை காத்திருந்து பிறகு ஓட்டலுக்குப் புறப்பட்டோம். அவரும் வேறொரு காரில் வந்தார். அவருடன் கூடவே திரு.அசோகனைத் தங்க வைக்க ஏற்பாடு செய் திருந்தேன்.

விமான நிலையத்தில் ஏர் ஃபிரான்ஸ் கம்பெனியின் குழு வினர் படம் எடுத்தனர்.

'பாங்க் ஆப் இந்தியா'வில் பணிபுரியும் நண்பர் திரு.சந்தானம். திருமதி நிர்மலா சந்தானம், கம்பெனியில் பணி புரியும் திரு.ஜெயராமன் வந்திருந்தார்கள்.

திரு.சந்தானத்தின் இரு குழந்தைகள் ஜப்பானிய உடையில் வந்திருந்தனர். சில ஜப்பானியப் பெண்களும் எனக்கு மாலை அணிவித்து, வரவேற்புக் கூறினர்.

விமான நிலைய சடங்குகள் அனைத்தையும் முடித்துக் கொண்ட பின் டோக்கியோவின் தலைநகரத்திலுள்ள மிகப் பெரிய ஓட்டல்களில் ஒன்றான இம்பீரியல் ஓட்டலை அடைந்தோம்.

ஓட்டலை அடைந்தோமே தவிர, அறைகள் கிடைக்க வில்லை. எங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறை களை ஆறாம் தேதியிலிருந்துதான் கேட்டிருந்தார்களாம்.

அதுமட்டுமல்ல, இரவு பன்னிரண்டு மணிக்கு முன்பு அந்த அறைக்குச் சென்றோமானால் ஒரு நாள் வாடகை கொடுத்தாக வேண்டும். அதாவது பதினோரு மணி ஐம்பத்தொன்பது நிமிடத்தில் அந்த அறைக்குள் நுழைந்தால் முதல் நாள் வாடகையைச் செலுத்தியாக வேண்டும். எனக்குத் தரப் பட்டிருக்கும் பணத்தின் அளவோ மிகக் குறைவானது. எனவே தான் என்னோடு வந்து பயணத்தினால் சோர்ந்து போயிருந்த பெண்களைக் கூட உடனே அறைகளுக்கு அனுப்ப முடியா திருந்தது. ஆனால் அவர்களோ இதை உணர்ந்திருந்த காரணத்தால் எந்தவித மனக் கஷ்டமும் கொள்ளாது, ஒருவருக்கொருவர் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இரவு வெகு நேரமாகி விட்டதால் அவர்களுக்கு ரொட்டி, கேக் ஏதாவது வாங்கிக் கொடுக்கலாமென்று எண்ணிக் கேட்டேன். பன்னிரண்டு மணிக்கு மேல்தான், அறைக்குச் சென்ற பிறகு கிடைக்கும்; அதுவும் முன்னமேயே குறிப்புக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். எனக்கு இவைகளெல்லாம் புரியாத புதிராகவே இருந்தது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்கள் தங்களை அதுவரைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாலும் கேக், ரொட்டி போன்ற பெயர்களைக் கேட்டதும் அதற்கு மேல் தங்களுக்கிருந்த பசியை வெளிக்காட்டாது மறைக்க சக்தியற்ற நிலையில் ஆவலோடு விசாரித்தார்கள். அங்கு அந்த வேளையில் ஏதும் கிடைக்காதென்பதை அறிந்த போது என் மீதே எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

என்னை நம்பி வந்த அந்த இளம் பெண்களுக்கு முதல் நாளிலேயே பசிக்கு உணவு கொடுக்க இயலாதவனாக ஆகி விட்டேனே என்று என்மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. ''மோராவது கிடைக்குமா?'' என்று கேட்டேன்.

'பாங்க் ஆப் இந்தியா'வில் பணியாற்றும் திரு.சந்தானம் அவர்களைப் பற்றி குறிப்பிட்டேனே, அவர் உடனே சொன்னார்: ''அரை மணி நேரம் அவகாசம் தருவதாயின் உணவு தயார் செய்து விடுவேன். எல்லோரும் சாப்பிடலாம்''. உணவு கிடைக்கிறதா



எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

இல்லையா என்பது இருக்கட்டும். ஜப்பானில் ஒருவர் எங்களுக்கு இரவு சுமார் பதினொன்றரை மணிக்கு மேல் சமையல் செய்து, உணவு தருவதாகச் சொல்லுகிறாரே இவரது உள்ளத்தை, பிறருக்குச் சேவை செய்யும் தொண்டு மனப் பான்மையை எப்படிப் போற்றுவது, நன்றி கூறுவது என்று புரியாத நிலையில் அவரைப் பார்த்தேன். பெண்கள் மூவரும் வேண்டாமென்று சொல்லவேயில்லை.

நான் மரியாதைக்குச் சொன்னேன்: ''வீண் சிரமம் வேண்டாம். ரொட்டி கிடைத்தாலே போதும்'' என்று ...

ஆனால் அவர் சொன்னார்: ''உங்கள் தகுதிக்குத் தகுந்த முறையில் உணவு படைக்க எங்களால் இயலாது. ரசம் சாதம், அப்பளம் இவ்வளவுதான்...'' என்று சொல்லியவாறே, எங்களுடைய அனுமதியைப் பெறாமலேயே தனது மனைவியை வீட்டுக்கு அனுப்பி விட்டார். சாப்பாடு கிடைக்கும் என்று தெரிந்ததும் மூன்று பெண்களின் பேச்சும் சிரிப்பும் மீண்டும் தொடர்ந்தன.

எப்படிப்பட்ட நல்ல இளம் உள்ளங்கள்!

**சினிமா உலகத்தில் எத்தனையோ நடிக, நடிகையர் களைப் பார்த்திருக்கிறேன். இப்படிப்பட்ட வசதிக் குறைவு கள் நேரிடும் போது எப்படியெல்லாம் ஆத்திரப்பட்டிருக் கிறார்கள்! கேவலமாய்ப் பேசியிருக்கிறார்கள். தங்களின் தகுதிக்குக் குறைவான செயலில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை கண்கூடாகக் கண்டு அறிந்தவன்.**

'மகாமாயா' படமாகிக் கொண்டிருந்தபோது என்று நினைவு. ஒருவர் பெரியவர்; பலருக்கு ஆசிரியராக இருந்தவர். நல்லவர். எல்லோரிடமும் அன்போடும் கண்ணியமாகவும் பழகுபவர்.

ஒருநாள் படப்பிடிப்பின் போது சாப்பாடு கொண்டு வந்திருந்தார்கள் அனைவருக்கும். இவர் தேவைப்பட்டது போலவே இவர் விரும்பிய உணவைப் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு வந்திருந்தனர். பொட்டலத்தைப் பிரித்தவர் அதில் பொரியல் இல்லையென்று கண்டதும் ஆத்திரப்பட்டார். அதைக் கொண்டு வந்தவனின் முகத்தில் அந்தத் தயிர் சாதத்தை அப்படியே எறிந்தார். அந்தப் பையனின் முகத்தில் தயிர் சாதம், ஊறுகாய் முதலியவைகள் அப்படியே அப்பிவிட்டாற் போல் விழுந்தது. அவனும் நல்லவன். இவரும் நல்லவர்.

ஆனாலும் பண்புள்ளம் கொண்ட இந்த நல்லவரையும் கூட 'பசி' அவ்வளவு கொடூரமானவராக அப்போதைக்குச் செய்து விட்டது.

இப்படி ஒரு எண்ணம் தோன்றியபோது இந்தப்பெண்களை எப்படிப் புகழ்வது என்று புரியாமல், ஒன்றும் அறியாதவனைப் போல் அவர்களையே உற்றுப் பார்த்த வாறு இருந்தேன்.

திரு.சந்தானம் அவர்கள் ஒரு வினாடிகூட சும்மா இருக்க வில்லை. இதற்கிடையில் அறைகளின் சாவிகளைப் பெறவும் சாமான்களின் எண்ணிக்கையைச் சரி பார்க்கவும் தனது வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதுமாக துருதுருவென்று அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் எங்களை வந்து அழைத்தார், ''உணவு தயார். போகலாம்'' என்று, அவரே தனது காரில் எங்களை அழைத்துப் போனார். அவர் தான் கார் ஓட்டி, அவர் வீட்டிற்குப் போனோம். மாடியில்தான் அவரது குடி யிருப்பு.

விசாலமான பெரிய அளவுமல்ல, மிகச் சிறியது மல்ல; நடுத்தரமான ஒரு அறையில் மேசை நாற் காலிகள் போடப்பட் டிருந் தன. சுவற்றில் கலையழகு நிரம்பிய படங்கள்; சிலை வடிவங்கள். அவைகளில் பெரும்பாலும் திரு.சந்தானத்தின் வாழ்க்கைத் துணைவியான திருமதி நிர்மலா சந்தனம் அவர்களுடைய கை வண்ணத்தின் சிறப்பால் அமைந்தது ஆகும். திருமதி நிர்மலா சந்தானம் கலை ரசிகை மட்டுமல்ல; அவரே ஒரு வகையில் கலைஞர் ஆவார். பக்கத்து சமையல் அறையிலிருந்து ரசத்தின் வாசனை கமகம என்று வந்து கொண்டிருந்தது. அவருடைய கலைத் திறமை அங்கே சுவரில் பளிச்சிட்டது போல், எங்களுக்கு உணவு பரிமாறிய போதும் அந்த உணவை நாங்கள் சுவைத்து உண்ட போது அவை எங்களுக்கு உணர்த் தியதும் எண்ணிப் பார்த்த நாங்கள் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வந்தோம்: **குடும்பத்தின் சிறந்த தலைவி- கணவனுக்கு பண்புள்ள மனைவி, விருந்தினருக்குப் பாசமுள்ள உறவினர். குழந்தைகளுக்கு அன்புத்தாய்- இப்படிப்பட்ட ஒருவர் கையால் உணவு பரிமாறப்பட்டு உண்டோம்.**

வயிறு புடைக்க அருந்தினோம். எங்களின் அதிர்ஷ்டம் அன்று, திரு.சந்தானத்தின் தாயார் இந்தியாவிலிருந்து ஜப்பான் வந்திருந்தார். அவர்கள் தின்பண்டங்களைச் செய்து தங்களுடன் கொண்டு வந்திருந்தார்கள். அவைகள் எங்களுக்குப் பரிமாறப் பட்டன.

நல்ல தயிர், ஊறுகாய் இத்தனை போதாதா? ஜப்பான் நாட்டிற்குப் புதியவர்களாக அடியெடுத்து வைத்த எங்களுக்கு இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு மிகப் பெரும் விருந்தே நடைபெறுகிறதென்றால் தமிழ்ப் பண்புள்ளத்தின் தனித் தன்மைக்குள்ள நற்சான்று என்றுதானே கொள்ள முடியும்?

திரு.சந்தானம் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் திரு.மணியன் அவர்கள். உணவு உண்டு மூச்சு விடக்



'சித்ரா' கிருஷ்ணசாமி

கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது திரு.சந்தானம் அவர்கள், ஒரு சிறிய படம் பிடிக்கும் கருவியையும் படங்கள் ஒட்டப் பட்டிருந்த படத்தொகுப்புச் சேர்ப்பு ஒன்றையும் கொண்டு வந்து, எங்களைப் படம் எடுக்க விரும்புவதாயும் சொல்லிப் பட மெடுத்தார். அதோடு அவர் எடுத்த படங்கள் நிறைந்த அந்த ஆல்பத்தைப் பிரித்துக் காண் பித்தார்.

ஒரு கணம் திகைத்தேன் - அதில் முதலில் ஒட்டப்பட் டிருந்த படத்தைப் பார்த்து, அது வேறு யாருடைய படமுமல்ல! எங்களின் இதய தெய்வம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களது உருவம்தான். எங்கு சென்றாலும் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் அந்த அமரரின் உருவத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தேன்.

-அதுவும் எங்களுக்கு முதல் நாளே விருந்து படைத்த திரு.சந்தானம் அவர்களே எடுத்த படத்தில் இருந்து கொண்டு ''தம்பி நான் புகாத இடத்திலோ, எனக்குத் தெரியாத பாதை யிலோ எனக்கு முன்னால் நீ செல்வதாக எந்த வினாடியிலும் கற்பனை செய்து விடாதே...!'' என்று எச்சரிப்பது போல் அது அமைந்திருந்தது.

அது மட்டுமல்ல, நான் எனது வாழ்க்கைப் பாதையில் எங்கெங்கு காலடி எடுத்து வைக்கின்றேனோ, வைக்க இருக் கின்றேனோ அங்கெல்லாம் அமரர் அண்ணா அவர்கள் முன்னாற் சென்று, நான் நடக்கும் பாதைகளை மென்மைப்படுத்தி, சீர் செய்து, ஆங்காங்கே எனக்குத் தேவையான அத்தனையையும் அரசியலிலும் கலையிலும் நிறைவேற்றி வைத்திருப்பதை, இன்னமும் நிறைவேற்றி வைப்பதை எண்ணுந்தோறும் எனது கைகள் அவர் இருக்கும் திக்கு நோக்கித் தானாக உயருகிறது;

கூப்புகிறது; சிரம் தாழ்ந்து வணங்குகிறது. நாங்கள் ஜப்பானில் சந்தித்த சில மணி நேரத்திற்குள்ளாகவே எங்கள் உள்ளத்தில் எவ்வளவு உயர்ந்தவராக இடம் பெற்றிருந்தாரோ, அந்தத் திரு.சந்தானம் அவர்கள் இப்போது இன்னும் ஒரு படி உயர்ந்து நின்றார் என்றால் மிகவும் பொருந்தும்.

அவர் அண்ணாவைப்பற்றிச் சொன்ன கருத்து என்னை மேலும் சிந்திக்கச் செய்தது.

''அண்ணா அவர்கள் மறைந்தது நாம் செய்த துரதிர்ஷ்டம்... இந்த உலகத்துக்கு என்ன கேடுகாலமோ தெரியல்லே, அண்ணா இன்னும் கொஞ்ச காலம் நம்மோடெ இல்லாமெப் போயிட்டார்.''

''அண்ணா மறைந்துவிட்டார்'', ''போய்விட்டார்'' என்றுதான் அந்த நல்லவரின் வாயிலிருந்து வெளிவந்ததே தவிர ''செத்து விட்டார்'', ''இறந்து விட்டார்...'' என்று சொல்லப் படவே இல்லை.

அப்படியானால்...

மறைந்தவர் தோன்றலாம்; போனவர் திரும்பலாம்....

இப்படிப்பட்ட கற்பனைகளுக்கு என்னை ஆளாக்கிவிட்ட அந்தத் திரு.சந்தானம் அவர்கள், எதைப்பற்றியும் சிந்தியாத களங்கமற்ற உள்ளத்தோடு எங்களை ஓய்வெடுக்கச் செய்யவும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் மீண்டும் முனைந்தார்.

இவர் யார்? என்ன ஜாதி? எங்களுக்கும் இவருக்குமுள்ள தொடர்பென்ன? இப்படி எங்கட்குத் தொண்டு செய்து இவருக்கு ஆக வேண்டியதுதான் என்ன?



# 6

கலையுணர்வும் தமிழ்ப்பண்பும் கொண்ட திரு.சந்தானம் அவர்களும், அவரது குடும்பத்தாரும் 'இவ்வாறு நடக்கவே கூடாது' என்று வேண்டுமென்றே தங்களை மாற்றிக் கொள்ள விரும்பினால்கூட, அவர்களால் அப்படி மாற முடியாதவாறு தங்களை உண்மை மனிதர்களாக வளர்த்துக் கொண்டு விட்டனர்.

அந்த நடு இரவிலும் ஓட்டலுக்கு எங்களைக் கொண்டு வந்து விட்டே சென்றார் திரு.சந்தானம் அவர்கள்.

காலையில் சீக்கிரம் எழுந்து விட்டேன். ஜப்பானிய சினிமாக்கலை நிபுணர்களும், காண்ட்ராக்டரும் என்னைச் சந்திக்க, முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் விரைவில் எழுந்து வெளியே வந்தபோது, எனக்கு முன்ன தாகவே திரு.சந்தானம் அவர்கள் ஓட்டலுக்கு வந்து விட்டிருந் ததைப் பார்த்துத் திகைத்துப் போனேன்.

இயக்குநர் திரு.நீலகண்டன் அவர்கள் காலையில் என்னைச் சந்திப்பதற்காகக் குளித்து காப்பி சாப்பிட்டு விட்டுத் தயாராகி

இருக்கிறார். அவர் எப்போதும் 'செட்டாக', சிக்கனமாக வாழ்பவர்; வீண் ஆடம்பரம் எதையும் அவரிடம் காண முடியாது. தனது குடும்பத்தையும் அப்படியே ஒழுங்காக உருவாக்கியிருப்பவர். தான் வாங்கும், அல்லது தனது கண்ணில் படும் எந்தப் பொருளுக்கும் அதன் விலையை அறிந்து கொள்ளாமல் இருக்கவே மாட்டார். அந்த அவருடைய இயற்கைப்படி, தான் அருந்திய காப்பியின் விலையை விசாரித்திருக்கிறார். ஏறத்தாழ பத்து ரூபாய் என்றுசொல்லப் பட்டிருக்கிறது!

நான் வெளிநாடு புறப்படுமுன், எப்போதும் நான் போற்றிப் பாராட்டுபவரான எனது மரியாதைக்குரிய திரு.ஏவி.எம். (மெய்யப்பச் செட்டியார்) அவர்கள், எனக்கு சுமார் ஒரு மணி நேரம், ஜப்பானுக்குப் போனால் எப்படியெல்லாம் செலவு வகைகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று ஒரு தந்தை மகனுக்குச் சொல்வது போல், ஒரு விவரம் தெரிந்த நல்லாசான் தனது அன்புக்குரிய சீடனுக்கு எடுத்துச் சொல்வது போல், உபதேசம் செய்தார்கள்.

அவைகளில் ஒன்று இந்தக் காப்பியைப் பற்றியதுமாகும்.

''ஒட்டல்களில் கீழே சாப்பிடும் இடத்தில் சாப்பிட்டால் பணம் சிறிது குறைவுதான். ஆனால் நாம் இருக்கும் அறையில் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டால் கொஞ்சம்தான் அதிகமாகும். ஆனால் அறையில் கொண்டு வந்து வைப்பது இரண்டு மூன்று முறையாகச் சாப்பிடும் அளவிற்கு இருக்கும். கீழே கொடுப்பது ஒரே முறை சாப்பிடும் அளவிற்கு இருக்கும். கீழே கொடுப்பது ஒரே ஒரு 'கப்' தான் இருக்கும்.'' என்றும் சொல்லி... ''அறையில் கொண்டு வந்து கொடுப்பதை ஒரு முறை நமது தேவைக்கேற்ப அருந்தி விட்டு, மீதியை 'பிளாஸ்'கில் ஊற்றி வைத்துக் கொண்டால் மேலும் இரண்டொரு முறை சாப்பிட முடியும். இப்படிச் சிக்கனமாக இருக்க வேண்டும்'' என்றும் எடுத்துச் சொன்னார்கள். இது திரு.நீலகண்டன் அவர்கட்குத் தெரியாததால், இனி கீழே போய்ச்

சாப்பிடலாம் என்று முடிவெடுத்துக் கொண்டு விட்டார்களாம். அவரும் தனது நண்பர்களிடம், ''விமானத்தில் அதைக் கொண்டா! இதைக் கொண்டா! என்று இலவசமாக வாங்கிக் குடித்ததற்குத் தண்டனை இது'' என்று சொல்லிச் சிரித்தாராம். மேலுக்குச் சிரித்தாலும், வெளிநாட்டில் பணத்தின் நெருக்கடியை உணர்ந்த அவர், உள்ளுக்குள் வேதனைதான் பட்டார் என்றால் மிகையாகாது. காலை உணவு வெண்ணெய், ரொட்டியுடன் சரி.

திரு.ப.நீ. அவர்கள், ''என்ன எடுக்கவேண்டும் முதலில்? படப்பிடிப்பை எங்கே துவங்குவது?'' என்று என்னோடு கலந்து முடிவு செய்ய என் அறைக்கு வந்தார். நான் திரு.சித்ரா கிருஷ்ணசாமி, திரு.ப.நீ.மூவரும் இதைப்பற்றி விரிவாகப் பேசினோம். எங்களுக்கு உதவும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்த ஜப்பானிய சினிமாத் துறையினரைச் சந்தித்த பின்தான் முடிவெடுக்க இயலும் என்ற நிலையில், அந்த நண்பர்கள் வரும் வரையில் காத்திருந்தோம். அவர்களும் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு வினாடி கூடத் தாமதியாமல் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடன் பேசிய பின் ஒரு முடிவுக்கு வருவது எளிதாக இருந்தது.

நாங்கள் கொண்டு போயிருந்த பாடல்களை டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து தரக் கேட்டுக் கொண்டோம். எடுத்துப் போனார்கள்.

ஓசாகா நகரில் நடக்கும் 'எக்ஸ்போ'வில் முதலில் படப்பிடிப்பைத் துவக்குவதென்று நாங்கள் எடுத்த முடிவுப்படி அன்று மாலை சுமார் மூன்றேகால் (3-15-க்கு) மணிக்கு ஆல் நிப்பான் ஏர்வேஸ் (All Nippon Airways) என்ற கம்பெனியின் விமானத்தில் ஓசாகாவுக்குப் புறப்பட்டோம்.

நாம் 'ஜப்பான்' என்று சொல்லுவதைத்தான் அவர்கள் ஜப்பானிய மொழியில் 'நிப்பான்' என்று சொல்லுகிறார்கள்.

விமான நிலையத்தில் இங்கு எப்படி செல்லுகிறோமோ அது போலவே சென்றோம். எங்களது பெட்டி சாமான்களெல்லாம்



எம்.ஜி.ஆர்., மேட்டா ரூங்ராத்

வண்டியிலிருந்து இறங்கி வைக்கப்பட்டன. ஆனால் நிறுத்துப் பார்ப்பதற்காகச் சாமான்களை எடுத்து வைக்க அங்கே தொழிலாளர்கள் யாருமே இல்லை. நமது உடைமைகளை நாம்தான் கொண்டு போய் வைக்க, வேண்டும். நானே நமது தமிழ்நாட்டு உடையில் வேட்டி ஜிப்பாவோடு இருந்தேன். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வேலை செய்ய இயலாத வெளிநாட்டுச் சூழ்நிலை. தம்பி திரு.நாகேஷ் பொறுப்புணர் வோடு பெட்டிகளையும் மற்ற சாமான்களையும், தம்பி திரு.அசோகனுடன் போட்டி போடுவது போல் இரண்டு கைகளிலும் தூக்கிச் சென்று, கடமையுணர்வின் தன்மையைச் செயலில் காட்டுவதையும், இனம் புரியாத இளம் பெண்களும் மற்ற அனைவரும் தங்கள் வலிவுக்கு மேலாகவே உதவுவதை யும் கண்ட நான் திகைத்துப் போனேன். நானும் ஒத்துழைக்கா மலில்லை என்றாலும் எனது உடை எனக்குக் கொஞ்சங்கூட ஒத்துழைப்புத் தரவே இல்லை. மற்றவர்களோடு சேர்ந்து நானும் எனது கடமையைச் செய்ய முடியவில்லையே என்ற வேதனையோடு ஒசாகாவுக்குப் பயணம் புறப்பட்டோம்.

விமானத்திலிருக்கும் போதே எத்தனையோ எண்ணங்களின் சுழலுக்கிடையில் எனது உடையைப் பற்றி எண்ணியதோடு, ஒசாகாவில் இறங்கும் போது சாமான்களைத் தூக்கிக் கொள்ள வேண்டி வருமே, என்ன செய்வது என்ற கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியவனாயிருந்தேன். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தேன். ஒசாகா போய்ச் சேருவதற்கு முன் எனது உடைகளை மாற்றிக் கொள்வது என்று.

எந்தப் பெட்டியில் எனது உடைகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. எனவே அதைப் பற்றிப் பெண்களுக்கிடை யில் உட்கார்ந்திருந்த என் மனைவியிடம் கேட்டேன். அவள் சிரித்தவாறு, "உங்கள் உடைக்காகப் பெட்டியைத் தேடிப் போக வேண்டாம். இந்த பெண்களிடம் கேட்டால் கிடைக்கும். ஆனால் யாரிடமும் அவர்கள் அதைத் தயாராயில்லை. வேண்டு மானால் நீங்கள் கேட்டுப் பாருங்கள்" என்றாள்.

எனக்கு ஏதும் புரியவில்லை! 'எனது உடையை இவர்களிடம்

யார் கொடுத்தது? அதை இவர்கள் எப்படித் தூக்கிக் கொண்டு வருகிறார்கள்? எனது உடைகள்தான் என்று இவர்கட்குத் தெரியுமா?...' இப்படிப் பல கேள்விகளை என்னை நானே கேட்டுக் கொண்டவாறு பெண்களிடம் ''எனது பெட்டி ஏதாவது உங்களிடம் இருக்கிறதா?'' என்று கேட்டேன். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, ஒருவர் மற்றவரிடம் சொன்னார்கள்: ''நீ கொடுடி சந்திரகலா! நீதான் மொதல்லே கொடேன் மஞ்சுளா!''

''நீயாவது கொடேண்டி!'' - லதாவிடம் சந்திரகலாவின் விநயமான கோரிக்கை.

''ஊம் ஊம்'' லதாவின் இயற்கைக் கேற்ப இப்படிப் பதில். நான் திகைத்தவாறு கேட்டேன். ''ஆமா! நீங்க ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பெட்டியை வெச்சிருக்கீங்களா? நான் விமானத்துக்கு வரும் போது அப்படி எந்தப் பெட்டியும் உங்கக்கிட்டே இருக்கிறதை நான் பார்க்கலியே!''

சந்திரகலா ஓரளவு சிரித்தவாறு பதில் சொன்னார்: ''இல்லீங்க சார்! நாங்க மூணு பேருமே மூணு பெட்டிகளை வெச்சிருக் கோம். நாங்களும் ஏதாவது எங்களாலான கமையைத் தூக்கணும்னு ஏற்பாடு. இதிலெ யாராவது மொதல்லே கொடுத்துட்டா அவளுக்கு ஏதும் தூக்கிட்டுவர சாமான் இருக்காது. அதனாலெத்தான் இந்தப் போட்டி'' என்றாள்.

''மூணு பேரும் ஒண்ணாக் கொடுத்துடுங்க'' என்று சொல்லி வாங்கிக் கொண்டேன். அந்த மூன்று பெட்டிகளும் துணிகள் வைக்கக்கூடிய பெட்டிகளல்ல. கடையில் கொடுக்கப்படும் அட்டைப் பெட்டிகள். இவைகளை அவர்கள் வைத்திருப்பதை நான் பார்த்திருப்பினும் அவைகள் அந்தப் பெண்களின் பொருள் கள் (பவுடர், ஸ்னோ போன்றவை) என்று எண்ணியிருந்தேன். அவைகளில் பூட்கம் இருந்தது.

இவர்கள் குறிப்பிட்ட பெட்டிகளைத்தான் என்றில்லாது, மாற்றி மாற்றி தூக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர். என்னிடம் எல்லோரும் ஒரே சமயத்தில் கொடுத்தனர். யார் கையாவது

கொஞ்சம் பின் தங்கி இருந்தால், மற்றவர்களும் அந்த நிலைக்கே தங்களது கைகளையும் இழுத்துக் கொண்டனர். எப்படியோ பெரிய மனது வைத்து என்னிடம் தந்து விட்டார்கள்!

வேட்டி, சட்டையோடு ஜப்பானில் விமானமேறிய நான், ஒசாகாவில் ஆங்கிலப் பாணி உடையில் பாண்ட், ஷர்ட் இவைகளோடு இறங்கினேன். என்னோடு வந்த பலருக்கு ஒரே திகைப்பு. இவர் எப்போது எப்படி உடைகளை மாற்றிக் கொண்டார் என்று ஆச்சர்யத்தோடு பார்த்தார்கள். எனது அன்புக்குரிய நண்பர் திரு.மணியன் அவர்கட்குத்தான் மிகப் பெரிய ஆச்சர்யமும் அதோடு மகிழ்ச்சியும். இந்த நண்பர் திரு.மணியன் அவர்களைப் பற்றி ஒரு சிறிய சேதியைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

'ஆனந்த விகட'னில் ஆசிரியர் பணிபுரியும் இந்த திரு.மணியன் அவர்கள் என்னைச் சந்தித்த முதல் நாளே எனதுள்ளத்தில் அவரைப் பற்றி நல்லெண்ணத்தை உருவாக்கி விட்டவர்.

அறிஞர் அண்ணாவைப் பற்றி ஒரு கட்டுரை வேண்டு மென்று கேட்டு வந்த அந்த நெருக்கமான முதல் சந்திப்பு, என் வாழ்நாளில் குறிப்பிடத் தக்க ஒரு நல்ல நாளாக அமைந்து விட்ட ஒன்றாகும். அவருடைய கேள்விகள் என்னை சிக்கலில் மாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடல்லாது, எனது உண்மைக் கருத்துக்களை அப்படியே வெளியிடுவதற்கு உதவும் சிறந்த கேள்விகளாகவே அமைந்திருந்தன.

அவருடைய நேர்மையான உணர்வில் வளர்ந்த எங்கள் நெருக்கம், இப்போது சகோதரப் பாசத்தோடும் தோழமை உணர்வோடும் உள்ள ஒரு பந்தமாகப் பிணைக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் நான் சொல்லியே தீரவேண்டிய கட்டாய நிலைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறேன்.

அதாவது நான் ஜப்பானுக்குப் புறப்படுவதென்று எண்ணி யிருந்தாலும்... 'எக்ஸ்போ 70-ல் படமெடுத்தால்தான் நல்லது' என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் ஏற்படுத்தியவரே என்



சந்திரகலா, எம்.ஜி.ஆர்., நாகேஷ்

அன்புச் சகோதரர் திரு.மணியன் அவர்கள்தான். ''ஜப்பானில் படமெடுக்கத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்று அவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது சொன்னேன்.

''நீங்க ஜப்பான்லெ மட்டும் இல்லெ. வேறே எந்த வெளிநாட்டுல படமெடுக்கறாயிருந்தாலும் சரிதான், எக்ஸ்போ 70-ல் படமெடுக்கல்லேன்னா எந்தப் பிரயோஜனமுமில்லே'' என்று எடுத்த எடுப்பிலேயே அடித்துச் சொல்லிவிட்டார். எக்ஸ்போ 70-ஐப் பற்றிப் பலரும் பல விதமாகப் பேசி, அதன் சிறப்பினைச் சொல்லி, 'நாம் சும்மாவாவது போய் அதைப்

பார்க்கும் வாய்ப்பைப் பெறமாட்டோமா?' என்று ஆசை கொண்டிருந்த நேரத்தில், அதைப் படமாக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தால் எப்படியிருக்கும்?

அங்கு படமெடுக்கும் அனுமதியை இந்தியாவிலுள்ள கலைக்குழுவின் தலைவருக்கு எழுதினோம். ''அவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தில், நெரிசலில், போலீஸ் பாதுகாப்பு தர இயலாது என்ற காரணத்தையும், யாருக்கும் அப்படிப்பட்ட அனுமதி தரப்படவில்லை'' என்பதையும் குறிப்பிட்டும் பதில் அனுப்பிவிட்டார்கள். ஆசைக்கயிறு அறுந்து, திட்டங்கள் என்ற காற்றாடி தடுமாறி எங்கோ அலைக்கழிக்கப்படும் நேரத்தில்தான் திரு.மணியன் அவர்கள் ஜப்பானுக்கு அவருடைய காரியமாகப் புறப்பட்டுப் போக இருந்தார். அவர் சொன்னார். 'எந்தத் தைரியத்தில்?' என்று கேட்காதீர்கள். அவர் கண்டிப்பாகச் சொன்னார். ''நீங்கள் எக்ஸ்போ 70-ல் படமெடுக்கப் போகிறீர்கள். நிச்சயம். எங்கே, ஜப்பானுக்குப் புறப் படுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள் உடனே'' என்று அழுத்தமாக, உறுதியுடன் சொன்னார்.

நான் எக்ஸ்போ 70-ல் படமெடுக்கப் போகிறேன். இதைவிட இனிப்பான சேதி கலை உலகில் அந்த நேரத்தில் வேறு எதுவும் இல்லை. ஆனால் டில்லி பேரரசிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணி பெற வேண்டுமே, எப்படி இயலும்? அதற்கும் திரு.மணியன் அவர்கள் டில்லி சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உண்மையை எடுத்துச் சொல்லி, அனுமதி பெற முயல்வதாகச் சொல்லி அதன்படியே சென்று வந்தார். திரு.சித்ரா கிருஷ்ணசாமி அவர்களும் டில்லிக்குச் சென்று, முயன்று, நம்பிக்கையோடு வந்தார்.

திரு.மணியன் அவர்கள் புறப்பட்டு ஜப்பான் போய் விட்டார். அவர் நேரில் இருந்த போதிருந்த உற்சாகம் பின்பு இல்லை. திடீரென்று ஒருநாள் நிறைய வாசகங்கள் கொண்ட தந்தி வந்தது. அதில் ''எக்ஸ்போ'வில் படமெடுக்க எம்ஜியார் பிக்சர்சுக்கு அனுமதி கிடைத்து விட்டது; என்று புறப்படுகிறீர்கள்

என்பதைத் தெரிவிக்கவும். இங்கே மினி பஸ்களை முன்ன தாகவே ஒப்பந்தம் செய்து கொள்ளா விட்டால், போக்குவரத் துக்கு மிகப் பெரிய இடைஞ்சல் ஏற்படும். காமெரா போன்ற சாமான்களைப் படப்பிடிப்பு இடங்களுக்கு மாற்றுவது இயலாத காரியம். ஏனெனில் இங்கு கூலி ஆட்கள் கிடையாது.'' இப்படித் தந்தி வந்தது.

அதன் பிறகு முன்பைவிட வேகமாக ஜப்பானுக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொடங்கினோம். வெளிநாட்டுச் செலாவணி அனுமதி கிடைக்காமல் எந்தத் தைரியத்தில் பயண நாளின் தேதியை நிச்சயிப்பது? எந்த நடிக, நடிகையரிடமும் குறிப்பிட்டு 'இந்தத் தேதியில் புறப்படு கிறோம்' என்று திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை!

டில்லிக்குச் சென்ற திரு.'சித்ரா கிருஷ்ணசாமி' அனுமதிக் கடிதம் அனுப்பப்பட்டு விட்ட சேதியைக் கொண்டு வந்தார். எல்லோரும் காத்திருந்தோம்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. அனுமதி வரவில்லை. விரிவாக விசாரித்ததில், பம்பாயில் அந்தக் கடிதம் வந்து சேர்ந்திருப்பதாகவும் அங்கு சென்று கேட்டால்தான் கிடைக்கு மென்றும் தெரியவந்தது. 'சித்ரா' பம்பாய் சென்றார். இதற்குள் மேலும் இரண்டு தந்திகள் திரு.மணியன் அவர்களிடமிருந்து வந்து விட்டன.''குறிப்பிட்ட தேதியோடு எக்ஸ்போ முடிந்து விடுகிறது. நாளாக ஆக மக்கள் கூட்டம் அதிகமாகிறது. கூட்டம் அதிகமாகி விட்டால் நினைத்தவாறு ஏதும் எடுக்க இயலாமற் போய் விடும். எனவே எப்போது புறப்படுகிறீர்கள் என்பதைத் தெரிவியுங்கள்'' என்று தந்தியின் வாசகம் இருக்கும்.

நாங்கள் அனுமதியை எதிர்ப்பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தோம். பம்பாயிலிருந்து குறிப்பிட்ட தேதியன்று அனுப்பப்பட்டு விட்டதாகவும் இங்கு ரிசர்வு பேங்கில் (வங்கியில்) பெற்றுக் கொள்ளலாமென்றும் சொல்லப்பட்டது. உடனே தேதியை நிச்சயமாக்கினோம். செப்டம்பர் நான்காம் தேதியன்று புறப்படுவதாக நிச்சயிக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளாகப் போய்க் கொண்டிருந்தது. ஆனால் அனுமதி மட்டும் வரவில்லை. 'சித்ரா' அவர்களிடம் ''அனுமதி முன்னதாகக் கிடைக்காமலேயே ஏதோ ஒரு தைரியத்தில் தேதியை நிச்சயித்து விட்டோம். இன்னமும் நாலைந்து நாட்கள் கூட இல்லையே?'' என்று கேட்டோம்.

அவர் மீண்டும் முயன்றார். தந்தி அனுப்பினார். கடிதம் எழுதினார். பம்பாயிலிருந்து ''எந்த முறையில் அடிப்படையில் அனுமதி வழங்குவது என்று விதிமுறைகள் தெளிவுபடுத்த வில்லை. எனவே இதற்குமுன் வெளிநாடு சென்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது எந்த வகையில் என்று அறிய, அத்தகை யவர்களின் ஒப்பந்தமோ, அனுமதிக் கடிதமோ இருந்தால் அவைகளின் நகல்களை அனுப்புங்கள். பார்த்து என்ன செய்யலாமென்று முடிவெடுக்க உதவியாயிருக்கும்'' என்று தகவல் வந்தது. இந்த நிலையில் ஒரு வாரத்திற்கு முன் சொல்லப்பட்டது என்னவென்றால், 'அனுமதி சென்னை ரிசர்வ் பாங்குக்கு அனுப்பப்பட்ட'தென்று.

நல்ல வேளையாக இயக்குனர் திரு.ஸ்ரீதர் எங்களுக்கு முன்னோடியாக வெளிநாடு சென்று படமெடுத்து வந்திருந்த தால், அவருடைய ஒப்பந்தத்தின் நகலை அனுப்பினார் திரு.சித்ரா அவர்கள். அது சேர்ந்ததா இல்லையா என்றறிய, அனுப்பியவைகளின் நகல்களை எங்கள் கம்பெனியில் பணியாற்றும் எஸ்.கே.டி.சாமி அவர்களிடம் கொடுத்துப் பம்பாய்க்கு அனுப்பினோம். விடுமுறை நாள். எனவே அன்று பார்க்கவில்லை. மறுநாள் பதினோரு மணிக்கு மேல் அலுவலகம் சென்று பார்த்துப் பதில் சொல்லுவதாக அந்த அதிகாரி சொல்லி விட்டார். இரண்டே நாட்கள் பாக்கி. அனுமதி வரவே இல்லை. மீண்டும் முயன்ற போது, ''அனுப்பியாகி விட்டது. ரிசர்வ் பாங்க் அதிகாரியைச் சந்தியுங்கள்'' என்று தகவல் வந்தது.

கடைசியாக செப்டம்பர் மூணாம் தேதி அன்று பிற்பகல் தகவல் வந்தது- அனுமதி வந்து விட்டது என்று. நான் 'எங்கள்

தங்கம்' படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தேன். சரியாக ஐந்து மணிக்கு நான் அமெரிக்கன் பாங்கிக்குச் (வங்கிக்கு) சென்று உத்தரவாதப் பத்திரத்தில் கையெழுத்திட்டு, டாலர்களைப் பெற்று, ரிசர்வ் வங்கியின் அனுமதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு... இப்படி ஏறத்தாழ ஆறு மணி அளவில் முடித்துக் கொண்டு, மீண்டும் ஸ்டுடியோ சென்று படப்பிடிப்பில் கலந்து கொண்டேன்.

பயணம் இடையூறின்றி நிறைவேற நான் இத்தனை சிரமங்களை மற்றவர்கட்குக் கொடுத்து, எத்தனை ஏமாற்றங்கள் எனக்கு ஏற்படினும் ஜப்பான் செல்ல வேண்டுமென்று நான் தீவிர முடிவிற்கு வந்ததற்கும் ஒரு காரணம் திரு.மணியன் அவர்கள். 'எக்ஸ்போவில் படமெடுக்க அனுமதி வழங்கப்பட்டு விட்டதாக'க் கொடுத்த தந்திதான் என்றால், அப்போது தான் எனது ஜப்பான் பயணத்திற்குள்ள நியாயமான காரணத்தைச் சொல்லுகின்றவனாவேன். அது மட்டுமா? எத்தனை ரூபாய்கள் வெளிநாட்டில் செலவு செய்ய அனுமதி கொடுக்கப்படுகிறதோ அதற்கு நாலைந்து மடங்கு அதிகமாக வெளிநாட்டுப் பணத்தை நான் சம்பாதிப்பேன் என்று உத்திரவாதம் கொடுக்க வேண்டும். அதற்குரிய மொத்தத் தொகையைக் கட்ட வேண்டும். அந்தப் பணத்திற்கு வங்கிகள் உத்தரவாதம் கொடுக்கலாம். அத்தகைய உத்தரவாதத்தை, அதாவது நான் கொடுக்காவிட்டால் தான் கொடுப்பதாக எழுதிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்கன் வங்கி (பாங்க்) அதிகாரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததே திரு.மணியன் அவர்கள்தான். அதாவது, பணத்திற்கு உத்தரவாதமும் வாங்கித் தந்து, படமெடுக்க அனுமதியும் வாங்கித் தந்தவர் திரு.மணியன் அவர்கள் ஆவார்கள். அவர்தான் என் உடை மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தார்!



# 7

ஏறத்தாழ நாற்பத்தைந்து நிமிடப் பயணத்திற்குப் பின் சுமார் நான்கு மணிக்கு ஓசாகா விமான நிலையத்தை அடைந்தோம்.

ஓசாகாவில் 'எக்ஸ்போ'வை ஒட்டியிருந்த ''மினாமி சென்றி அபார்ட்மெண்ட்'' (மினாமி குவார்ட்டர்ஸ்) என்ற இடத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எக்ஸ்போவுக்கு வருகின்ற விருந்தினருக்காகப் பல கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட்டிருந்தன. தீப்பெட்டிகளை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி வைத்தால் எப்படி இருக்குமோ, அதுபோல் அந்த வீடுகள் பார்க்க அழகாக இருந்தன. நாங்கள் தங்கிய இடம் பத்திரிகையாளர்கள் வந்தால் தங்குவதற்காகக் கட்டப்பட்டதாகும். அதில் எப்படியோ நாங்கள் தங்க ஒரு சில அறைகளை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

எனது மரியாதைக்குரிய திரு.ஏ.வி.எம்.அவர்கள் நான் சென்னையை விட்டுப் புறப்படும் முன்பே, ''ஓசாகாவில் தங்க இட வசதி கிடைக்காது; யாராவது ஏற்பாடு செய்திருப்பதாகச்

சொன்னால் நம்ப வேண்டாம்'' என்று எச்சரித்திருந்தார். நாங்கள் ஓசாகாவில் தங்க இருந்த கட்டிடத்துக்குப் போய், சாவியை அவர்கள் தருவதற்கு ஆன ஒவ்வொரு நிமிடத் தாமதத்திலும், ''எனக்கு அறை கிடைக்காது என்ற பதில்தான் வரும்'' என்று முடிவு கட்டி, வேறு எங்கே தங்குவது, எப்படி அதை வெளியே சொல்வது என்று தெரியாமல் குழம்பிய நிலையில் இருந்தேன். இந்த உண்மை தெரியாமல், 'அறை இல்லை' என்ற செய்தியைத் திடீரென்று கேட்டு மற்றவர்கள் அதிர்ச்சி அடையும் நிலை ஏற்படக் கூடாதே என்ற எண்ணத்தில், அவர்களுக்கும் இந்த நெருக்கடி நிலை புரியட்டும் என்று முடிவு செய்து, திரு.மணியன் அவர்களிடம், ''இப்போது என்ன செய்வது?'' என்று கொஞ்சம் உரக்கக் கேட்டேன். அவர் ஏதும் பதில் சொல்லவில்லை. மற்றவர்கள் காதில் விழுந்ததா இல்லையா என்று கவனித்தேன். அறையில் சாமான்களை வைத்து விட்டு, 'எக்ஸ்போ'வுக்குச் செல்லும் ஆர்வத்தில் இருந்த அவர்கள் காதில் நான் கேட்டது விழவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் சாவிகள் கொடுக்கப்பட்டன. அறை மிகவும் சிறியதாயிருந்தது.

அறைக்குள் நுழைந்ததும் வாயிற்படிக்கருகில் உள்ளே ரப்பரால் செய்யப்பட்ட மிதியடிகள் இரண்டு சோடிகள் இருந்தன. சாப்பிட, சமையல் செய்ய, இப்படிப்பட்ட வேலைகட்காக ஒரு அறை; சுமார் ஏழெட்டடி அகலம், பதினைந்து பதினாறு அடி நீளம் உள்ளது. அதற்கு இடது பக்கத்தில் குளிக்க முதலிய வசதிகளுக்காக ஒரு அறை.

வலது புறம் ஒரு அறை; பாய் விரித்து அதில் படுக்கை போடப்பட்டிருந்தது. அதைச் சுற்றி 'டானா' போன்ற சுவரில் பலகைகளால் அலமாரிகள், மறுபுறம் கண்ணாடிக் கதவு பொருந்திய, கண்ணாடிகள் அமைத்த பலகைத் தடுப்புகள் கொண்ட தடுப்பு, அதைத் திறந்து கொண்டு வெளியே சென்றால் வராண்டா. இதன் அகலம் நான்கைந்தடி; பக்க வாட்டில் நீளம் சுமார் பத்துப் பன்னிரண்டடி இருக்கும். அதாவது முதல் அறையின் (அதாவது சமையல் அறையின்) நீளத்திற்குள்




'எக்ஸ்போவில்' எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

படுக்கை அறையும் வெராண்டாவும் அடங்கும். மெத்தை விரிக்கப்பட்டிருந்தது போன்ற அறையை, ஒரு சிறிய பாதுகாப்புள்ள வீட்டில் அமைத்துக் கொண்டு அங்கு வாழவேண்டுமென்ற ஆசை, எண்ணம் இப்போதும் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த அறையில் சாமான்களை நாங்களே கொண்டு சேர்த்து விட்டு, 'எக்ஸ்போ' பார்க்கப் புறப்பட்டோம்.

திரு.ஹென்றி என்னும் பெயர் கொண்ட நண்பர் எங்களுக்கு உதவ நியமிக்கப்பட்டிருந்தார்.

படப்பிடிப்புக்கு ஏற்பாடுகள் செய்து தரவேண்டும்; மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும். பொதுவாகச் சொல்லப் போனால் விவரம் தெரியாத எங்களுக்கு உயிரோடு நடமாடும் அகராதியாக அவர் பயன்பட வேண்டும்.

எக்ஸ்போவுக்குப் போனோம்.

கூட்டம் அதிகமாக இருந்ததால் அனுமதிச் சீட்டுப் பெற்று வரச் சிறிது நேரமாயிற்று.

மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு என்று முன் வாயில் களுக்குப் பெயர் கொடுத்திருந் தார்கள்.

உள்ளே சென்றோம். எக்ஸ் போவின் ஆரம்ப இடம் என்பதை எங்கிருந்து கவனிப்பது என்ற எண்ணமே அப்போது எனக் கில்லை. எல்லாவற்றையும் உடனே, ஒரே நேரத்தில் பார்த்து விட வேண்டும் என்கிற மன நினையில் தான் நானிருந்தேன். எவ்வளவு சீக்கிரமாக எல்லா வற்றையும் பார்த்துவிட இயலுமோ, அப்படிப் பார்த்துவிட வேண்டும் என்ற வேகம் தான் எனக்கிருந்தது. படிகள் பலவற்றைக் கொண்ட ஒரு பெரிய மேடையின் மீது ஏறிச் சென்றோம். அந்த மேடையில் நடந்து சென்ற போது அப்படியே திகைத்த , பிரமை கொண்ட நிலையில்தான் நானிருந்தேன். மூக்கு கோணலாக இருந்த ஒரு மனித உருவத்தின் முகத்தை மட்டும் கொண்ட ஒரு பெரிய சிலை அந்த மேடைக்குக் கீழே அடி மட்டத்திலிருந்து மிக உயரத்தில்

காட்சிதந்தது. தூணுக்கு மேலே அந்த முகம் இருந்தது. அந்தத் தூணுக்கு இரு கைகளைப் போல், மரத்தின் இரு கிளைகள் என, மேலேயுள்ள கட்டிடத்தைத் தாங்குவதற்காக அமைக்கப்பட்டது போல அது இருந்தது. இரு பக்கமும் அந்தப் பெரிய கூடத்தை முன் பக்கம், பின் பக்கம் என இரு பகுதிகளாகப் பிரித்திருந் தார்கள்.

முகம் இருந்த பக்கத்தில் பல வேடிக்கைகள் காண்பிக்கப் பட்டன. பின்பக்கம் மறு பாதியில் பல்வேறு நாட்டினரின் நடனக் காட்சிகள், புகழ் மிக்க பாடகிகள் முதலியவர்களின் நுணுக்க மிக்க கலைத் திறமை வாய்ந்த நிகழ்ச்சிகள் நடை பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்னை நேரு விளையாட்டு மைதானத்தில் மக்கள் உட்கார்ந்து பார்க்க உள்ள 'காலரி' (படி வரிசை) போல் படிகளைக் கட்டி வைத்திருந்தார்கள்.

அப்போது எந்த நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை. மாலை ஏழு மணிக்கு மேல்தான் மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

எனவே முடிந்த வரையில் சீக்கிரம் மற்ற இடங்களைப் பார்க்க விரைந்தோம்.

எங்கு பார்த்தாலும் தீப அலங்காரம், மண்டபங்கள் போன்ற, ஆனால் புதுமை நிறைந்த கட்டிடங்கள். வண்ணக் கலவைகளின் சேர்க்கையை நீரின் மேல் விழச் செய்த ஒளிக் கதிர்களின் அழகு. இப்படி எதைப் பார்ப்பது, எதை விடுப்பது என்று தெரியாதவாறு நடந்து சென்றோம்.

**உள்ளே படம் எடுக்க அனுமதி பெறுவது எப்படி என்பதில் சிந்தனை சென்றது. நேரில் கண்களால் பார்த்து மகிழுவதை எல்லாம் படமாக்கக் குறைந்தது பதினைந்து நாட்களாவது ஆகும் என்று புரிந்தது. நாங்கள் படப்பிடிப்புத் துவங்க இருப்பதோ எட்டாம் தேதியிலிருந்து தான். ஆறாம் தேதி மாலையில்தான் எக்ஸ்போவுக்குள் நுழைந்தோம். மறு நாள் ஏழாம் தேதி, ஒரு நாள்தான் எங்களுக்கு நேரம் இருந்தது.**

பதினான்காம் தேதியோடு எக்ஸ்போ காட்சியே முடிந்து விடுகிறது. எங்களுக்கு ஆசை இருந்தாலும் பணம் இல்லை, அத்தனை நாட்கள் தங்குவதற்கு. இருப்பதாக இருந்தாலும் பொருட் காட்சியே ஒரு வாரத்தில் முடிந்து விடுகிறது.

நாங்கள் ஆறாம் தேதி இரவு பத்து மணி வரை பார்த்தவை அந்த எக்ஸ்போவில் நூறில் ஒரு பகுதி கூட இல்லை. என்ன செய்வது? இப்படிக் குழம்பிய நிலையில் முடிந்தவரை சுற்றிப் பார்த்தோம்.

இந்தியன் பெவிலியனில் இருந்த அசோகா ரெஸ்டாரண்டில் இட்லி சாம்பார், பஜ்ஜி சாப்பிட்டோம்.

இவை கீழே தரப்படுகின்றன. மேலே அசைவ உணவுகள் தரப்படுகின்றன. அதன் நிர்வாகி திரு.வரதராசன் மிகவும் அன்போடும் பொறுப்போடும் கவனித்தார் பாகுபாடின்றி. வெளி நாட்டவர் பஜ்ஜியையும் இட்டிலி சாம்பாரையும் மிகவும் ரசித்துச் சாப்பிடு வதைக் கண்டோம்.

எக்ஸ்போவில் நுழைந்ததும் குழந்தைகளை, வயதான வர்களை அழைத்து வருபவர்களுக்கு தள்ளு வண்டிகளைத் தருவதற்காக ஓர் அமைப்பு இருக்கிறது. அங்கு சென்று தேவை உள்ளவர்கள் தமது குழந்தைகளுக்காகவோ, தள்ளாத வயது வந்தவர்களுக்காகவோ தள்ளு வண்டி களைப் பெற்று, அவைகளில் அவர்களை உட்கார வைத்துத் தள்ளிச் சென்றார்கள். பார்த்து முடிந்து வெளியே போகும் போது வண்டிகளைப் பத்திர மாக ஒப்படைத்து விட்டுப் போனதையும் நான் பார்த்தேன். தமது சொந்த சொத்தைப் பாதுகாப்பது போல் எச்சரிக்கை யோடும் கவனத்தோடும் பாதுகாத்துத் திரும்ப ஒப்படைத்த உயர் தன்மையைக் கண்டது என் மனம் வியந்து பாராட்டியது.

லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட அந்தக் கண் காட்சியில் எந்த இடத்திலும் தரையிலும் குப்பையைக் காண முடியாது. மூலைக்கு மூலை அழகான குப்பைத்தொட்டிகளை வைத்திருந்தார்கள். குழந்தைகள்கூட தம் கையில் இருக்கும் காகிதங்களையோ, குளிர்பானத்தைச் சாப்பிட்டபின் இருந்த




டப்பாக்களையோ, அவை போன்ற எந்தப் பொருள்களானாலும் அவற்றைக் குப்பைத் தொட்டியில்தான் போடுவதைக் கண்டேன். அங்கே அவர்கள் யாரும் கண்ட இடத்தில் துப்புவதில்லை. ஆகவே நாம் எங்கு வேண்டுமானாலும் தைரியமாகக் கீழேயே தரையில் உட்காரலாம்.

அங்கு வந்திருந்த வெளிநாட்டு மக்களில் மிகப் பெரும் பாலோர் தமிழ்நாட்டுச் சேலையை மட்டுந்தான் மகிழ்ச்சி யோடும் வியப்போடும் கவனித்தார்கள். அப்படிப் பார்க்கும் பெண்களில் பலர், எங்களோடு வந்த பெண்களைத் தங்களோடு அருகில் நிறுத்தித் தமது உறவினர்களைக் கொண்டு படம் பிடித்துக் கொண்டு, பற்கள் முழுவதும் வெளியில் தெரியச் சிரித்து, மகிழ்ச்சி பொங்க நன்றி கூறி விட்டுச் சென்றனர்.

ஐஸ்க்ரீம் போன்றவைகளை வாங்கிச் சாப்பிட்டால் பசியே தணிந்து விடும். எத்தகைய, எந்தெந்த உணவு தேவையோ அவை அத்தனையும் உடனுக்குடன் சூடாகத் தரக்கூடிய உணவுக் கடைகள் திரும்பும் இடமெல்லாம் இருந்தன. இப்படி எல்லா வசதிகளும் நிறைந்திருந்த அந்த இடத்தில் பணம்தான் நம்மிடம் இருக்கவேண்டுமே தவிர, வேறு எந்தக் குறையும் நமக்கு அங்கு ஏற்படுவதற்கு இடமே இல்லை. என்னிடமோ சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட டாலர்களில் கொஞ்சம்தான் இருந்தன. மீதி டாலர்கள் திரு.வீரப்பன் அவர்களிடம்தானிருந்தன. அவர் வழியில் ஹாங்காங்கில் படமெடுக்க அங்கு ஏற்பாடு செய்வதற் காக இறங்கியிருந்தார். அவர் வரும் வரையில் யாருடைய அவசரத் தேவையைக் கூட கவனியாதவனைப் போல் நடிக்க வேண்டியவனாக இருந்தேன். ஆமாம். உண்மை! என் மனத்திற்குத் தெரிந்து எனது வாழ்க்கையிலும் நடித்த முதல் அனுபவம் அன்று தான் எனக்கு ஏற்பட்டது! எவ்வளவு சிக்கனமாக இருக்க முயலுமோ, அந்த எல்லைக் கோட்டில் காலை வைத்திருந்த முதல் மனிதனாக நானிருந்தேன் என்பது நூற்றுக்கு நூறு சரியானதாகும்.

எக்ஸ்போவைப் பார்க்கும் நேரம் முடிந்தபின் திரும்பி னோம்.



'எக்ஸ்போ'வில் காட்சி படமாகுமுன் காமிரா வழியே பார்க்கிறார் எம்.ஜி.ஆர்.

கதையைப் பற்றி திரு.ப.நீலகண்டன் அவர்களிடமும், திரு.சொர்ணம் அவர்களிடமும் எனது கருத்தினைச் சொன்னேன். மறுநாள் காலையிலேயே எக்ஸ்போ போவதாக முடிவெடுத்தோம்.

மறுநாள் ஏழாம் தேதி அன்று காலையிலேயே எல்லோரும் தயாரானோம். திரு.சொர்ணம் அவர்கள், நாங்கள் திரும்பும் வரையில் எங்களுடன் இருப்பதாகவும், தங்குவதற்கு இடம் மட்டும் ஏற்பாடு செய்து உதவினால்போதும் என்றும் சொல்லிவிட்டார். என்னோடு வந்த நண்பர்கள், எந்தக் கஷ்டத்தையும் ஏற்கத் துணிந்தவர்கள். ஆகையால், தங்களுடைய அறைகளில் அவ ருக்கு இடம் கொடுக்க முன் வந்தனர். அதற்காக எனக்கு எந்தத் தனிப்பட்ட செலவும் ஆகாது என்ற காரணத் தால் ஏற்றுக் கொண்டேன்.

ஒன்பது மணிக்கெல் லாம் எக்ஸ்போவுக்குச் சென்றோம். பாவம்! பெண்கள்! அவர்கள் இரவில் தூங்கினார்களா என்று சந்தேகப்படும் அளவுக்கு, அவ்வளவு ஆர்வத்தோடு விடியற் காலையிலேயே எழுந்து, எங்களுக்கு முன் மூவருமே தயாராகி இருந்தனர்.

ஒன்பது மணிக்கு மேல்தான் அனுமதிச் சீட்டு வழங்கு வதாகச் சொன்னதால், குறிப்பிட்ட நேரத்திற்கே அங்கு சென்று விட்டோம். ஆனால், ஆயிரக்கணக்கானவர்கள் எங்களுக்கு முன் அங்கே 'க்யூ'வில் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தோம்.



உள்ளே நுழைந்ததும் பல இடங்களைச் சுற்றிப் பார்க்க எங்களுக்கு மிகவும் ஆசையாக இருந்தது. அங்கே இருந்த மக்கள் கூட்டத்தில், எங்களில் யாராவது ஒருவர் கொஞ்சம் பின்தங்கி விட்டாலும், தேடிப் பிடிப்பது மிகவும் சிரமம். ஒரு நல்ல யோசனை தோன்றியது. எங்கள் குழுவில் உயரமாகவும் விபரம் தெரிந்தவராகவும் உள்ள ஒருவர் எங்களுக்கு முன்னே கையில் ஒரு பத்திரி கையை உயர்த்திப் பிடித்த வாறு செல்ல வேண்டியது; மற்றவர்கள் அவரைப் பின் பற்றிச் செல்ல வேண்டியது என்று முடிவு செய்தோம். இந்த முடிவுப்படி, இந்தப் பொறுப்பு, எங்கள் குழுவில் உயரமாகவும், விபரம் புரிந்த வருமாகவும் இருந்த திரு. 'சித்ரா கிருஷ்ணசாமி அவர் களின் தலைமீது விழுந்தது.

அவர் முன்னே செல்ல, நாங்கள் பின்னால் சென்றோம். சுற்றிலுமுள்ள காட்சிகளைப்

பார்க்காமல், அவரது கையையே பார்த்துக் கொண்டு நடப்பதற்கு எக்ஸ்போவுக்கு ஏன் செல்ல வேண்டும்?

நாங்கள் எங்களைச் சுற்றியுள்ள காட்சிகளைப் பார்ப்போம்; நின்று விடு வோம். உடனே பக்கத்தில் இருப்பவர்கள் அழைப் பார்கள்; நாங்கள் எங்களைச் சேர்ந்த மற்றவர்களை அழைப் போம். என்னைப் பார்க்கவிடாமல் அழைத்த சிலரிடம் சிறிது கடிந்து கொள்ள வேண்டியிருந்தது. நான் என் கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ள முடிந்தது; காட்டிக் கொண்டேன். பலருக்கு அது இயலவில்லை; அவ்வளவுதான்! திரு.நாகேஷோ அல்லது திரு.அசோகனோ பேசாதிருப்பார்களா? என்னோடு சுற்றித் திரிந்த அவர்கள் அவ்வப்போது காணாமல் போய் விடுவார்கள். வேறு இடத்தில் எங்களைச் சந்திப்பார்கள்.


அப்படி சந்தித்த ஓர் இடத்தில், அவர்களோடு தமிழகக் கலைஞர்கள் சிலரையும் கண்டேன். திரு.பி.எஸ்.ரங்கா அவர் களிடம் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றும் திரு.ஹரி என்பவரும் அவர்களில் ஒருவர். அவரைக் கண்டதும் என் உள்ளத்தில் ஏதேதோ கற்பனைகள் உதயமாயின.

''எத்தனை நாட்கள் எக்ஸ்போவில் தங்குவீர்கள்? என்று கேட்டேன், ஆர்வத்தோடு.

''இரண்டு மூன்று நாட்கள் தங்குவேன்'' என்று அவர் சொன்ன பதில், எனக்கு நல்லதொரு இனிப்பான சேதியாக இருந்தது.

என் கற்பனை இதுதான்; 'மிச்சல்', 'ஏறி' என்ற இரண்டு ஒளிப்பதிவு கருவிகளை (கேமரா) நாங்கள் கொண்டு சென்றிருந் தோம். திரு.ஹரி சம்மதித்தால் ஒரே சமயத்தில் இரண்டு ஒளிப்பதிவுக் கருவிகளையும் பயன்படுத்தலாமே! இது தான் என் ஆசை. இதை திரு.நீலகண்டன் அவர்களிடம் சொன்னேன். அவர் ஹரியிடம் கேட்டார்; அவரும் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். அவரை விட எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனெனில், ஒரு பைசா கூடச் செலவு செய்யாமல், ஒரு ஒளிப் பதிவாளரை ஏற்பாடு செய்துவிட்டேன்.

திரு.மணியன் அவர்கள் பத்திரிகைகாரர்களை அனுமதிக்கும்



எம்.ஜி.ஆர்., மேட்டா ரூங்ராத்

'பாஸ்' வாங்கிக் கொண்டு வந்தார். இந்தப் 'பாஸ்' வைத்துக் கொண்டிருப்பவர் எந்த அரங்கத்துக்குள்ளும் தாராளமாகப் போகலாம். 'க்யூ'வில் நின்றுதான் உள்ளே போக வேண்டும் என்பதில்லை. வி.ஐ.பி.(V.I.P) போகும் வழியில், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் நாங்களும் போகலாம்.

திரு.மணியன் அவர்களிடம் விளையாட்டாகக் கேட்டேன்: ''நான் பத்திரிகைக்காரரா?'' என்று

அவர் கொஞ்சம் கூட யோசிக்காமல் பதில் சொன்னார்: 'முன்பு நீங்கள் 'சம நீதி' பத்திரிகையின் சிறப் பாசிரியர். இன்று 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் 'நான் ஏன் பிறந்தேன்?' கட்டுரை ஆசிரியர்!'' என்று.

சில அரங்குகளை அந்தப் 'பாஸி'ன் துணைகொண்டு பார்த்தோம், எங்களில் ஒரு சிலர் மட்டும். ருஷ்ய நாட்டின் அரங்கில் படம் எடுக்கலாம் என்று முடிவு செய்தேன். எடுக்க முடியுமா; அனுமதி கிடைக்குமோ- என்ற சந்தேகம் வேறு. திரு.மணியன் அவர்கள், ''சந்தேகப் படாதீங்க, முயன்று பார்ப்போம்'' என்றார். உடனே தனது உடன்பிறப்பான

பையையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டார். அவருடைய கையை வேண்டுமானாலும் மறந்து எங்காவது வைத்து விட்டுப் போவாரே தவிர, அந்தப் பையை மட்டும் விட்டுப் போக மாட்டார்.

முதலில் ருஷ்ய அரங்கில் படம் எடுக்க வேண்டும் என்ற எனது ஆசைக்கு நியாயமான காரணம் இருந்தது. நாங்கள் அந்த அரங்கத்திற்கு உள்ளே சென்றதும், விசாலமான கூடத்தைக் கண்டோம். சுவரில், இடது பக்கத்தில், பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ருஷ்ய நாட்டின் மாளிகைகள் நிறைந்த வீதியை பல வண்ணங்களில் வரைந்திருந்தார்கள். வலது பக்கத்தில், நாகரீகமடைந்த முறையில், வசதியும் நவீன நாகரீகமும் மிளிர, மக்களுக்குப் பயன்படும் வகையில் உருவாகி இருந்த வீதியை வரைந்து வைத்திருந்தார்கள். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் பழைய மாளிகைகள், வீண் ஆடம்பரமும் தேவையற்றதுமான அமைப்புடன் கூடிய ஒன்று என்று நிச்சயம் கருதுவார்கள்.

அவர்கள் சினிமாவின் பயனை நன்கு தெரிந்து பயன்படுத்தி இருந்தார்கள். எங்கு திரும்பினாலும், ருஷ்ய நாட்டின் கனி வளம், காடு வளம், நீர்வளம், நிலவளம், இயந்திர விஞ்ஞான வளர்ச்சி - முதலியவைகளை எல்லாம் காட்சியாக ஆங்காங்கே சிறுசிறு திரைகளில் காண்பித்துக் கொண்டிருந் தார்கள். நடனக்காட்சிகளையும், கலைத் திறமையும், நிலாப் பயணம் போன்ற சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆமாம் - அவர்கள் கலையையும், கலைஞர்களையும் மிகவும் மதித்தார்கள் என்பதையும் கண்டேன். படப்பிடிப்புக்குப் பயன்படுத்தும் விளக்குகளுக்குள் நடிகர்களின் படங்களை வைத்து, ஒளியேற்றி, காட்சிக்கு வைத்திருந்தார்கள். தனிப்பகுதி ஒன்றில் வேறு எந்த அரசியல் தலைவர்களுக்கும் இடம் தராத ருஷ்யர்கள் கலைஞர்களுக்கு மட்டும் இடம் தந்திருந்தார்கள் என்றால், கலைஞர்கள் காட்சிப் பொருட்களல்லர்; நாட்டுத் தொண்டிலும் வளர்ச்சியிலும் மிகப் பெரிய பங்கு கொள்ள வேண்டியவர்கள் என்பதையும், ருஷ்ய

நாட்டுக் கலைஞர்கள் அந்த இலக்கணத்தில் தங்களை வளர்த்து வாழ்பவர்கள் என்பதையும் மிக அழகாக தெளிவுபடுத்தி விட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு இடத்தை யும் மக்களுக்குத் தேவையான செய்திகளைச் சொல்லித்தான் பயன்படுத்தி இருந்தார்கள்.

இதுதான் அந்த அரங்கில் முதலில் படம் எடுக்க நான் விரும்பியதற்குக்காரணம்.

அந்த அரங்கின் வெளிப்புறத்தில் உச்சியை, நாம் தலையை மிகவும் உயர்த்தித் தான் பார்க்க வேண்டும். மனிதன் யாருக்கும் அடிமையில்லை என்ற லட்சியத்தைக் கூறும் அவர்களின் கொள்கையைப் போலவே, அந்த அரங்கின் கட்டிடமும் விளங்கியது. அதைவிட, அந்த ருஷ்ய நாட்டுக் கொடி பறப்பதை அண்ணாந்து பார்ப்பவர்கள், உழைப்பின் உயர்வைப் பார்ப்பது போல் எண்ணிக் கொண்டார்கள் என்றால் ஆச்சரியப்படுவதற் கில்லை. அப்படிப்பட்ட எண்ணம் - உழைப்பவனே உயர்ந் தவன் என்ற முடிவு - அவர்களுக்கு இல்லை என்றால் அந்த அரங்கில் இருந்த கூட்டத்தில், லெனின் அவர்களின் படத்தைத் திரையிடுகிற திரைக்குப் பக்கத்தில், சுமார் இருபது இருபத் தைந்து அடி உயரத்தில் ஒரு தொழிலாளியின் பிரம்மாண்டமான சிலையை வைத்து, நமக்கு நம்மைப் பற்றி சிந்திக்க வாய்ப்புத் தந்திருப்பார்களா?



# 8

அந்த இடத்தில் நாம் நின்று கொண்டிருக்கின்ற ஒவ்வொரு வினாடியும் நம் மீதும், நமது உழைப்பின் மீதும், நமது லட்சியப் பிடிப்பின் மீதும் முன் எப்போதும் இருந்ததை விட, மிகப் பெரிய நம்பிக்கையும் உறுதியும் ஏற்படுவதை என்னால் நன்கு உணர முடிந்தது.

'அன்னை' என்ற ரஷ்யக் கதையில் ஒரு தாய் துவக்கத்தில் குடிகாரக் கணவனுக்கு அடங்கியவராகவும், வெளியே சென்று பொதுக்காரியங்களைப் பற்றி நெருங்கியவர்களிடம் பேசக் கூடத் துணிவற்றவராயுமிருந்தார். ஆனால் அந்தக் கதையின் முடிவில் அந்தத் தாய் புரட்சிக் கொடி தாங்கி, மாபெரும் மக்கள் வெள்ளத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.


அப்படிப்பட்ட புரட்சிக் கருத்தும், துன்பத்தை எதிர்த் தொழிக்கும் துணிவும், நிறைந்த உழைப்பிலே முழு நம்பிக்கை யும், சீர்திருத்த நோக்கத்தில் உயிர்ப் பிடிப்பும் கொண்ட மக்களையல்லவா அந்த நாடு தனது உறுப் பினர்களாகப் பெற்றிருக்கிறது! அதன் அரங்கு கொள்கை விளக்கமாக அமைந்திருப்பதில் திகைப்புக்கிடமேது?

நாங்கள் உள்ளே சென்று படம் எடுக்க அனுமதி வழங்கப் பட்டிருப்பினும் எந்த அளவுக்கு அனுமதி என்று எனக்குத் தெரியாதே! ஏதோ ஒரு சில பகுதிகளைப் படமெடுக்க இயன் றாலே போதும் என்றுதான் முதலில் எண்ணினேன். ஆனால் நாங்கள் படம் எடுக்கத் துவங்கியதும் அந்த அரங்கில் இருந்த அதிகாரிகளும் தொழிலாளர்களும் தந்த ஒத்துழைப்பு என்னைத் திகைக்க வைத்தது.

விளக்குகள் பொருத்துவதற்கும், எங்கள் படப்பிடிப்பிற்குக் குந்தகம் வராமல் மக்களை ஆங்காங்கே ஒழுங்குபடுத்தவும்- ஆக இப்படி எத்தனையோ வழிகளில் அவர்கள் எங்களின் படப் பிடிப்புக்கு மிகப் பெரிய உதவி செய்தார்கள்.

எட்டாம் தேதியன்று 'எக்ஸ்போ'வில் இப்படித்தான் எங்கள் படப்பிடிப்பு துவங்கியது. ஏழாம் தேதியன்று படத்திற்குத் தேவையான சாமான்கள் வந்து சேரவில்லை.

எனவே எட்டாம் தேதிதான் துவங்கினோம். ஒரு வேளை



'டைகர் பாம்' கார்டனில் குழந்தைகளுடன் நாகேஷ்.

நாங்கள் தயாராயிருந்தாலும் பலனில்லை. ஏனெனில் உடைகள், மற்றவைகள் வந்து சேரவில்லை. ஆகவே ஏழாம் தேதி அன்று சுற்றிப் பார்க்க உதவியாயிருந்தது.

திரு.ஏவி.எம்.அவர்கள் நான் வெளிநாடு புறப்படுவதற்கு முன், ''அதைச் சுற்றிப் பார்ப்பதற்கே குறைந்து பதினைந்து நாட்களாவது தேவைப்படும்'' என்று சொல்லி இருந்தார். நான் பயந்து விடுவேனென்று குறைந்த நாட்களைச் சொல்லியிருக் கிறார் என்பதை அங்கு நேரில் பார்த்த போதுதான் நன்கு உணர்ந்தேன்.

அந்த நாட்டுச் சாப்பாடு எங்களில் ஒருவருக்கும் பிடிக்க வில்லை. இந்திய அரங்கிற்கருகில் அசோகா ஓட்டலின் கிளை துவக்கப்பட்டிருந்தது. அன்று பகல் உணவு ஏறத்தாழ மூன்றரை மணிக்கு மேல்தான்.

அசோகா ஓட்டலில் போய்ச் சாப்பிட்டோம். இஷ்டப்படி சாப்பிடக் கையில் பணமில்லை. மற்றவர்களுக்கு என்ன தேவைப்படுகிறதோ அதை வாங்கிக் கொள்ளச் சொல்லி விட்டு நான் அதிகமாகச்சாப்பிடாமலிருந்தேன்.

அசோகா ஓட்டலின் நிர்வாகி திரு.வரதராசன் அவர்கள் தமிழ்ப் பண்பிற்கு அடையாளமாக நடந்து கொண்டார். எங்களுக்கென்று எங்கள் விருப்பத்திற்கு உணவைத் தயார் செய்து தந்தார். திரு.ஜகன்னாதன் என்பவர் புரொடக்ஷன் மானேஜரைப் போல் எங்களுக்கு உதவி செய்தார் என்றால் மிகையாகாது. அங்கு பணியாற்றிய இந்தியாவின் பல பல மாநிலங்களைச் சேர்ந்த அத்தனை பேரும் எங்களிடம் அன்புப் பாசத்தோடு பழகினார்கள். கையிலோ போதிய அளவிற்குப் பணமில்லை. எனவே பெண்களுக்கும் நண்பர்கட்கும் எனது ஆசைப்படி எதுவும் வாங்கித் தர இயலவில்லை.

அன்று இருப்பிடத்திற்கு திரும்பினோம்- இரவு பத்து மணிக்கு மேல்.

எட்டாம் தேதி காலையில் எழுந்தோம். இட்டிலி, தோசை, பூரி, இப்படிச் சாப்பிட்டுப் பழகிப் போனவர்கள் ஏதேதோ


உணவுகளை எதிர்பார்த்தார்கள். ஆனால் ஓட்டலுக்கு, முன் அங்கு வந்திருந்தவர்கள் சொன்ன யோசனைப்படி புட்டிப் பாலும் ரொட்டியும் வாங்கி வைத்திருந்தோம். எனது வாழ்க்கைத் துணைவி ஜானகி விடியற்காலையிலேயே எழுந்து மூன்று பெண்களும் தங்கியிருந்த அறைகளுக்குச் சென்று, எழுப்பி அவர்களுக்கு ரொட்டியில் வெண்ணெய் தடவிக்கொடுத்து சிலருக்குப் பாலையும் சிலருக்கு டீயையும் கலந்து கொடுத்து படப்பிடிப்புக்கு அனுப்பி வைத்தாள்.

ஒரு இடத்தில் படப்பிடிப்பு முடிந்து வேறு இடத்திற்கு மாறுவது என்ற போதெல்லாம் விளக்குகள், காமெரா முதலிய எல்லாக் கருவிகளையும் நாங்களேதான் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அடுத்த காட்சிக்குள்ள இடம் ஆறு மைல் தூரம் என்றாலும் சுமந்து சென்றே ஆக வேண்டி இருந்தது. பாவம்! நண்பர்களுக்கு வேலை செய்யும் போதும் கடினமான உழைப்பு! படப்பிடிப்பு முடிந்தாலும் மேலும் உழைப்பு.

உணவு விடுதிக்குச் செல்லும் போது திரு.சொர்ணம் அவர்களின் தலையிலிருந்த தொப்பி காற்றில் பறந்து போய் விட்டது. அதை எடுப்பதற்காக, அவர் அதுவரையில் சுமந்து வந்த ஏரிபிளக்ஸ் காமெராவின் பாட்டரியைக் கீழே வைத்து விட்டு ஓடினார். இதைக் கவனித்த நான் அந்த பாட்டரியை எடுத்து எனது தோளில் மாட்டிக் கொண்டு சென்றேன். எவ்வளவு கனமான பொருளை அந்த நாள் முழுதும் சுமந்திருக்கிறார் என்பதை உணர முடிந்தது. அவர் மட்டுமா அப்படி வேலை செய்தார்? அங்கு உழைத்த அத்தனை பேருமல்லவா கஷ்டப்பட்டார்கள்.

அன்று மாலை இருப்பிடத்திற்கு திரும்பும் போது வழி தவறி விட்டோம். அப்போது 'எக்ஸ்போ'வில் திரு.முத்து என்பவரைச் சந்தித்தோம்.

எனது எம்ஜியார் நாடக மன்ற நிறுவனத்தில் மேக்-அப் மேனாகப் பணியாற்றியவர் திரு.முத்து என்பவர். இவர் நல்ல ஒரு நடிகருமாவார். தனக்கென்று அப்போது ஒரு அடி நிலமோ,



'டைகர் பாம்' கார்டனில் எம்.ஜி.ஆர்.


நகைகளோ, பணமோ சேர்த்துக் கொண்டவரல்ல. உழைப்பு, உழைப்பு, உழைப்பு. இது ஒன்றுதான் அவருக்குத் தெரியும் என்று சொல்லி அவருடைய ஆற்றலுக்கு, பண்புக்கு எல்லைக் கோடு வகுத்து விட மாட்டேன். கொள்கை, கொள்கை, கொள்கை! அண்ணா, அண்ணா, அண்ணா, கழகம், கழகம், கழகம்- இப்படி ஒரு நல்ல மனிதனாக வாழ்கின்றவர். அவரையும் எக்ஸ்போவில் சந்தித்தேன். எங்கோ கடன் பெற்று அந்த ஊருக்கு வந்திருக்கின்றார். அவரைக் கண்டதும், அவரைப் பற்றிய எனது எண்ணத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டேன். இதே போன்று அவரை முன்பொரு முறை எதிர்பாராத நேரத்தில், சிந்தித்திருக்கவே முடியாத ஒரு இடத்தில் சந்தித்தது என் நினைவிற்கு வந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டாம் ஆண்டு என்று நினைவு. மறைந்த மனிதருள் மாணிக்கம் நேரு அவர்கள் சென்னை வரும்போது, அவருக்குக் கறுப்புக் கொடி காட்டு

வதாக, திராவிட முன்னேற்றக் கழகம் முடிவெடுத்திருந்த நேரம். ஒரு நாள் காலையில் ஒரு அதிகாரி வந்து என்னைத் தன்னோடு வருமாறு அழைத்தார்.

இரண்டொரு நாட்களாகவே எனக்கு நண்பர்களால் சொல்லப்பட்டது; ''உங்களையும் கைது செய்யத் தமிழக அரசு தீர்மானித்து விட்டது என்று கேள்விப்பட்ட''தாகச் சொல்லுவார்கள்! 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பில் நடித்துக் கொண்டிருக்கும்போது யாராவது போலீஸ் அதிகாரிகள் ஸ்டூடியோ பக்கம் போனாலே போதும், என்னிடம் நண்பர்கள் ஓடி வருவார்கள்; ''போலீஸ் உங்களைக் கைது செய்ய வருது..'' என்று சொல்வார்கள் பதறியபடி...

நான் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்ததால் அதிகாரி அழைத்ததும் நான் அதிர்ச்சியேதும் அடைந்தேனில்லை. அவரோடு சென்றேன்.



எக்ஸ்போ படப்பிடிப்புக்கு உதவி செய்த ஜப்பான் திரைப்பட நிபுணர் சுவாய், எம்.ஜி.ஆர்.

பிற்பகலில் கமிஷனர் அலுவலகத்திற்குப் பின்னால் உள்ள வெட்ட வெயிலில் சிறு சிறு கூட்டமாக நாங்கள் உட்கார வைக்கப்பட்டிருந்தோம். அந்தந்தக் கூட்டங்களை அழைத்து வந்த போலீசார் தான், அந்தக் கூட்டத்தினரின் எண்ணிக்கைப்படி ஒப்படைக்கும் பொறுப்பிலிருப்பவர்கள்.

காலஞ் சென்ற நடிப்பிசைப் புலவர் திரு.கே.ஆர். ஆர். அவர்களும் இலட்சிய நடிகர் திரு.எஸ்.எஸ்.ஆர். அவர்களும் நடிகமணி

திரு.டி.வி.நாராயணசாமி அவர்களும் இன்னும் நானும் மற்றவர்களும் சில நண்பர்களோடு தனித்தனியாக உட்கார வைக்கப்பட்டிருந்தோம்.

கடைசியாக எங்களையெல்லாம் குறிப்பிட்ட ஒரு அதிகாரியின் முன் அழைத்துச் சென்றார்கள். அவர் முன்பு எங்களைப் போன்று மற்றவர்களையும் கைது செய்து கொண்டு வந்து உட்கார வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆயிரக் கணக்கான கழகத் தொண்டர்கள் அதிகாரியின் முன் அங்கே தரையில் உட்கார்ந்திருந்தார்கள். திரு.கே.ஆர்.ஆரும், தம்பி எஸ்.எஸ்.ஆரும் நானும் பேசியவாறு சென்று கொண் டிருந்தோம். 'அண்ணா வாழ்க' என்றும் 'கே.ஆர்.ஆர்.வாழ்க' 'எஸ்.எஸ்.ஆர் வாழ்க', 'எம்.ஜி.ஆர்.வாழ்க' என்றும் முழங்கியதோடு, கையொலியும் சேர்ந்து எங்களை அந்தப் பக்கம் கவனிக்கும்படிச் செய்தது.

எத்தனை ஆயிரம் மக்கள் உட்கார்ந்து எங்களை வர வேற்றார்கள்!

எங்களையும் மற்றவர்களையும் ஒரு பெஞ்சில் உட்கார வைத்தார்கள். எங்களுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த தொண்டர் களைக் கவனித்தேன். எந்த நோக்கமுமின்றி ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே சென்ற எனது கண்கள், முன்பு பார்த்த ஒருவரை மீண்டும் பார்ப்பதற்காகத் திரும்பிச் சென்று, நன்கு உற்றுப் பார்த்தன.

மேலே குறிப்பிட்டிருந்தேனே 'மேக்-அப்-மேன் முத்து' என்று, அவர்தான் அந்தக் கூட்டத்தில் ஒருவராக உட்கார்ந் திருந்தார். நான் அவரைப் பார்ப்பதைத் தெரிந்து கொண்டதும் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டார். வீட்டில் அன்றிரவு சாப்பாட்டிற்கே வழியில்லாதிருக்கும். ஏனெனில் இவர் ஏதேனும் சம்பாதித்துக் கொடுத்தால்தானே வீட்டில் உள்ளவர்கள் சாப்பிட? இவர்தான் சிறைச்சாலைக்கு வந்து விட்டாரே! மறுபடியும் திரும்பப் போய் எப்போது தனது வீட்டாரைப் பார்க்கப் போகிறார் என்று யாருக்குத் தெரியும்?



எம்.ஜி.ஆர்., மேட்டா ரூங்ராத்

இதெல்லாம் அவருக்கும் தெரியும்! நன்கு தெரிந்துதான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளத் துணிந்து முன் வந்திருக்கிறார். பின்னால் விசாரித்துத் தெரிந்து கொண்டேன் - அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பதை. கழக லட்சிய முழக்கத்தை எழுத்தாக்கி, மக்கள் படிப்பதற்காக வீதியில் எழுதிய போது இந்த முத்து கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அன்றும் இன்றும் என்றும் கழகத் தொண்டனாக, அமரர் அண்ணாவின் தம்பியாக வாழும் இந்த முத்துவைத்தான்- 'எக்ஸ்போ'வில் சந்தித்தேன். அவர் என்னுடைய பயண நாட்களில் செய்த உதவி, நான் என்றும் மறக்க இயலாத ஒன்றாகும். அப்படி அவர் உழைத்ததற்கு இதுவரை ஏதாவது என்னிடம் பிரதிபலனாக எதிர்பார்த்திருக்கின்றாரா என்றால் இல்லவே இல்லை என்ற பதிலைத்தானே என்னால் தர முடிகிறது!

எங்களுக்கு முன்பே அவர் 'எக்ஸ்போ'வுக்குச் சென்றிருந்ததால் அவர் தைரியமாகச் சென்று எங்களுக்கென ஏற்பாடு செய்திருந்த 'மைக்ரோ பஸ்' என்ற சிறிய பஸ்ஸைத் தேடினார். ஆனால் அது எங்குமே இல்லை. நானும் சந்திரகலாவும் பஸ்கள் வந்து போகும் இடத்திலேயே இருந்தோம்.

நடந்து நடந்து ஓய்ந்து போன சந்திரகலா அங்கிருந்த சிறிய சிமெண்ட் மேடையில் உட்கார்ந்து விட்டாள். பாவம்! நானே கொஞ்ச நேரம் நின்றேன். ஒரு தூணின் மீது சாய்ந்து நின்றேன். இங்கு மங்கும் சிறிது நடந்தேன். டாக்சி வரவில்லை. என் அனுமதியைக் கேளாமலேயே தானாகப் போய்ச் சாய்வு மேடையில் என் உடல் உட்கார்ந்து விட்டது. அப்போதுதான் எனது உடலின் வலி எனக்குத் தெரிந்தது!

சந்திரகலாவைத் திரும்பிப் பார்த்தேன். எப்போதும் தன் கையில் வைத்திருக்கும் மேக்-அப் சாமான்களில், அவசிய மானவற்றை மட்டும் வைத்திருந்த சிறிய நகைப்பெட்டியை போன்ற ஒன்றை மடியில் வைத்துக் கொண்டு, கட்டிய கைகளை அதன் மீது ஊன்றியவாறு குனிந்தவாறிருந்தாள்.

''சந்திரா! நீ, இங்கே வந்து இந்த மேடையில் சாய்ந்து உட்கார்ந்து கொள்'' என்ற வாறு நான் எழுந்தேன்.

''பரவாயில்லீங்க சார்! நீங்க காலையிலிருந்து கத்திச் கத்தி வேலை செய்திருக்கீங்க! நான் ஏதோ சில ஷாட்டுக்களில் தானே நடிச்சேன். நீங்க உட்காருங்க'' என்றாள்.

**'உலகம் சுற்றும் வாலிப'னில் சந்திரகலாதான் முதற் கதாநாயகி. அப்படி இருந்தும் கேள்வி கேட்பாரற்ற மிகச் சாதாரணமான ஒரு நடிகையைப் போல் கர்வமேயின்றி நடந்து கொள்வதை எண்ணி வியந்தேன்.**

இதே நிலையில் வேறு யாராவது இருந்திருந்தால் (அது நானாகவே இருந்தாலும் சரிதான்) எத்தனையோ கண்டனக் கணைகள் வீசப்பட்டிருக்கும். ''எங்கே அந்த புரொடெக்ஷன் மானேஜர்?'' முதற் கேள்வி இதுவாகவே இருக்கும்!

அவர் வந்தால் அவரிடம் கேட்கும் கேள்வி இப்படியாகத் தானே இருக்கும்! ''ஏன்யா நீங்கள்ளாம் படம் எடுக்க வர்றீங்க? ஒரு பஸ் கூட இல்லே. நேரத்துக்கு சாப்பாடு இல்லே. செல வுக்குத் தர பணமும் இல்லே. பின்னே எதுக்காக இந்தப் படம்? எங்க உயிரை வாங்கவா?''- இப்படிக் கேட்டால் கூட நான் வியக்க மாட்டேன்.


அன்று அப்போது மேலே குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்க அவருக்கும் உரிமையிருந்தது. அதைக் கேட்டுத் தீர வேண்டிய கடமை எனக்கும் இருந்தது. ஆனால் அந்தப் பெண் என்னுடைய உழைப்பை யும் கஷ்டத்தையும் கண்டு அனுதாபமல்லவா கொள்கிறாள்!

எப்படியோ ஒரு டாக்சி வந்து சேர்ந்தது. முத்துவும் டாக்டரும் நாங்களும் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

மகிழ்ச்சியான சேதி காத்துக் கொண்டிருந்தது. திரு.ஆர்.எம். வீரப்பன் வந்து விட்டார் என்ற சேதிதான் அது!

இரவு மீண்டும் படப்பிடிப்பு நடந்தது. நானும் மஞ்சுளாவும் எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்வது போன்ற காட்சி படமாக்கப்

பட்டது. 'மிட்ஸுபிஷி' அரங்கில் அந்தக் காட்சியினைப் படமாக்கினோம். மின் ஒளியினைக் கொண்டு மின்னல், பூகம்பம் போன்றவைகளை அமைத்திருந்தார்கள். ஒரு இடத்தில் நின்று கொண்டால் போதும்- அந்தப் பாலத்தில் நடந்து போகும் பாதை தானே நகர்ந்து செல்லும். அந்தக் காட்சி நடைபெற்று முடியும் வரை அது நகர்ந்து கொண்டே இருக்கும்.



நாகேஷ் – எக்ஸ்போ பின்னணியில்

அந்த இருளில், மின்னல் ஒளியில், திசை தெரியாது ஓடுவது போன்றவைகளைப் படமாக்கினோம். நாங்கள்தான் நடித்தோம் என்பதைத் தெளிவுபடுத்த எங்கள் முகத்தில் ஒளிபாய்ச்சினால் காட்சியின் அமைப்புக் கெட்டு விடும்; காட்சிக்கு முக்கியத் துவம் கொடுத்துப் படமாக்கினால் நாங்கள் யார் யார் நடிக்கிறோம் என்பது தெரியாமற் போய்விடும். அப்படிப் பட்ட நிலையில் தான் நாங்கள் படமெடுத்தோம்.

அந்த அரங்கில் பணியாற்றிக் கொண்டிருந்த பணிப் பெண் ஒருவர், எங்கள் குழுவினர் அணிந்திருந்த எம்.ஜி.யார் பிக்சர்சின் சின்னம் பதித்த அடையாள இலச்சினையை ஆவலோடு தனக்கு வேண்டுமென்று கேட்டார். அதை அவருக்குக் கொடுத்ததும் ஏதோ கிடைத்தற்கரிய ஒரு பொருளை எளிதாக அடைந்தவர் போன்று ஆனந்தக் கூத்தாடினார்.

என்னோடு வந்தவர்கள் அந்தச் சின்னத்தைப் பெரிதும் மதிப்பவர்களே. இருந்தாலும் அந்தப் புதியவர் எங்கள் சின்னத்தைக் கண்டு மகிழ்ந்ததைப் பார்த்த போது என் உள்ளத்தில் ஏதேதோ சிந்தனைகள் தொடர்ச்சியாக எழுந்தன...



எம்.ஜிஆர்., லதா

புரியாததால்தான் அந்தச் சின்னத்தைக் கண்டு மகிழ்ந்தார்களா? ஒரு வேளை நன்கு புரிந்திருந்தால் அதைப் பார்த்து அவ்வளவு மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டிருக்காதோ? ''முற்றத்து முல்லைக்கு மணமில்லை'' என்பார்களே, இது போன்ற காரணங்களால் தானே?

அப்படியானால் நம்மைப் புரிந்தவரிடம் நாம் எதிர்பார்ப்பதை விடப் புரியாதவர்களிடம் தானா அதிகம் எதிர்பார்க்க முடியும்? **நண்பர்கள் என்றாலே ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொண்டவர்கள் என்று சொல்கிறார்களே அது எது வரையில்?**

இப்படிப்பட்ட கேள்விகள் தொடர்ந்தன என் உள்ளத்தில்.

என்னோடு இணைந்து உணவை, நல்ல இருக்கையை, வசதியான எந்தச் சூழ்நிலையினையும் எதிர்பாராது, தனது உழைப்பின் மீது நாங்கள் ஏற்றுச் சென்றுள்ள பணியில் வெற்றி ஒன்றை மட்டுமே எதிர்நோக்கி ஓயாது, சலியாது பணம் போன்ற எந்த லாபத்தையும் எதிர் நோக்காது உழைத்த அவர்களுக்கு என் மீது இல்லாத அக்கறை, எனது கொள்கையின் மீது இல்லாத பற்று இவைகள் வேறு யாரிடத்தில் இருந்து விடப் போகின்றன என்றும் என் உள் மனம் எதிரொலித்தது. வெளி மனம் என்று ஒன்றிருக்கிறதா என்றுகூடக் கேட்கலாம். என்னைப் பொறுத்த வரையில் உள் மனம் எப்போதும் என்னை எச்சரிப்பதற்காக மட்டுமேதான் செயல்படுகிறது. புற மனம் என் செயல்களுக்கெல்லாம் சூத்திரக் கயிறாக இருந்து ஆட்டிப் படைக்கிறது. இப்படித்தான் என்னைப்பற்றி நினைக்கிறேன். என்னிடம் தவறுகளிருப்பின் புறமனம்தான் அந்தப் பொறுப்பை ஏற்கிறது. உள் மனம் தெய்வீகத் தன்மை பெற்றது.

புறமனமோ உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டதாயிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட பல சிந்தனைகளுக்கேற்ப செயல்படும் நேரத்தில் எத்தனை குறைபாடுகள், எத்தகைய பேத உணர்வுகள், எப்படிப்பட்ட கோப தாபங்கள்! இவைகளின் சுற்றுச் சூழலில் பிணைத்துக் கொண்டல்லவா நான்

அவ்வப்போது இயங்கிக் கொண்டிருக்கிறேன். இத்தகைய செயல் படைத்த என் மீது அன்பு செலுத்துகின்றவர்கள் எவ்வளவு பொறுமைசாலிகளாகவும் விட்டுக் கொடுக்கும் தன்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்!

மறுநாள் படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்யச் சொன்னதோடு என்னென்ன, எங்கெங்கே எடுக்க வேண்டும் என்பதனையும் சொல்லிப் படுக்கச் சென்றேன்.

மறுநாள் காலையில் எழுந்து சென்றோம். 'உலகம்' என்ற பாடலைப் படமாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உயரமான இடத்தில் இருந்து கதாநாயகன் பாடுவதாக அந்தக் காட்சி அமைக்கப்பட்டது. முதலில் அந்த அரங்கத்தின் மத்தியிலிருந்த உருவத்தின் முன் நின்று பாடுவது போன்று எடுக்கப்பட்டது. முதலில் அந்த உருவத்தின் முகம் மட்டும் தெரிவதும், காமிரா பின்னால் சென்றால் நான் அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதும், அதன் பின் நான் திரும்பி 'உலகம்' என்று பாடுவதும், பாடியதோடு சுற்றி வருவதும், நான் பாடிய பாட்டு ''உலகம் உலகம் உலகம்'' என்று எதிரொலிப்பதுமாகவும், அதே நேரத்தில் எதிர்புறத்திலிருந்து ரயில் ஒன்று வருவதும், அதைப் பார்த்து ரசித்து மறுபக்கமும் சுற்றி இப்படிக் கோயிலை வலம் வருவதுபோல் ஒரு முழு சுற்றுச் சுற்றிவிட்டு, மீண்டும் அந்த முகத்திற்கு நேரே வந்து நின்று இன்னொரு பக்கம் செல்லுவது போன்றும் படமாக்கப்பட்டது.

நான் பாடியபடி வரும் போது ரயில் வர வேண்டும். அந்த நேரத்தைக் கணக்குப் போட்டுப் படப்பிடிப்பு சரிவர நடைபெற வேண்டும். நாங்கள் தாமதித்து விட்டால் ரயில் போய் விடும். அவசரப்பட்டு விட்டாலோ தூரத்தில் ரயிலின் முன் பக்கம் மட்டுமே தெரியும். நேரில் பார்க்காதவர்கட்கு அது என்னவென்றே தெரியப் போவதில்லை. இதை மிகமிக எச்சரிக்கையோடு படமாக்கினோம்.



# 9

மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதைச் சித்திரிக்கும் இடத்தில் படப்பிடிப்பு நடத்தலாம் என எண்ணிச் சென்றோம்.

அங்கு வெளிச்சம் போட்டுப் படம் எடுக்க அனுமதி இல்லை. ஏனெனில் அப்படி வெளிச்சம் போட்டால் அங்கு ஏற்கனவே அமைத்திருக்கும். ஒளி அமைப்பின் நோக்கமே கெட்டுவிடும்.

நீலம், சிவப்பு, மஞ்சள் இவ்வாறு பல வண்ணங்களை ஆங்காங்கே சிலைகளின் மேல் விழச் செய்து, ஒலியையும் அந்த விலங்கினங்களுக்கு ஏற்ப ஒலித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் படம் எடுக்கும் அளவிற்கு வெளிச்சம் போட்டோமானால் அந்த வண்ணங்கள் மங்கிவிடும். வண்ணங்களின் அழகை வெளிப்படுத்த முடியாமற் போகுமாயின் அதைப் படம் எடுத்துப் பயனில்லை. எங்களுக்குத் தேவையான அளவுக்கு வண்ண விளக்குகளைப் போட அங்கு வசதியுமில்லை. எனவே நினைவுக்கு என்று சிலவற்றை எடுத்தோம்.

அன்று பிற்பகலில் நன்கு வேலை நடந்தது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போகும் போது விளம்பரத்தட்டி ஒன்று எங்களைக் கவனிக்கச் செய்தது. அன்றிரவு முக்கியமான கூடத்தில் நூற்றுக்கணக்கான நடிகையர்களின் நடனமும், ரஷ்யக் கலைஞர்களின் கிராமிய நடனமும், இவ்வாறு பல்வேறு நடனக் காட்சிகளுடன் நடக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் உடனே திரு.மணியன் அவர்களிடம் கேட்டேன்; ''இதைப் படமாக்க இயலுமா?'' என்று. ''முயன்று பார்ப்போம்'' என்று சொல்லி, அவருக்கே உரித்தான நடையில் வேகமாகச் சென்றார்.

இன்னொரு இடத்தில் படம் எடுத்து முடிக்கு முன் ஓடோடி வந்தார் திரு மணியன். ''ஏழு மணிக்கெல்லாம நாம் அங்கு சென்று படப்பிடிப்புக்கு தயாராக இருக்க வேண்டும்'' என்றார். விடுவோமா இந்த அரிய வாய்ப்பை? உடனே படப்பிடிப்பை அங்கு நிறுத்திக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குப் புறப்பட்டோம்.

மாநாடுகளில் நிகழும் மக்களின் நெரிசலை மீண்டும் அங்கு கண்டேன். 'க்யூ' வரிசையில் ஒழுங்காகச் செல்லுபவர்கள் என்று நான் அதற்கு முன்பும் பின்பும் எழுதினேன்; இன்னமும் எழுதுவேன். ஆனால் அன்று அங்கு மட்டும் ஆர்வத்தின் எல்லை என்பது இதுதானோ என்பது போல் கட்டுங்கடங்காதவாறு மக்கள் அந்த இடத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுக் கருவிகளோடு எப்படியோ அங்கு நுழைந்து விட்டோம்.

குழந்தைகள் நூற்றுக்கணக்காக ஆடுவதும், பெண்கள் ஆங்கிலப்பாணி உடைகளில் நூற்றுக்கணக்கில் சேர்ந்து ஆடுவதும், வாண வேடிக்கைகள், தாண்டிக் குதித்துப் பாய்ந்து விழுந்து ஆடும் ரஷ்ய நடனமும்- ''ஆஹா'' இப்படியும் ஒரு அமைப்பு! இந்த ஆயிரக்கணக்கான கலைஞர்களை ஒருங்கே சேர்த்து நடத்திக் காட்டும் ஒழுங்கு... அப்பப்பா...




ஒரு அம்மையார் ஒலிப் பெருக்கிக் கருவியைக் கையில் பிடித்தவாறு பாடினார். அவருடைய குரலின் வலிமைதான் என்னே! உச்சஸ்தாயியில் பாடும் போதும் சரி, அவருடைய குரல் நம்மை வீறு கொண்டு எழச் செய்யும் தன்மை படைத்தது. அவர் கூண்டுக்குள்ளிருக்கும் காமெராவில் குறைந்தது 5 மணி நேரத்திற்கு மேல் படம் பிடித்தால்தான், நாங்களும் எங்களுக்குப் பின்னால் உள்ள இடங்களும் சரியாக ஒளிப்பதிவாகும். ஆகவேதான் பலமுறைப் படமாக்க வேண்டி வந்தது.

அன்று இவ்வாறு பல இடங்களில் படப்பிடிப்பு நடந்தது.


மாலையில் நானும் சந்திரகலாவும் விடுதிக்குச் சென்று வேறு உடைகளை மாற்றிக் கொண்டு 'எக்ஸ்போ'வுக்கு வந்தோம். கார் டிரைவர் எங்களை இறக்கிவிட்டுச் சென்றார். நாங்கள் படியேறிச் சென்றபோதுதான் வேறு வாசற்படியின் வழியில் செல்லப் போகிறோம் என்பதை உணர்ந்தோம். திரும்பவும் இயலாது. அன்றிரவே அந்தக் காட்சியைப் பட மாக்கி ஆக வேண்டும்.

முப்பத்து ஆறாயிரம் பல்புகளைக் கொண்டு அமைக்கப் பட்டிருந்த 'ஸ்விஸ் பெவிலிய'னில் படம் எடுக்க ஏற்பாடாகி இருந்தது. மறுநாளிலிருந்து மக்கள் கூட்டம் அளவுக்கு மீறிக் கட்டுக்கடங்காமல் இருக்கும் என்று சொன்னார்கள்.

எனவே அன்றே அதைப் படமாக்கிவிட எல்லா ஏற் பாடுகளும் செய்து விட்டிருந்தோம். எங்களிருவரிடமும் பத்திரிகைக்காரர்களுக்குள்ள பாஸ் இருந்ததால், அதைக் காண்பித்து விட்டு உள்ளே போய்விட்டோம். ஆனால் நாங்கள் சென்ற பாதை எங்களுக்குப் புதியது. சுற்றி னோம்; சுற்றினோம். ஏறத்தாழ ஒரு மணிநேரம் நடந்தோம். ஸ்விஸ் அரங்கைக் கண்டு பிடிக்க இயலவில்லை. யாரை யாவது கேட்டால் சரியாகத்தான் அவர்கள் வழி சொல்லுவார்கள். ஆனால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போவதற்கு முன், நாங்கள் பார்க்கும் காட்சி எங்களைப் பிரமிக்க வைக்கும். அதைக் கவனித்துவிட்டுத் திரும்பிச் செல்லுவதற்குள் வழி தவறி விடும். தூரத்தில் அந்த அரங்கின் விளக்கொளி கண்ணுக்குத் தெரியும். 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டு நடப்போம். வழி எங்களை எங்கோ கொண்டு போய் நிறுத்தும். இப்படி அலைந்து அலைந்து ஒரு வழியாகக் குறிப்பிட்ட இடத்தை அடைந்தோம். படப்பிடிப்பும் நடந்தது. நினைத்தது போல் படமாக்கினோம்.

அவசரத்தில் செட்-அப் செய்து நடனத்தை எடுக்க நேரமில்லை. வாயால் சொல்லிக் கொண்டு நடித்தோம். சில சமயம் அப்போது தோன்றுகிற ஏதாவது நடன அசைவைச் செய்தால், சந்திரகலா தானும் குழப்பமின்றி அதைச் செய்து நிறைவு செய்ததை நான் போற்றாமலிருக்க முடியாது. இப்படி அந்தக் காட்சியைப் படமாக்கிய பிறகுதான் எல்லாருக்கும் மன நிம்மதி ஏற்பட்டது.

பண்புள்ள மக்களான ஜப்பானியர்கள்கூட, மது, அருந்தி மயங்கும் நிலைக்கு ஆளாகி விட்டால் எப்படிப்பட்ட தவறு செய்வார்கள் என்பதை அன்று நேரில் அனுபவித்தேன்.



நானும் சந்திரகலாவும் ஒளிப்பதிவாளர் அழைக்கும் வரையில் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். திரு.நாகேஷ், அசோகன் முதலியவர்களும் இருந்தனர். ஒரு ஜப்பானியர் குடியின் மயக்கத்தில் இருந்தவர் - சந்திரகலாவின் உடைகளை ஆர்வத்தோடு கவனித்தபடி அருகில் வந்தார். மெல்ல மெல்லத் தள்ளாடியவாறு நெருங்கினார். மரியாதை யோடு சந்திரகலா அணிந்திருந்த துணியை மெல்லத் தொட்டுப் பார்த்தார். என்ன எண்ணினாரோ தெரியாது. திடீரென சந்திர கலாவின் உடலைத் தொட்டுவிட்டார். அருகில் இருந்த நான் எல்லாவற்றையும் மறந்தேன். அவர் கை சந்திராவில் மீது பட்ட தும் எனது கை ஜப்பானியரின் உடம்பின் மீது பட்டது. ஒரே நேரத்தில் என்பதுபோல், பலமாக அடித்து விட்டேன். அவர் கண்ணில் இருந்த கண்ணாடி தெறித்துக் கீழே விழுந்தது.

பக்கத்திலிருந்த அனைவரும் திகைத்து விட்டனர். சந்திர கலா அதிர்ச்சியில் பேச இயலாது ஊமையாகி விட்டார்.


அடிபட்ட ஜப் பானியர் தவறுக்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில் இரு கை களையும் கோத்துக் கொண்டு தலை யிலிருந்து இடுப்பு வரை முன்னால் வளைந்து, மேலும் கீழும் உடம்பை ஆட் டியபடி, ''மன்னியுங் கள்'' என்று அவரு டைய மொழியில் சொல்லியவாறு, அப்



எம்.ஜிஆர்., சந்திரகலா

படியே பின்னால் நகர்ந்து போனார்.

மன்னர்களின் முன் அடிமைகள் வணங்கியவாறு, திரும்பாமல்- அப்படியே மன்னனைப் பார்த்தவாறு செல்லுவார்களே அது போல் சென்று மறைந்தார்.



'எக்ஸ்போ லாண்ட்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். தாகம் தீர்த்துக் கொள்கிறார். அருகில் ப.நீலகண்டன்

அதற்குள் எனக்கும் எனது நண்பர்களுக்கும் மனத்தில் எழுந்த கேள்விகள் தான் எத்தனை! எத்தனை!

ஜப்பானிய நாட்டில் ஒரு ஜப்பானியரை அடித்துவிட்டோமே அவருக்கு எத்தனை நண்பர்கள் இருப்பார்களே! அவர்கள் சிபாரிசுக்கு வரலாமல்லவா?...

இங்கு, நமது நாட்டில் தனிப்பட்டவரின் சண்டைதானே தெருச் சண்டையாக மாறி, ஜாதிச் சண்டையாக முற்றிச் சாவு வரையில் கொண்டு செல்லுகிறது?

நாங்களோ இந்தியாவிலிருந்து வந்தவர்கள். ஜப்பானிய நாட்டில் ஜப்பானியரைத் தாக்கி விட்டோம்...

இதை - ''இந்தியன் எவனோ ஒருவன் ஜப்பானியனைத் தாக்கி விட்டான்'' என்று தெரிந்து, அந்த அடிப்படையில் பிரச்னை உருவாகுமாயின் விளைவுகள் எதுவரையில் போகும்?... என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன். எனினும் என் உள்ளம் மட்டும் நான் செய்தது சரிதான் என்று எனக்கு உற்சாகத்தையே அளித்தது!

ஆனால் அங்கு சுற்றி நின்று வேடிக்கை பார்த்த மக்கள் விவரத்தை அமைதியாகக் கேட்டு, உண்மையை அறிந்ததும் தவறு செய்த அந்த ஜப்பனியரைக் கண்டித்தார்கள்.

'அங்கு நிற்கவே கூடாது' என்று எச்சரித்து அனுப்பி விட்டார்கள் என்பது மட்டுமல்ல; எங்களில் சிலரிடம் தங்களின் வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

இவர்களும் ஜப்பானியர்தான்; மதி கெட்ட செயல் புரிந்த அவரும் ஜப்பானியர்தான்! ஆனால் ஒரே வித்தியாசம். **தவறு செய்த அவர் குடித்து மதி மறந்திருந்தார். வருத்தம் தெரிவித்த மற்றவர்களோ மதி மறக்காதவர்கள்.**

இதுதான் இவர்களுக்கிடையே உள்ள வித்தியாசமாகும்!

மதுவினால் ஒரு மனிதன் எப்படியெல்லாம் சீரழிந்து போகிறான் என்பதைக் கவனிக்கும்போது, குடியைக் கெடுக்கும் குடியைப் பெரிதாக எண்ணுபவர்களை என்னவென்று சொல்லுவது?

"அங்கெல்லாம் குடிப்பதே இல்லையா?" என்று கேட்டீர்களானால், வேடிக்கையான ஒரு அனுபவத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



# 10

நாங்கள் படப்பிடிப்பு முடிந்து காருக்காகக் காத்திருந்தோம். ஒரு ஜப்பானியர் வந்தார். எங்களிடம் வந்து கேட்டார்; ''ஏன் இங்கே நின்று கொண்டிருக் கிறீர்கள்?'' என்று. நாங்கள் காரணத்தைச் சொன்னோம். அவர் சிரித்தவாறே கேட்டார், ''கார் எதற்கு?'' என்று.

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.. அவர் சிரிப்பை நிறுத்தாமலேயே கீழே குனிந்து பார்த்தார் தரையை. யானை கட்டுவதற்கு நட்டு வைத்திருப்பது போன்றிருந்த ஒரு கல்லைத் தான் பார்த்தார். அதன் அருகில் சென்றார். காலால் ஓங்கி உதைத்தார். அது நகரவில்லை என்றறிந்ததும், மேலும் சிரித்தவாறு எங்களைப் பார்த்துச் சொன்னார்: ''இந்தக் காரை என்ன தான் உதைத்தாலும் நகராது!'' என்று.

நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்- ஒரு வேளை அவர் பைத்தியமோ என்று!

இன்னொரு ஜப்பானியர் வந்தார். அவர் எங்களது ஊர், எப்போது வந்தோம், எதற்காக வந்தோம் என்பதைப் பற்றி எல்லாம் அக்கறையோடு கேட்டார். பதில் சொன்னோம்.

நாங்கள் பேசும் போது அருகில் வந்து நின்றார் -எங்களால் பைத்தியமோ என்று சந்தேகப்பட்டவர்.

விவரம் கேட்ட இன்னொரு ஜப்பானியர் எங்களைத் தனியே அழைத்து ''அவர் குடித்திருக்கிறார். அவரிடம் பேசாதீர்கள்'' என்று சொன்னார்.

குடிப்பவர்கள் எந்தக் குறிப்பிட்ட நற்பண்பைக் கொண்ட நாட்டினர் என்றாலும் மயங்கி விழாமலிருந்து விடுவதில்லை. **மதியை மறக்கச் செய்யும் ஆற்றல் படைத்த மது, யாரையும் எப்படிப்பட்டவரையும் முட்டாளாக, வெறி பிடித்தவர்களாக ஆக்கிவிடும்** என்பதை அங்கும் கண்டேன்.

ஏறக்குறைய ஜப்பான் முழுதும் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்ட எங்களை கேலியோடு தான் பார்த்தார்கள். படுக்கை அறையில் பெரும்பாலும் தண்ணீர் வைப்பதில்லை. நமக்குத் தண்ணீர் தேவையானால் முகம் கழுவும் அறைக்குச் சென்று, அங்குள்ள குழாயில் பிடித்துக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

'ஜப்பானியர் உழைப்பிலும் அறிவாற்றலிலும் மிகத் திறமை மிக்கவர்கள் என்று பேசப்படுகிறதே! அப்படியானால் குடிப்பதனால் அறிவு வளர்ச்சியிலோ, விஞ்ஞான வளர்ச்சி யிலோ, உழைப்பிலோ எந்தத் தடையும் ஏற்படுவதில்லை என்பதுதானே பொருள்?'' என்று கேட்கலாம்.

நான் கவனித்த வரை இந்தக் கொடிய பழக்கமும் இல்லா திருப்பின்இப்போதிருப்பதை விட, மிக அதிக அளவு முன்னேற் றம் ஏற்பட்டிருக்கும் என்றே சொல்லுவேன்!

'எக்ஸ்போ'வில் ஒரு இடத்தில் பெரிய சித்திரம் வரைந்த தட்டி வைக்கப்பட்டிருந்தது. ''ஏன் இந்த நல்ல கலை அழகு பொருந்திய இடத்தில் இப்படி ஒரு சித்திரத்தை வைத்திருக் கிறார்கள்?'' என்று கேட்டோம்.

''எக்ஸ்போ முடிகிறதே'' என்று அப்பெண் கண்ணீர் விடுவதாக அந்தப் படத்தின் கருத்தை வெளியிட்டிருந்தார்கள்.



ட்ரிம் லாண்டில் எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

அதில் எழுதியிருந்ததைப் படித்து. நாகேஷ் எப்போதும் போல் கேட்டார்: ''ஏண்ணே! எங்கேயும் திறப்பு விழாவுக்குத் தானே போவீங்க? ஆனா இங்கே மூடு விழாவுக்குல்ல வந்திருக் கோம்'' என்றார்.

எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தோம். அதற்குள் சொர்ணம் சொன்னார்: ''அந்தக் கெட்ட பேர் நமக்கு வரக் கூடாது. இந்த நாட்டு மக்களுக்கே விட்டு விட்டு, 12-ஆம் தேதியே 'எக்ஸ்போ'வை விட்டுப் போகப் போகிறோம்'' என்றார்.

பன்னிரெண்டாம் தேதி 'எக்ஸ்போ'வின் மத்தியிலிருந்த பெரிய கூண்டிலிருந்து, எக்ஸ்போவில் கார்களுக்கு மத்தியில் அசோகன் வெளியே நின்று கொண்டிருப்பதையும், அதே ஷாட்டில் நானும் சந்திரகலாவும் கூண்டுக்குள் உட்கார்ந்து அவரைப் பார்ப்பதையும், மீண்டும் நானும் மஞ்சுளாவும் 'எக்ஸ்போ'வின் மத்தியில் நின்று பேசிக் கொண்டிருப்பதையும், அதையும் நாங்கள் மேலே இருந்து பார்ப்பதையும், 'எக்ஸ்போ'வில் வேறொரு இடத்தில் நாகேஷ் எங்களைத் தேடிக் கொண்டிருப்பதையும், அதையும் மேலே இருந்து நாங்கள் பார்ப்பதையும், இதைப்பற்றிப் பேசிப் புறப்படுவதையும் ''ஜூம்'' கருவியைக் கொண்டு படமாக்கினோம். இத்தனையை யும் ஒரே ஷாட்டில் எடுக்க வேண்டும். அதாவது அசோகன் அருகில் தெரிவது, காமெராவின் கண்ணாடி சுழன்றதும் நாங்கள் உட்கார்ந்திருப்பதும் சேர்த்துத் தெரிய வேண்டும். மீண்டும் கண்ணாடி சுழலும் போது நானும் மஞ்சுளாவும் காத்து நிற்பது அருகில் தெரிவது, மறுபடியும் நாங்கள், அதன் பிறகு நாகேஷ் மட்டும் தனியாக அங்குமிங்கும் நடந்தவாறு காத்து நிற்பது, அதைப் பார்த்த நாங்கள் புறப்படுவது இப்படிப் படமாக்கினோம்.

அசோகன் நின்ற இடத்திற்கும் நாங்கள் உயரத்தில் இருந்த இடத்திற்கும் குறைந்தது நான்கு பர்லாங்கு தூரம் இருக்கும். தரையில் நடந்து சென்றால் குறைந்தது மூன்று நான்கு மைல்களுக்கு மேல் தூரம் இருக்கும் .அதே போலத்தான் மஞ்சுளாவும் நானும் நிற்கும் இடமும்.

இவர்களுக்கும் நாகேஷ் நடந்து கொண்டிருந்த இடத்திற்கும் ஒரு மைல் தூரமாவது இருக்கும்.

அசோகன் தேடுவது போன்று எப்போது நடிப்பது? அதைப் படமாக்கிய பின் மஞ்சுளா ஜோடியைப் படமாக்க காமிராவின் கண்ணாடி கழலுவது எப்போது என்று மஞ்களா ஜோடிக்குத் தெரிந்து, அந்த ஜோடி நடிப்பது எப்போது? அதற்குப் பிறகு நாகேஷ் நடிப்பதைப் படமாக்கும் போது, அவருக்குத் தெரிய வேண்டும் படமெடுக்கிறார்கள் என்று... இப்படி அவர்களுக் கெல்லாம் குறிப்பிட்ட நேரம் தெரிந்தால் தானே நடிக்க? அவர்களுக்குச் சொன்னேன்: ''கூண்டிலிருக்கும் கண்ணாடி வழியாக விளக்கைப் போடுகிறோம், உடனே நடியுங்கள்'' என்று.

விளக்கைப் போட்டோம். ஆனால் வெயிலின் வெளிச்சம் கண்ணாடி மேல் விழுந்ததால் உள்ளேயிருந்து வெளிச்சம் தெரியாமலே போய் விட்டது. ஒருவரை அனுப்பினேன், நடிகர்களிடம் சொல்லுவதற்கு. அவர்களோடு தொடர்பு கொள்ள வேறு எந்த வசதியும் எங்களுக்கில்லை. வேறு வழி யின்றி நடிகர்களிடம் சொல்லச் செய்தேன்.

அதாவது ''நடிகர்கள் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும். படப்பிடிப்பு முடிந்ததும் நண்பர்கள் வந்து சொல்லுவார்கள்'' என்ற சேதிதான் அது.

ஏறத்தாழ மூன்று மணி நேரம் அவர்கள் அனைவரும் திரும்பத் திரும்ப நடித்துக் கொண்டே இருந்தனர். ஒரு பக்கம் அசோகன், நாங்கள் இருந்த கூண்டுக்குப் போடப்பட்டிருந்த கண்ணாடி மிக அழுத்தமானது; வளைந்ததும் கூட. இதன் வழியாகப் பார்ப்பவர்களுக்குச் சில சமயம் உருவங்கள் உருமாறிக் காட்சியளிக்கும். இந்தக் கண்ணாடி வழியாகத்தான் படம் பிடிக்க வேண்டும். அதிலும் ஜூம்லென்சின் உதவியால் படம் ஆக்க வேண்டும்... படம் ஆக்கினோம்.

அதைத் திரையில் பார்ப்பது வரையில் எந்த உத்தரவாதமும் இல்லை. இருந்தும் துணிவோடும் நம்பிக்கையோடும் செயல்

பட்டோம். குழந்தை பிறந்தது; அழகாகவும் இருந்தது; பேசுகிறது; நன்கு திடமாக நடமாடுகிறது என்றும் இருந்து விட்டால் பெற்றோருக்கு எந்த அளவில் மகிழ்ச்சி தோன்றுமோ, அந்தப் பெரு மகிழ்வை ஒளிப்பதிவாளர் திரு.ராமமூர்த்தியும் மற்றவர்களும் பெறுகின்றனர்.

இந்த 'ஷாட்' இல்லையாயின் கதையின் தொடர்பு கெட்டு விடுமா என்றால், நிச்சயமாக இல்லை. இருப்பினும் படப்பிடிப்பு என்றால் வெறும் கதையைச் சொல்லுவது என்பது பொருளல்ல. கதையின் உயிரோட்டம், அதன் கருப்பொருள், தொடர்ச்சி இவை சற்றும் கெடாமல் முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்தக் கதையின் அடிப் படைக் கருத்தின் வலிவை, அழுத்தத்தை, ஆழத்தை வலி யுறுத்துவதற்கெனச் சில விசேஷ நிலைகளை உருவாக்கியே தீர வேண்டும்.

'எக்ஸ்போ' என்ற உலகக் கண்காட்சியின் அமைப்பையும் அதன் நீளம், அகலம் இவைகளையும் படத்தைப் பார்க்கின்ற மக்களின் மனத்தில் சரியாகப் பதிய வைத்தால்தான்- இரண்டு சகோதரர்களும் அவர்களுக்குத் துணை நிற்கும் காதலிகளும், தோழன் மார்க்கண்டேயனும் (நாகேஷ்), மிஸ் லில்லியும் (லதா), இவர்கள் அனைவரையும் பிடித்துக் கொன்றுவிடத் தேடும் அசோகனும் அவர் தம் குழுவினரும் ஒருவரையொருவர் தேடுகின்ற முயற்சியையும், அந்தக் கூட்டத்துக்குள் அவர்களின் ஆசை நிறைவேறுகிறதா இல்லையா என்ற நிலையையும் எடுத்துக்காட்ட முடியும். அந்த எக்ஸ்போவிற்கு ஒவ்வொரு நாளும் வந்திருந்த எட்டு லட்சம், ஒன்பது லட்சம் மக்களின் நெரிசலையும் ஒருவரை யொருவர் சந்திக்க முடிய வில்லை என்ற உண்மை நிலையையும் மக்களின் மனத்தில் பதியும்படி செய்ய வேண்டியது எனது மிகப் பெரிய முதல் வேலையாக இருந்தது. அதை மிகமிக நல்ல முறையில் நிறைவேற்றி முடித்தேன்.

ஒரு நாள் இரவு விடுதி திரும்பியபோது டாக்சி டிரைவரிடம் நாங்கள் தங்கியிருந்த முகவரியைச் சொன்னோம். விடுதியின்

எண்ணைச் சரியாகச் சொல்லவில்லை. டிரைவர் எங்கோ உள்ள கட்டிடத்திற்குக் காரை ஓட்டிச் சென்றார். பின்னால் பெண்கள் மூவரும், முன்னால் நானும் முத்துவும்.

டிரைவர் சுற்றிச் சுற்றி வந்தார். விடுதியை அடைய முடிய வில்லை. அந்த விடுதியில் நாங்கள் சென்ற காரை முதல்முறை யாக பார்த்தார் ஒரு போலீஸ்காரர். நாங்கள் அந்த பக்கமே திரும்பத் திரும்பச் சுற்றிக் கொண்டிருந்த போது, அதே போலீஸ்காரர் விசில் அடித்துக் காரை நிறுத்தச் செய்தார். டிரைவர் நிறுத்திக் கீழே இறங்கினார். டாக்சியின் அருகில் வந்த போலீஸ் காரர் டிரைவரிடம் விசாரித்தார். நாங்கள் வேற்று நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், முகவரி தெரியாமல் சுற்று வதாகவும் சொன்னார் டிரைவர். போலீஸ்காரரின் அடுத்த கேள்வி, ''முகவரி



ஜப்பானில் காமபுரா என்ற இடத்தில் இருக்கும் புராதனமான பிரசித்தி பெற்ற புத்தர் ஆலயத்தில் எஸ்.ஏ.அசோகன், எம்.ஜி.ஆர்., மஞ்சுளா.

தெரியவில்லையானால் போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு விசாரித்துப் பிறகு குறிப்பிட்ட இடத்தில் சேர்க்க வேண்டியதுதானே! அதை விட்டு நடு இரவில் சுற்றிக் கொண் டிருந்தால் எப்படி?'' என்று கண்டித்தார்.

எங்களிடமும் விசாரித்து, அவரே யோசித்து, குறிப்பிட்ட விடுதி எந்தக் கட்டிடங்களுக்கிடையில் இருக்கிறதென்பதை வரைபடம் (மேப்) மூலம் பார்த்துத் தெரிந்து டிரைவரிடம் சொல்லி அனுப்பி வைத்தார். டிரைவர் போலீஸ்காரரிடம் காண்பித்த மரியாதையும் போலீஸ்காரர் நடந்து காட்டிய கடமைச் செயலும் வேண்டுமென்றே மறந்துவிட முயன்றாலும் நீங்காத, நீக்க முடியாத ஒன்றாக நிலை பெற்று விட்டன.

**''இவன் யார் சொல்ல, நான் என்ன கேட்க?'' என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்து விட்டானாயின் உலகமே குழப்பம் நிறைந்த ஒரு போட்டிச் சந்தையாகவே முடிந்து விடும். தனக்குள்ள பொறுப்பினையும் உணர்ந்து, மற்றவர் களின் தகுதியையும் நியாய உணர்வோடு மதித்துச் செயல் படுகிறவர் களுக்கிடையில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற வேறுபாட் டுணர்ச்சியே தோன்றாது. இந்த நேர்மையான பக்குவம் கொண்ட வழியில்தான் என் னோடு வந்த ஒவ்வொருவரும் நடந்து கொண்டனர். காமி ராவைத் தூக்குவதும் அவரே, அதைக் கொண்டு படம் எடுப்பவரும் அவரே. இப்படி நாங்கள் ஒவ்வொருவரும் பணியாற்றி னோம்.**

மினி ரயில் உண்டு. அது மூன்று நான்கு மைல் வேகத்தில் மேல் நோக்கிப் போகும். இவ்வளவு மெல்லச் செல்லும் ரயில் திடீரென கீழ் நோக்கி படுவேகமாக அறுபது எழுபது மைல் என்ற வேகத்தில் தலை தெறிக்க ஓடும். இந்த வேகத்தில் போகும் போதே பக்கவாட்டில் திரும்பும். வேகமாய் போகின்ற மோட்டார் சைக்கிள் எப்படி ஒரு பக்கம் சாய்ந்தவாறே திரும்புமோ அது போலிருக்கும் இந்த ரயில் செல்வது.

இதை மரண ரயில் என்று கூட அழைக்கலாம். குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டவர்கள் இதில் ஏறக் கூடாது. அதாவது



ஒரு பாடல் ஒலிப்பதிவின்போது
எம்.ஜி.ஆர்., எம்.எஸ்.விஸ்வநாதன், டி.எம்.சௌந்தர்ராஜன்

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்காரக் கூடாது.

அதிர்ச்சியினால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பது தான் அதற்குக் காரணம். அந்த வண்டியின் முன் பக்கத்தில் பிடித்துக் கொள்ள ஒரு இரும்புக் குழாய் வைக்கப்பட்டிருந்து. விமானம் புறப்படும் போது இறங்கும் போதும் இடுப்பில் பெல்ட் கட்டிக் கொள்ளுவது போல் கட்டிக் கொண்டோம்.

எனது இடது பக்கத்தில் சந்திரகலாவும், பின்னால் நாகேஷும், அவருக்குப் பின்னால் ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தியும், உதவியாளர் ராமகிருஷ்ணனும் அமர்ந்தோம்.

நான் எல்லோரிடமும் கேட்டேன்: ''பயப்படமாட்டோமே?'' என்று. இல்லையென்ற பதில் துணிவோடு கிடைத்தது.

வண்டி மெல்ல அசைப் போட்டு மேல் நோக்கிச் சென்றது. மேலே சென்றதும் கீழ் நோக்கி படுவேகமாக ஓடத் தொடங்கியது. அவ்வளவுதான்... ஆங்கிலப் படங்களில் பெண்கள் அலறுவது போல் பயங்கரமாகச் சந்திரகலா கத்தினார். கவனித்தேன். இரு கைகளாலும் பிடித்திருந்த இரும்புக் குழாயை விட்டுவிட்டுத் தன் நெஞ்சை இரு கைகளாலும் அழுத்திக் கொண்டு, அப்படியே என் தோள் மீது சாய்ந்து விட்டார். நானே என் இரு கைகளாலும் இரும்புக் குழாயைப் பிடித்திருந்தேன். இடது கையால் உடனே அவரைப் பிடித்துக் கொள்ளவும் முடியாது. அவரைவிட அதிக கூச்சத்தில் கத்தினேன். ''பயப் படாதே, பயப்படாதே'' என்று! அதோடு என் இடது கையை எடுத்து அவரைச் சுற்றிப் பிடித்துக் கொண்டேன். அந்தச் சில வினாடிகளில் சந்திரகலா அவருக்கு இடது பக்கத்தில் சாய்ந் திருப்பாரானால் என்னால் ஏதும் செய்திருக்க இயலாது.

அவர் ஒரு வேளை கீழே விழாதிருக்க அவர் இடுப்பில் கட்டியிருந்த பட்டை காப்பாற்றினாலும் கூட, தொங்கிக் கொண்டே வந்திருப்பார். திடீரென்று அந்த வேகத்தில் பக்க வாட்டில் விழும்போது இடுப்பில் நடு எலும்பு வெகு எளிதாக முறிந்து விடும் அல்லது விலாப்புற எலும்புகளில் ஒரு சிலவாவது உடைந்து விடும். அதற்கும் மேலாக இடுப்பிலிருந்து தொங்கும் உடம்பு எப்படி அலைக்கழிக்கப்படும் என்பதையும் அதனால் தலை, முகம் முதலியவைகளுக்கு அங்கங்கே மோதுவதால் ஏற்படும் காயங்கள் எத்தகையனவாக இருக்கும் என்பதையும் இப்போதுகூட என்னால் எண்ணிப் பார்க்க முடியாது. ''உனக்கு மட்டும் 'பயப்படாதே' என்று சொல்ல எப்படித் துணிவு வந்தது?'' என்று கேட்கலாம். எவ்வாறோ அந்தப் பழக்கம் எனக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

இதை எழுதும்போது பல ஆண்டுகட்கு முன் நடந்ததும் இதுவரை சம்பந்தப்பட்ட யாராலும் வெளியிடப்படாததுமான ஒரு விபத்தைப் பற்றி இங்கே எழுத வேண்டும் என்று தோன்று கிறது.

கடலூரில் கழக நண்பர்கள் நடத்திய ஒரு நாடகம் தமிழகத்தின் முதல்வரும் கழகத் தலைவருமான கலைஞர் அவர்கள் தலைமையிலும் என் முன்னிலையிலும் நடை பெற்றது. தம்பி சிவாஜி கணேசன் அவர்கள் மேடையில் தோன்றி, 'பராசக்தி'யின் நீதி மன்றக் காட்சியை நடித்துக் காண்பிப்பார் என்றும் ஏற்பாடு.

அப்போது என்னிடம் 'வாக்ஸால்' என்ற சிறிய கார் தான் இருந்தது.

அதை ஓட்டியவர் இப்போதும் என்னுடனிருக்கும் திரு.கதி ரேசன் அவர்கள்தான். அந்தக் காரின் முன் இருக்கையில் திரு. எஸ்.எம்.திருப்பதிசாமி அவர்கள் அமர்ந்திருந்தார். பின்னால் இடது பக்கத்தில் நானும், கதிரேசனுக்குப் (கார் ஓட்டியவர்) பின்னால் தம்பி சிவாஜி கணேசன் அவர்களும் உட்கார்ந் திருந்தோம். சிறு தூறலாக மழை பெய்து கொண்டே இருந்தது. புதுவையைத் தாண்டி இருப்போம் என்ற நினைவு.

திடீரென்று கார் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று திசைமாறி வேகமாக ஓடியது. ஒரு பக்கத்தில் இருந்த மரங்கள் காருக்கருகில் பாய்ந்து வந்து மோதுவது போலும், மறு பக்கம் கார்




ஜப்பான் ட்ரீம் லாண்டில் படப்பிடிப்புக் குழுவினருடன் வி.என்.ஜானகி

திரும்பியதும் அந்தப் பக்கம் இருந்த மரங்கள் காரை நோக்கி ஓடி வருவது போலும், இப்படி நாலைந்து முறை வளைந்து வளைந்து ஓடியது. ஏதோ ஒரு விதமான 'கிறீச்' சென்ற சத்த மும் கரகரவென்ற சத்தமும் கலந்து பயங்கர ஒலியை ஏற்படுத்தியதுடன், நாங்களிருந்த அபாயத்தையும் எதி ரொலித்தது. பகலெல்லாம் நடித்து ஓய்ந்திருந்த நிலையில் நல்ல குளிர்க்காற்று வீசவே பின் இருக்கையில் சாய்ந்து கண்ணை மூடி விட்டார் தம்பி கணேசன். திடீரென்று ஏற்பட்ட இந்தச் சப்தம் அவரைக் குழப்பி விட்டது போலும். ''அண்ணே என்ன இது?'' ... என்று கண் விழித்ததும் கத்தி விட்டார். அதே நேரத்தில் நான் கதிரேசனை நோக்கிச் சப்தம் போட்டுக் கொண்டிருந்தேன். ''பயப்படாதே, பதறாதே கவனி. பயப்படாதே''- இவ்வாறு சப்தம் போட்டேன்.

நாங்கள் சென்ற கார் எப்படியோ ஒரு வழியாக நின்றது. காரில் இருந்து எல்லோரும் இறங்கினோம். கடலூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாங்கள் இறங்கிப் பார்த்த போது, அந்தக் கார் சென்னையை நோக்கியல்லவா நின்று கொண்டிருந்தது!

அன்று தம்பி சிவாஜி கணேசன் அவர்களுக்கும் எனக்கும் திருப்பதிசாமி, கதிரேசன் நால்வருக்கும் ஏற்பட இருந்த விபத்தையும், அதன் விளைவு மோசமானதாக இருந்திருந்தால் தமிழகத்தின் சிறந்த நடிகர் என்ற சிறப்புப் புகழைப் பெற்றிருக் கும் தம்பியைப் பெற்ற பேற்றைத் தமிழகம் இழந்திருக்குமே... கடமையுணர்வு கொண்ட ஒரு கார் ஓட்டியையும் நல்ல நண்ப ரான திருப்பதிசாமி அவர்களையும் அல்லவா நாடு இழந் திருக்கும்!

வீதியிலே இருந்த சாணத்தின் மீது மழைத்தூறல் படிய, வேகமாகச் சென்ற கார் டயர் அந்தச் சாணத்தின் மீது பட வழுக்கி விட்டது. அதன் விளைவு இந்தப் பெரிய, கோரமான, கொடுமை யான ஒரு விபத்துக்கு அடிகோலப் பட்டது. ஆயினும் நாங்கள் தப்பினோம். இது போலத்தான் நாட்டின் சிறப்பு மிக்க தியாகிகளையும் மதிப்புமிக்க தலைவர்களையும் சந்தர்ப்ப வசத்தால் பயம் கொண்டு விட்டவர்கள் சிலர் தாக்குகிறார்கள்.



ஜப்பானிய உடையில் சந்திரகலா, எம்.ஜி.ஆர்.

அவர்களுக்கென்ன! வெற்றி பெற்றாலும் அவர்களுக்குப் பலன் இல்லை; தோல்வியடைந்தாலும் ஏமாற்றமில்லை. பாதையிலே கிடக்கும் சாணத்திற்கு தம்பியும் நாங்களும் சென்ற காரைக் கவிழ்ப்பதில் என்ன லாபம்? மழைத்தூற்றல் அதற்கு ஒரு புதிய சக்தியைத் தந்தது. (அதாவது தற்காலிகமானதுதான். அது நிரந்தரமானதல்ல) ஏனெனில் சூரியன் உதித்து அவனுடைய ஒளிக் கதிர்களால் அது தாக்கப்படுமானால் வழுக்கி விடும் சக்தியை அது மிக விரைவில் இழந்து விடும்... கொடுத்து வைத்தது அவ்வளவுதான். ஆனாலும் இந்த இடைக்காலத்தில் அது செய்யும் திருவிளையாடல்கள் எத்தனை! எத்தனை...!

அன்று சந்திரகலாவுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருப்பின் நான் என் வாழ் நாள் முழுவதும் மட்டுமல்ல, அவர்களது குடும்பம் உள்ள வரை, நான் மறைந்த பின்பும் தூற்றப்படுவேன். எந்த உறவினரும் பாதுகாப்பாளருமின்றி என்னையே நம்பி அனுப்பி வைக்கப்பட்ட அவருக்கு விபத்து ஏற்படுமாயின் நான் எந்த முகத்தோடு தமிழகம் திரும்புவது? இவ்வளவும் அந்த ரயில் சுற்றி வந்து சில நிமிடங்களுக்குள்ளேயே என் மனத்தில் அலை மோதியது...

ஒளிப்பதிவு உதவியாளர் இராமகிருஷ்ணன், ராமமூர்த்தி யைப் பிடித்துக் கொள்ள, ராமமூர்த்தி காமிராவைப் பிடித்துக் கொள்ள, காமிரா எங்களைப் படம் பிடித்தது. கொஞ்ச தூரம் வரை என்னையும் சந்திரகலாவையும், பிறகு நாகேஷையும் இப்படிப் படமாக்கினார். அவருடைய துணிச்சலைப் போற்றியே தீரவேண்டும்.

நாங்கள் ரயிலில் இருந்து இறங்கிய பிறகு, அதுவும் சந்திரகலா தனக்கு ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகுதான் எனக்கு மூச்சே வந்தது என்று கூட மிகைப்படுத்திச் சொல்லலாம். பின்னால் எங்களுக்கு ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு முன்னோடியாக இருந்து எங்களைத் தயார் செய்தது போலும்!



# 11

மேலே கம்பியில் செல்லும் கூண்டுக்குள்ளிருந்து படம் எடுக்க விரும்பினேன். அது சரிவர அமையுமா என்ற சந்தேகம் ஒளிப்பதிவாளருக்கு எழுந்தது நியாயமே! ஏனெனில் கூண்டைச் சுற்றி வலுவான கனமான கண்ணாடியா பிளாஸ்டிக்கா என்று தெரியவில்லை. ஆனால் கனமாகவும் வளைந்தும் இருந்ததால், படம் எடுத்தால் தெளிவாகத் தெரியாது போய்விடும் என்றுதான் திரு.இராம மூர்த்தி சந்தேகப்பட்டார்.

ஆயினும் படமாக்கப்பட்டது. இப்படி எத்தனையோ சந்தேகக் கேள்விகளுக்கிடையில் பல கோணங்களில் படமாக் கினோம்- அங்கிருந்த காட்சிகளை. வளைந்த கண்ணாடிகளால் ஆன வளைவுகளைக் கொண்ட பாதையில் படமெடுக்க விரும்பினேன். விளக்கின் ஒளி எங்கள் மீது மட்டுந்தான் படவேண்டும்! அதைப் படமாக்க இயலாதென்று பலரால் முன்னதாகவே முடிவெடுக்கப்பட்டிருந்ததாம். எனினும் நான் விடவில்லை. முயன்று பார்ப்போமே என்று சொல்லி எடுக்கச் செய்தேன். பலன், நூற்றுக்கு நூறு வெற்றியாக இருந்தது...

நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று, நானும் சந்திரகலாவும் உடைகளை மாற்றிக் கொண்டு, மாலையில் அலங்கார விளக்குகளுக்கிடையில் படமெடுப்பதற்காக மீண்டும் எக்ஸ்போவுக்குள் நுழைந்தோம். வழக்கமாகச் செல்லும் வாயிற்படியில் அல்லாது வேறு வாயிற்படி அருகில் எங்களை இறக்கி விட்டுச் சென்று விட்டார் கார் ஓட்டி. நாங்கள் உள்ளே சென்ற பிறகுதான் புரிந்தது வழிமாறி நுழைந்து விட்டோம் என்று. இருப்பினும் சரி என்று நடந்தோம். ஏறத்தாழ சுமார் ஒரு மணி நேரம் நடந்திருப்போம். கண்ணுக்கு அந்த இடம் தெரியும். அதை நோக்கிச் சென்றால் இடையில் பல திருப்பங்கள் எங்களிருவரையும் வேறிடத்துக்கு வழிகாட்டி ஏமாற்றிவிடும். இவ்வாறு சுற்றிச் சுற்றித் திரிந்த போது அன்று வரையில் நான் காணாத பல புதிய இடங்களைப் பார்த்தேன். கடைசியில், நான் பாட வேண்டிய பாட்டைப் போட்டார்கள். அந்த சப்தம் வந்த திசையை நோக்கி நடந்தோம். தக்க நேரத்தில் சேர்ந்தோம். படம் எடுத்தோம்.

தரையிலிருந்து ஒரு பெரிய தூணுக்கு மேலே பரந்து விரிந்த அழகு பொருந்திய முப்பதாயிரம் பல்புகள் கொண்ட மேடையை அமைத்திருந்தார்கள். இதற்கு ''ஸ்விஸ்'' பெவிலியன் என்று பெயர். ஸ்விட்சர்லாந்து நாட்டின் கலைக்கூடம் இது. சுமார் இருபதடி உயரத்தில் இது இருந்தது. அதற்கடியில் நானும் சந்திரகலாவும் பாடி ஆடுவதைப் போலவும், மக்கள் எங்களைச் சுற்றி வேடிக்கை பார்ப்பது போலவும் அந்தக் காட்சியைப் படமாக்கவேண்டி இருந்தது. மக்களின் ஒத்துழைப்பு சரிவரக் கிடைத்ததால் நினைத்தவாறு படமெடுக்க இயன்றது. இது போன்ற பல காட்சிகளை எதிர் பார்த்ததற்கும் மேலாக எடுத்தேன். ஆங்காங்கே அவ்வப்போது ஏற்பட்ட இடைஞ்சல்களை விட, உதவியும் ஒத்துழைப்பும்தான் அதிகமாயிருந்தது. எல்லாவற்றையும் விட, கலைஞர்கள் அனைவரும் தந்த ஒத்துழைப்பு மிகமிக அதிகம். அதைவிட எங்களது உடலும் குறிப்பாகக் கால்களும் சிறிதுகூடச் சளைக்காமல் சோர்வடை




'ஃப்லோட்டிங் மார்கெட்'டில் எஸ்.ஏ.அசோகன், எம்.ஜி.ஆர்., சந்திரகலா.

யாமல் உழைத்த உழைப்பை மறக்கவே முடியாது.

எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் பாசப்பிணைப் போடு இணைத்துக் கொண்டு விட்டதால் துன்பம், தொல்லை, வசதியின்மை, போன்ற அனைத்துக் கஷ்டங்களும் எங்களுக்குப் பெரிதாகவேபடவில்லை.

பன்னிரண்டாம் தேதியோடு எக்ஸ்போவில் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு ''நாரா'' என்ற ஊருக்கு காரிலேயே புறப் பட்டுப் போனோம். நடு இரவுக்குப் பின் அந்த நகரை அடைந் தோம்.

வால்ட் டிஸ்னியின் டிஸ்னிலாண்ட்டைப் போல் இங்கு 'ட்ரீம் லாண்ட்' என்ற ஒன்றை உருவாக்கியிருக்கின்றார்கள். ஒரு படகில் ஏறிச்சுற்றி வரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்தப் படகில் போனால் பல திருப்பங்களில், கரை ஓரத்தில் ஆப்பிரிக்கக் காடுகளில் வசிக்கும் பூர்வகுடிகளைப் போன்ற பொம்மைகள் அசையும்; ஒருவித ஒலி எழும்! மிருகங்கள்

பலவற்றையும் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் சரிவர பராமரிக்காத காரணத்தினால் அவை அந்த அளவுக்கு எங்களைக் கவரவில்லை. ஓரிடத்தில் மான்கள் கூட்டம் கூட்டமாக வேடிக்கை பார்க்கும் மக்களிடம் நெருங்கி வந்து, ஒருவித உணவுப் பண்டத்தைத் தின்று விட்டுச் செல்லுகின்றன. மறுநாள் அங்கு படம் எடுக்கலாம் என எண்ணினேன். ஆனால் மான்கள் பார்க்க அழகாகத் தெரியவில்லை என்பதும் அதன் இயற்கைத் தன்மையோடு நம்மைக் கண்டதும் மருண்டு ஓடினால், பார்க்க நன்றாக இருக்கும் என எண்ணி, மறுநாள் காலையில் வேறிடத்தில் படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மறுநாள்-

பல இடங்களில் நானும் மஞ்களாவும் கலந்து கொள்ளும் காதல் காட்சிகள் படமாக்கப்பட்டன.

சாசரின் மேல் கப் இருப்பது போன்று அமைக்கப்பட்டிருந்தன. ஏறத்தாழ இருபது இருக்கலாம். அவைகளில் வேறு சிலர் உட்கார்ந்திருந்தனர். குடும்பம் குடும்பமாக, நானும் மஞ்சுளாவும் பாடும் காதற்பாட்டை இதிலும் படமாக்கினோம்...

மறுநாளே டோக்கியோவுக்குப் போக ஏற்பாடு செய்யச் சொன்னேன்.

நாராவிலிருந்து மீண்டும் ஓசாகா வந்துதான் விமானத்தில் டோக்கியோவுக்குப் புறப்பட வேண்டியிருந்தது.

ஓசாகாவிலிருந்து 'ஜால்' விமானம் மூலம் டோக்கியோ வந்து சேர்ந்தோம். ஜால் என்றால் Japan Air Lines' என்று பொருள்.

விமானத்திலிருந்த போது வழியில் பிரசித்தி பெற்ற எரிமலையான 'பியூஜி'யைப் பார்த்தோம். அதன் உச்சியில் மேகங்கள் படர்ந்து புகை கப்பிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

சுமார் பத்து மணிக்கு மேல் டோக்கியோ வந்தோம். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் அந்த எரிமலை வெடித்து நெருப்புப்


பிழம்பைக் கக்கியதாம். அதன் பிறகு வெடிக்கவே இல்லை யென்று சொன்னார்கள்.

''ஆண்டவனுக்கு இந்தியரின் மேல் அன்பு அதிகம். அதனால்தான் ஜப்பானில் பயமுறுத்தும் எரிமலையையும், இந்தியாவில் அமைதியான இமயமலையையும் படைத்திருக்கிறார்'' என்று திரு.நாகேஷ் சொன்னார்.

டோக்கியோவில் நகரத்தை விட்டு ஒதுக்குப்புறமான இடத்திலுள்ள ஒரு ஓட்டலில் செலவு குறைவாக இருக்க, வசதியாகத் தங்கினோம். தமிழ்நாட்டு உணவு டோக்கியோவில் ஒரு வீதியில் 'நாயர் கடை' என்ற பெயரில் உள்ள ஒரு ஓட்டலில் கிடைப்பதாகச் சொல்லவே, நண்பர்கள் அங்கு செல்ல விரும்பியதை அறிந்து, அங்குச் சென்றோம். நல்ல ஜன நெருக்கமுள்ள இடத்தில் இந்த உணவுக் கடை இருக்கிறது. தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்ட பின்தான் போனோம். ஆனால் எங்களுக்கு முன் பலர் 'க்யூ'வில் நின்று



'கின்சா' தெருவில் எஸ்.ஏ.அசோகன், லதா.



ஜப்பானில் எம்.ஜி.ஆருக்கு இரவு பகல் எனப் பாராது காரோட்டித் தொண்டு செய்த நண்பர் சீட்டோ.

கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தோம். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின், அங்கு சாப்பாடு போடப்பட மாட்டாது என்றும் முதலிலேயே சொல்லியிருந்தார்கள்.

தமிழர் உணவு வேண்டும் என்றால் க்யூவில் நின்றே ஆகவேண்டும்!

சென்ற ஏழெட்டு நாட்களாக எப்படிப்பட்ட உணவுகளையெல்லாம் உண்ட எங்களுக்கு, இந்த ஒரு வேளையாவது நல்ல உணவு சாப்பிட வேண்டும் என்ற ஆசை தோன்றியது தவறில்லையே! உள்ளேயிருந்து சாப்பிட்டு வெளியே வருகிறவர்கள் எத்தனை பேரோ அந்த எண்ணிக்கைப்படிதான் புதியவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள்.

ஒரு சிலர், சாப்பிட்டவர்கள், வெளியே வந்தார்கள். அதற்கு முன் ஓட்டலின் உரிமையாளர் என்று சொல்லப்பட்ட ஒருவர் வாயிற்படியில் எட்டிப் பார்த்து 'எம்ஜியார் ஆட்கள் உள்ளே வாருங்கள்' என்றார். அவர் சொல்லி, எங்களில் சிலர் முன்னால் செல்லுமுன் உள்ளே இருந்து வெளியே சிலர் வந்தனர். அவர்கள் வெளியே எப்படி வந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு சிலர் உள்ளே நுழைந்து விட்டார்கள் - அந்த உரிமையாளரைப் பின் தள்ளியவாறு நான் கேட்டேன்: ''பெண்களுக்காகவாவது இடம் கிடைக்குமா?'' என்று. சிறிது நேரத்தில் உரிமையாளர் மீண்டும் வந்து அழைத்தார். நல்ல வேளையாக முதலில் நடந்ததைப் பார்த்திருந்த நண்பர்கள் பெண்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார்கள். எனக்கு ஒரு இடம் தரவும் அந்த

உரிமையாளர் தயாராயிருந்தார். ஆனால் ''வேண்டாம்'' என்று சொல்லி விட்டேன்.

அந்த உரிமையாளரைப் பார்த்ததும், நான் ஜப்பானில் எங்களுக்கு உறுதுணையாயிருந்த நண்பர் திரு.சந்தானம் அவர்களிடம் ''நாயர் கடை என்கிறீர்கள். இவரைப்பார்த்தால் ஜப்பானியர் போலிருக்கிறாரே'' என்று கேட்டேன். ''இவருடைய தந்தை ஒரு நாயர்தான். ஆனால் தாய் ஜப்பானிய மாது'' என்றார்.

ஜப்பானியப் பெண்ணை மணந்து சுமார் இருபத்தைந்து வயதுள்ள பிள்ளைக்குத் தந்தையாயிருக்கிறார் என்றால், எத்தனை ஆண்டுகட்கு முன்னதாகவே அவர் ஜப்பான் சென்றிருக்க வேண்டும் என்று யோசித்தவாறே திரு.சந்தானம் அவர்களோடு, ஓட்டலுக்குத் திரும்பினேன் சாப்பிடாமலேயே. ஆனால் அவரோ, அவருடைய வீட்டுக்கு அழைத் துச் சென்று அவருக்கிருந்த உணவை எனக்களிக்கத் தயாரானார். ஆனால் அவருடைய வாழ்க்கைத் துணைவியாரின் கை அட்சய பாத்திரத்தின் தன்மை படைத்தது போலும்! எங்கள் இரு வருக்குமே உணவு அளித்து வயிற்றை நிரப்பிற்று.

இந்த நாயர் ஓட்டலில் தரும் உணவைப் பின் ஒரு நாள் அமைதியான சூழ் நிலையில் உண்டேன். கறிக் குழம்பும் சாதமும், அட்டைப் பெட்டியில் குளுகுளு வென்று, வெளியிலும் கிடைக்கும் தயிர், இதுதான் தமிழ்நாட்டு உணவு. இதற்குத்தான் இத்தனை போராட்டம். ஜப்பானியர்களே இங்கு அதிகமாகச் சாப்பிடுகிறார்கள் என்றால் ஆச்சர்யப்பட வேண்டாம்.

பிற்பகலில் படப்பிடிப்புக்கான இடங்களைப் பார்க்கச் சென்றோம். டோக்கியோ நகரில் உயரமான ஹைவே பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நெரிசல் அதிகமுள்ள தாழ்வான பாதைகளும் உள்ளன. ஆனால் ஹைவே பாதையில் போகிறவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் விரும்புகின்ற இடத்திற்குச் செல்ல முடியும் - காலதாமதமின்றி...

அந்த ஹைவே பாதையில் செல்லுகின்ற கார்களுக்கு நிறையக் கட்டணம் வசூலிக்கின்றனர். நேரத்தை மதிக்கின்ற வர்கள் அந்த வழியில் செல்லுகின்றனர். கட்டணத் தொகையை மனநிறைவோடு கொடுக்கின்றனர். அரசுக்கு இந்தக் கட்டணத் தின் வாயிலாக நல்லதொரு வருமானம் கிடைக்கின்றது.

டோக்கியோவிலேயே பெரிய 'ஓட்டல்' என்று கூறப்பட்ட ''நியூ ஒட்டானி'' ஓட்டலைப் பார்வையிட்டோம்.

கழலும் சாப்பிடும் இடம், அந்த ஓட்டலின் உச்சியில் கட்டப்பட்டிருக்கிறது. அதில் இருந்து படமாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேலே சென்றோம். அது சுற்றுவதையும் கவனித்தோம். அது சுற்றிவரும் வேகம் மிகத் தாமதமாக இருந்தது. அதனால், படம் எடுத்தாலும், மக்கள் ரசிக்கும் வகையில் எடுத்துக் காட்ட இயலாது என்பதை அறிந்ததால் அந்த ஆசையை விட்டுவிட்டோம். பிறகு அங்கிருந்து புறப்பட்டு 'யூமூரிலாண்ட்' என்று சொல்லப்பட்ட இடத்தைப் போய்ப் பார்த்தோம். ஜப்பானில் நாங்கள் எங்கெங்கு சென்றோமோ, எங்கெல்லாம் இது போன்ற அமைப்புகளை உருவாக்கி இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் குழந்தைகள் ரயில், குழந்தைகளுக்கான விளையாட்டு இடங்கள், இப்படி குழந்தை களுக்கும் தேகப் பயிற்சி செய்யக்கூடியவை முதலியவைகளைப் பெரியவர்களுக்கும் என்று ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ''யூமூரிலாண்ட்'' என்ற இடத்தில் ஒரு கொட்டகை கட்டியிருக்கின்றார்கள். அதில் தண்ணீர் நிறைந்த ஒரு குளம். பல ஆண்களும் பெண்களும் அதில் நீருக்குள் நடனமாடுகின்றனர். உடலில் குறைந்த அளவுள்ள நீச்சல் உடைகளில் என்று கருதிவிட வேண்டாம்.

கிராமியக் கதையைப் போன்ற ஒரு கதையைப் பல பாத்திரங்களைக் கொண்டு நடித்துக் காட்டுகின்றனர். ''ஆக்ஸி ஜன்'' என்ற பிராணவாயுவை அவ்வப்போது ரப்பர் குழாயின் வழியாக இழுத்துக் கொள்ளுகின்றனர். ஒரு சிலர் திறமை மிக்கவர்கள். சிறிது நேரம் எந்த உதவியுமின்றி உள் மூச்சடக்கி

ஆடுகின்றனர். தண்ணீருக்குள் ஆட்டமா என்றால், ஆம். நீந்தியவாறு, வெளியே ஒலிக்கும் உரையாடலுக்கு உதட்டை அசைக்கின்றனர். பாட்டுக்கேற்ப உடல் அசைவுகள், சுழன்று நீந்துவது, தரையில் நின்று அழகான நிலைகளைக் காண்பிப்பது போல் தண்ணீருக்குள்ளேயே அப்படிப்பட்ட 'போஸ்' களைக் காண்பிப்பது.. இவ்வாறு கலைஞர்கள் நடன நிகழ்ச்சி மட்டு



படப்பிடிப்பில் சில நிமிடங்கள் ஓய்வெடுக்கும் எம்.ஜி.ஆர்., சந்திரகலா, நாகேஷ் மற்றும் குழுவினர்.

மின்றி காட்சி சோடனைகளும் உடை மாற்றங்களும் அவ்வப் போது கதைக்கு ஏற்ப காட்டப்பட்டன.

இந்த அமைப்பை, ஒரு பெண்தான் உரிமையாளராயிருந்து நடத்துகிறார்.

விளக்குகளை எந்தெந்த இடத்தில் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்வது, எப்போது கொஞ்சம் கொஞ்சமாக அவை மங்கி மறைவது என்பதையெல்லாம் அவர்தான் மேற்பார்வையிட்டு ஏற்பாடு செய்து கொடுக்கிறார் என்று அறிந்த போது, திகைத் தோம். ஒரு கம்பெனியை நிர்வகித்தல் என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதிலும் அதற்குத் தேவையான கலை நுணுக்கங்களையும் யோசனை சொல்லி, ஆராய்ச்சி பக்குவத் தோடு செயலாக்கி, அதனை நடைமுறையில் எளிதாகக் காட்டுவது எத்துணை சிரமமான காரியமென்பதை எண்ணி எண்ணி வியந்தோம். ஆனால் அவர்களை நேரில் சந்தித்த போது அவர்களுடைய அடக்கமும் கருத்துக்களை வெளியிடும் போது சந்தேகமற்ற நிலையில், அழுத்தமாக வெளியிடும் தன்னம்பிக் கையையும், ஆர்ப்பாட்டமில்லாத பேச்சின் தன்மையையும் கண்ட நாங்கள், ''நிறை குடம் தளும்பாது'' என்ற பழமொழிக்கு எடுத்துக் காட்டாக அந்த அம்மையார் இருப்பதை அறிந்து மகிழ்ந்தோம்.



12

உடல் வலிவு மட்டும் இருந்தால் பயனில்லை; அந்த வலிவைக் காலநேரம் பார்த்து நன்மைக்குப் பயன்படுத்தும் பகுத்தறிவும் இருந்தே ஆகவேண்டும். அதை நான் சந்தித்த பல ஜப்பானியர்களிடம் கண்டேன் என்றால் மிகையல்ல.

ஜப்பானில் நாங்கள் படம் எடுக்கத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் (இரண்டொரு நாட்கள்) இயற்கை எங்களோடு ஒத்துழைக்கவில்லை. ஜப்பானிய மக்களின் மனமும் ஆற்றலும் ஒத்துழைக்கத் தயாராயிருந்தும் இயற்கை தனது வலிமை மிகப் பெரிது என்பதை எங்களுக்கு எடுத்துக் காட்டி எச்சரித்தது.

இந்தியத் துணை கண்டத்திற்குள் படம் எடுக்கும்போதே எத்தனையோ சிக்கல்கள் பிரச்னைகள். காதலர்கள் பாடும் காட்சி படம் ஆக்கப்படும்போது, பாடலை ஒலிபெருக்கியின் வாயிலாக ஒலிபரப்பி, அதைக் கேட்டு நடிக, நடிகையர்கள் நடிக்க வேண்டும். தூரத்தில் தனிமையில் இருவரும் இருப்பதைப் போல் காண்பிக்க ஆரம்பித்து, 'ஜூம் லென்'

ஸின் உதவியால் மெள்ள மெள்ள நடிகர்களின் உருவம் பார்ப்பவர்களை நோக்கி நெருங்கி வருவது போன்று எடுக்கப் படுவதாக வைத்துக் கொள்வோம். வெகு தூரத்தில் இருப்பவர் கள் பாடலுக்கு ஏற்ப உதட்டை அசைக்கின்றார்கள். தாளத்துக்கு ஏற்ப அங்க அசைவைச் சரிவர நிறைவேற்றுகின்றார்களா என்பது ஒருவேளை தெரியாது என்று நம்மை நாமே சாமானப்படுத்திக் கொள்ள நினைத்தாலும், தூரத்திலிருந்தவாறே பக்கத்தில் தெரிவது போல காண்பிக்கும் போது, மேலே சொன்னவைகள் பாட்டின் ஒலிக்கு ஏற்பப் பொருந்தியிருக்க வேண்டுமே...

அதிலும் படகுகளில் போவதாகக் காட்சி அமைக்கப் பட்டுவிடுமாயின் ஒலிபெருக்கியை எங்கு கொண்டு வைப்பது அதற்கு? அந்தக் கருவிக்கு 'பிளேபாக்' யந்திரத்திலிருந்து எப்படி, எவ்வளவு தூரத்திற்கு கம்பித் தொடர்பை ஏற்படுத்தித் தருவது?

இதுபோன்ற கஷ்டங்கள் சகல வசதிகளும் பெற்றுள்ள உள்நாட்டிலேயே ஏற்படுகின்றனவென்றால் வெளிநாட்டில் போய்ப்படம் தயாரிப்பவர்களின் நிலை என்ன? அதிலும் இந்தியப் பேரரசால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலா வணிக்குள் இவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்வது என்றால் எப்படி முடியும்? ஆயினும் அதற்காக நமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளாமல் எப்படித் திரும்புவது? நல்ல வேளையாக நாங்கள் தமிழகத்திலிருந்தே ஒளிப்பதிவுக் கருவிகள் இரண்டைக் கொண்டு சென்றிருந்தோம். எம்ஜியார் பிக்சர்கக்குச் சொந்தமான ''மிச்சல்'' என்ற பெரிய கருவியையும், கையில் தூக்கியவாறு படம் எடுக்கக் கூடியதும் அதிக கனமற்றதுமான, வாடகைக்கு எடுத்த ''ஏறி'' என்ற சிறிய ஒளிப்பதிவுக் கருவியை யும் எடுத்துச் சென்றிருந்தோம்.

அதனால் அந்தச் செலவு எங்களுக்கு ஏற்படாதது மிக மிக உதவியாயிருந்தது.

'யூமூரிலாண்ட்' என்ற இடத்தில் உள்ள அன்னப் பட்சி போன்ற பெரிய படகில் (அது ஒரு சிறிய கப்பல் அளவிற்குப்



பெரிதாயிருந்தது) ''பன்ஸாயி'' என்ற காதல்பாட்டைப் படம் ஆக்கினோம்: பாடலைப் பாடி நடித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் படகுக்குப் பக்கத்தில், உயரத்தில் பாலத்தின்மீது செல்லும் சிறிய மின்ரயிலைச் சேர்த்துப் படமாக்க விரும்பியதன் விளைவு, இரண்டு மணி நேரம் வீணாயிற்று என்பதுதான்! 'அப்படியானால் அதைப் படமாக்கவில்லையா?' என்று கேட்கத் தோன்றும். எடுக்க முடியாமல் போனதாயின் இங்கே ஏன் எழுதப் போகிறேன்? ஆசைப்பட்டதைக் காத்திருந்து படமாக்கினோம்.

ஜப்பானில் எங்காவது பூங்காக்களை அழகுபடுத்தி வைத்திருக்கின்றார்கள் என்றால் பெரியவர்களும் சிறியவர்களும் கண்டிப்பாக அங்கு செல்லாதிருக்க மாட்டார்கள்.

மரண இரயில் எங்கும் உண்டு. அந்த வண்டிகளில் குழந்தைகள் உட்கார்ந்து அது மெள்ளச் செல்லும் போது சிரிப்பதும், அந்தரத்திலிருந்து கீழே விழுவது போல் கீழ் நோக்கி வண்டி

பாய்ந்து ஓடும் போது கத்துவதும், மீண்டும் சிரிப்பதும், பார்ப்பதற்குக்கண் கொள்ளாக்காட்சியாகும். இங்கு இந்தச்சிறிய ரயில் பாதை சிறிய ஏரியில் உள்ள தண்ணீர்ப் பகுதியின் வழியாக மேல் நோக்கிச் செல்லுகிறது. தண்ணீருக்குள் அமுந்தி விடுவோமோ என்று எண்ணுமாறு மேலிருந்து ரயில் வேகமாக வந்து, தண்ணீரில் மோதித் தண்ணீரின் மேலேயே ஒரு சுற்றுச் சுற்றி மீண்டும் மேல் நோக்கிப்போகும். தண்ணீருக்குள் இரயில் பாயும் போது கூச்சல் போடுவதும் அழுவதும், பிறகு தண்ணீரின் மீதே சுற்றும் போது இரு பக்கங்களிலும் கைகளால் துழாவிச் சிரிப்பது மாக அந்தக் குழந்தைகள் செய்கின்ற அட்டகாசங் களைப் பார்க்கும் போது, நாமும் அந்தக் குழந்தைகளாக மாறிவிடக் கூடாதா; எந்தப் பிரச்னைகளும் நெருங்க முடியாத தும், களங்கத்தை அறியமுடியாததும், கலப்படத் தத்துவத்தைப் பேசிப் பிறரை ஏமாற்றும் எண்ணம் எதுவுமே தெரியாததும் ஆன அந்த நல்லிதயங்களைப் பெறக் கூடாதா என்றெல்லாம் நிச்சயமாக எப்படிப்பட்டவருக்கும் தோன்றாமல் போகாது.

**'பின்னோடிச் சென்று விட்ட காலம் இனி திரும்பவா போகிறது? மனத்தை வேண்டுமாயின் அந்தக் குழந்தை மனமாக்க முயலலாமே தவிர, கடந்து போன வாழ்க்கையை எப்படித் திரும்பப் பெற இயலும்? இப்படி எண்ணும்படி செய்தது திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் ''நேரம் போகுதுங்க. இருட்டப் போகுது; சீக்கிரம் முடிக்கலேன்னா அப்புறம் கஷ்டம்'' என்று எச்சரித்த வார்த்தைகள்.**

அவர் அங்கெல்லாம் மனம் விட்டுச் சிரித்த நாட்கள் (அல்ல, நேரங்கள்) மிகக் குறைவென்றே சொல்லலாம். கச்சிதமாகக் கணக்குப் பார்த்து அவ்வப்போது தடுப்புப் போடுவார். அவர் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து மற்றவர்கள் அக்கறையைக் குறைத்துக் கொண்டு வேலையில் அலட்சியமாக இருந்து விடுவார்கள் என்று எண்ணியும் அப்படி இருந்தார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் நாள்கள், செலவு இவைகளில் அவ்வப்போது அவரிடமிருந்து அபாய ஒலி வரும்.

''இந்த ஊரில் இதற்கு மேல் செலவழிக்க இயலாது; எனவே உடனே திட்டமிட்ட அடுத்த ஊருக்குப் புறப்பட வேண்டும்'' என்பார். உடனே என்றால் 'ஓரிரண்டு நாட்கள் அதே ஊரில் படமெடுக்கலாம். அதற்கு மேல் தாங்காது' என்று புரிந்து கொள்ளுவேன். இப்படி எனது சூழ்நிலையை எடுத்துக்காட்டி எல்லா வகைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்தார் திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள்.

குழந்தைகளின் உடல் நலத்தில் அத்தனை அக்கறை காட்டுகின்றனர் ஜப்பானிய மக்கள். அதோடு மக்கள் தங்களின் பொறுப்பினையும் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றனர். ஒரு சிறு காகிதத் துண்டைக் கூடத் தெருவில் கண்ட இடங்களில் வீசி எறிவதோ, எச்சிலைத் துப்புவதோ கிடையாது.

பல கார் ஓட்டிகளையும் நடந்து போகின்றவர்களையும் நன்கு கவனித்தேன். இனிப்புப் பண்டங்களைத் (சாக்லேட் போன்றவைகள்) தின்றுவிட்டு அந்தக் காகிதத்தை மடக்கிச்



'டைகர் பாம்' கார்டனில் குழந்தைகளுடன் எம்.ஜி.ஆர்.

சட்டைப்பையில் போட்டுக் கொள்ளுகின்றனர் வண்டியில் போகின்றவர்கள். அல்லது காரிலுள்ள சிறிய அறையில் போட்டு வைக்கின்றனர். வண்டி நிறுத்தப்பட்டதும் அவைகளை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுகின்றனர். இதை அவர்களுடைய வாழ்க்கைப் பண்பாட்டில் ஒரு பகுதியாக்கிக் கொண்டிருக் கின்றனர் போலும்.



ஆர்.எம். வீரப்பன் அவர்கள்

அதனால்தான் அங்கெல்லாம் 'காக்கை'களைத் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிறது. தெருவிலோ, வீடு, கடைகளைச் சுற்றியோ அசுத்தம் இருக்கும்படி அந்நாட்டு நிர்வாகம் விட்டு வைத்திருந்தால் தானே அதை சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் காக்கை போன்றவை களுக்கு ஏற்பட வேண்டி இருக்கும்! எங்கோ, எப்போதோ ஒன்றிரண்டு ஓட்டலுக்குப் பக்கத்தில் காட்சி யளிக்கும். அவ்வளவுதான்! அதன் குரல் ஒலியும் நமது நாட்டுக் காக்கைகளின் குரல் ஒலிக்கு நேர்மாறுபட்டதாகவே இருந்தது.

ஜப்பானியர்கள் தங்கள் உழைப்பை வீணடிப்ப தில்லை. அந்த உழைப் பினைக் காசாக்குவதில் மிகுந்த கெட்டிக்காரர்கள். அதுபோலவே தங்கள் அறிவை ஒரு எல்லைக் கோட்டுக்குள் அடைத்துக் கொள்வதும் இல்லை. மேலும் மேலும் ஆராய்ச்சி முயற்சியிலேயே அவர்கள் தங்களது நேரத்தைக் கழிக்கின்றனர். எனக்குத் தெரிந்த வரையில், ஜப்பானியர்கள் தங்களுடைய பணி எதுவாயினும் அதை நன்கு புரிந்து கொண்ட பின்னர்தான் செயலில் இறங்குகின்றனர்.

இப்படிப்பட்ட விளையாட்டு இடங்களில் குழந்தை களாயினும் சரியே, சில விளையாட்டுக் கருவி களைப் பயன்படுத்தக் கட்டணம் வாங்குகின்றனர்.

எங்களுடைய படப்பிடிப்புக்கு உதவி செய்யச் சில உதவியாளர்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். ''லைட் பாய்'' என்று இங்கே அழைக்கப்படுகிறார்களே, அது போன்ற பணிகளைச் செய்யவும். ஒளிப்பதிவுக் கருவியை இயக்குவதற்கு உதவவும் அவர்கள் பயன்பட்டார்கள்.

ஒரு நடிகரோ, நடிகையோ வரும்போது விளக்கு ஒளியை அவர்கள் மீது படுமாறு காண்பிக்கச் சொன்னால் உடனே அவர்கள் செய்வது இல்லை. எவ்வளவு தூரம் வருவார்கள்; எது வரை அந்த விளக்கைத் திருப்ப வேண்டும்; அவர் எப்படி யெல்லாம் நடிப்பார் என்பதைப் பற்றி விவரமாகக் கேட்டு விட்டுப் பிறகுதான் காரியமாற்றுவார்கள்.

குறிப்பிட்ட இடத்திலிருந்து சிறிது தள்ளி நின்று விட்டாலும் முன்பு குறிப்பிட்டுச் சொன்ன இடத்தில் விளக்கொளியையோ அல்லது கதிரவனின் ஒளியையோ பாய்ச்சுவார்கள்.

மேலும் ஒரு காரியத்தைச் சொல்லி விட்டு அதே நேரத்தில் அதற்குத் தொடர்பான இன்னொன்றையும் செய்ய சொன்னோ மானால் அவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். அதாவது ஒரு காரியத்தை மட்டுந்தான் அவர்கள் செய்வார்களே தவிர, அதே நேரத்தில் இன்னொன்றைச் சேர்த்துச் செய்ய மாட்டார்கள். தமிழ் நாட்டில் எனது அனுபவம் அப்படியல்ல. இங்குள்ள கலைத் தோழர்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளை ஒருங்கிணைத்துச் செயல் படுவதைக் கண்டவன் நான்.



'ட்ரிம்லாண்ட்' சுழலும் கோப்பையில் 'லில்லி மலருக்கு கொண்டாட்டம்' பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர்., மஞ்சுளா நடிக்க படமாக்கப்படுகிறது.

ஜப்பானில் அப்படிப்பட்ட தொழிலாளிகளையும் தமிழகத்தில் நமது தொழிலாளிகளையும் பற்றி எண்ணி எண்ணிப் பேசிப்பேசி மகிழ்ந்த நாட்கள் பலவாகும்.

பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் பகல் உணவுக்கு அவர்களை அனுப்பியாக வேண்டும். மாலையில் ஏழுமணிக்கெல்லாம் இரவு உணவுக்காக அனுப்பியாக வேண்டும். இப்படி வரையறை வைத்துக்கொண்டு தொழில் செய்பவர்களைத் துணைவர்களாகக் கொண்டு, நேரங்காலம் பாராது வேலை செய்யவேண்டிய நிர்பந்தத்தில் படம் தயாரித்தோம். ஆனால் இரண்டு மூன்று நாட்களில் அந்தத் தோழர்கள் எங்களோடு சேர்ந்து தங்களது பழக்கங்களை மாற்றிக் கொண்டு விட்டனர். அவர்களில் 'ஹீரோஹ்யூட்டோ' என்ற கார் ஓட்டி, முன்னணியில் நின்று எங்களுக்கு உதவினார். அவர் வெறும் கார் ஓட்டியாக மட்டும் பணியாற்றினாரில்லை. விளக்குகளைச் சரிசெய்வது, காமெராவை எடுத்து வைப்பது, ரிப்பேர் செய்வது, ஒலிபெருக்கி இயந்திரத்தில் கோளாறென்றால் அதையும் கவனிப்பது, இப்படியாகப் பல பணிகளை ஆற்றினார்.

நாங்கள் போய் இறங்கிய இடத்தில் வேறு பல கார்களும் நிறுத்தப்படும். மிக நெருக்கமாக அவை (கார்) நிறுத்தப்படுவதால் எங்கள் வண்டியை எடுக்க இயலாமல்போய்விடும். பக்கத்திலுள்ள வண்டியை ஒதுக்கி நிறுத்து மாறு வேண்டி, காரை நகர்த்தக்கூட இட மில்லையே என்ற நிலையில் இவர், அடுத்தவரின் காரை லாவகமாக அங்கு மிங்கும் அரையடி கால் அடி என்பது போல் முன்னும் பின்னும் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி, இருந்த இடை வெளியில் அடுத்த கார்களில் மோதாமல் அந்தக் காரை ஒதுக்கி நிறுத்தி, மிகக் குறுகிய இடத்தின் வழியாக எங்களது 'மினி பஸ்'ஸை வெளியே எடுக்கும் சாமர்த்தியத்தை, அவ்வளவு திறமையை அதற்கு முன் நான் ஓரிருவரைத் தவிர, வேறு யாரிடமும் பெரும்பாலாகக் கண்டதில்லை.

இவரை விட்டுப் பிரியும்போது நாங்களும் அவரும் கண்ணீர் விட்டவாறேதான் பிரிந்தோம். ஆங்காங்கே காண்ட்ராக்ட் எடுத்திருந்தவர்களும் இப்படித்தான்.

இரண்டு நாட்களாக மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மூன்றாம் நாள் மேக்-அப் போட்டுக் கொண்டு கார்களில் ஏறிப் புறப்பட்டோம். எங்களைக் காண்ட்ராக்ட் செய்திருந்த கவாய் என்பவரும் அவரது நண்பர் ஹென்றியும்: ''இந்த மாதம் முழுவதும் இங்கு இப்படித்தான் இருக்கும்! உங்கள் (லக்) அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போம்'' என்று சொன்னார்கள்.

'இனோஷிமா' என்ற இடத்தில் பியூஜி என்ற எரிமலையின் எதிரில் உள்ள ஏரியில் படமாக்க எண்ணிச் சென்றோம்.

ராணுவ முக்கியத்துவம் உள்ள இடத்தைத் தவிர, வேறு இடங்களில் படமாக்க அனுமதி வாங்கும் தேவை அங்கெல்லாம் கிடையாது. எனவே எங்களுக்கு ஒருவகையில் அது மிகவும் உதவியாயிருந்தது. அங்கு செல்ல காரில் ஏறினோமோ, இல்லையோ மழை தூற்றல் போட ஆரம்பித்தது.

நாங்கள் தொடங்கிய பயணத்தை நிறுத்தத் தயாராயில்லை. நிறுத்தி விட்டு நாளை எடுக்கலாம் என்று நினைக்கவே இடம் இல்லை. திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் உருவம்தான் முன்னால் நின்று கொண்டிருக்கிறதே! எப்படி நாளைக்கு என்று தீர்மானிக்க முடியும்? பணத்தின் நிலைமையையும் மற்ற நடிக, நடிகையர்களுக்குத் தமிழகத்தில் பல படத் தயாரிப்பாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தமும் கால்ஷீட் பிரச்னைகளும் நாங்கள் வெளி நாட்டில் அதிக நாட்கள் தங்க இயலாத வகையில் இருந்தன.



சந்திரகலா, நாகேஷ்

பியூஜி எரிமலைக்கு எதிரே




'டால்பின் ஷோ' அரங்கம்

இருந்த ஏரியில் படுவேகமாகச் செல்லும் படகில் காதல்பாட்டின் ஒரு பகுதியைப் படமாக்கினோம். அங்கு செல்லும் வரை, அந்தப் படகைப் பார்க்கும் வரை, எனக்கு அப்படிப்பட்ட யோசனை எதுவும் இல்லை. நீரில் நல்லதொரு பாறை போன்ற மண்டபத்தில் அந்தப் பாட்டைப் படமாக்க வேண்டும் என்பதே என் எண்ணம். ஆனால், அங்கு சென்று அந்த இடத்தின் அமைப்பைப் பார்த்ததும் என் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விசைப் படகில் பாடலைப் படமாக்கினேன். நானும் சந்திரகலாவும் கலந்து கொண்ட காட்சி அது. அதை மனத்திருப்தி பெறும் அளவுக்குப் படமாக்கிய பின், அந்த இடத்திற்கருகில் இருந்த 'மீன் சர்க்கஸ்' காட்சியைப் படமாக்க ஆசைப்பட்டேன். அங்கு செல்லுமுன் கேள்விப்பட்டிருந்தேனே தவிர, நேரில் பார்த்தது இல்லை. உள்ளே சென்றோம், கட்டணம் செலுத்தி. அதன் உரிமையாளரிடம், ''இதைப் படமாக்க வேண்டும். காலையில், பகலில் செய்து காட்ட இயலுமா?'' என்று

கேட்டோம். அவர் 'தனக்கு அதற்காகத் தனியாகப் பணம் வேண்டாம் என்றும் காட்சி நடைபெறும் போதே படமாக்கிக் கொள்ள இயலுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்' என்றும் சொல்லி விட்டார்.

மீன் சர்க்கஸ்ஸை நானும் சந்திரகலாவும் திரு.நாகேஷும் பார்ப்பது போல் அதைப் படமாக்கினோம். நாய், புலி முதலியவைகள் நெருப்புப் பற்ற வைத்த வளையத்திற்குள் பாய்வது போல் மீன் தண்ணீரிலிருந்து மேலே எழும்பி, அந்த வளையத்தின் வழியாகப் பாய்ந்து, மறுபுறம் தண்ணீருக்குள் விழும் இந்தக் காட்சியில் நடைபெற்ற வேறு ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளையும் படமாக்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

டோக்கியோவிலிருந்து புறப்படும்போது மழைத் தூறல் விழுந்து கொண்டிருந்தது. ஆனால் நாங்கள் குறிப்பிட்ட இடம் சேர்ந்த போது சூரியன் தனது ஒத்துழைப்பை முழுக்க முழுக்கத் தந்தான். நினைத்ததை விட, நல்லதும் புதியதுமான காட்சிகளைப் படமாக்கிய மகிழ்வில் அனைவரும் டோக்கியோவுக்குத் திரும்பினோம்.

டோக்கியோ நகரத்திலேயே ''டோக்கியோ டவர்'' (டோக்கியோ கூண்டு) என்ற மிக உயரமான கட்டிடத்தில் படமாக்க விரும்பியதால், கலை நண்பர்களுடன் அந்த கட்டிடத்தைப் பார்க்கச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்தி விட்டு லிப்ட்டில் சென்றோம் மேல் நோக்கி.

திரும்பும்போது ஜப்பானிய நாணயமான 'என்' என்பது பற்றி பேச்சு வந்தது. ''என்'' என்று சொல்லும் போதெல்லாம் ''இது நம்மிடம் ஏன் ஏன் என்றே ஒலிக்கிறது'' என்று நான் சொன்னதும் எல்லோரும் சிரித்தனர்.

ஏன் என்றால் எல்லோருக்கும் பணம் (என்) தேவை...

நாங்கள் ஒட்டானி ஓட்டலின் வெளிப் புறத்தில் படமெடுத்துக் கொண்டிருந்த போது ஒரு வெள்ளைக்காரத் தம்பதியர் என்னைப் பார்த்து, ''அமெரிக்கா வந்தும் படம் எடுக்க

வேண்டும்'' என்று அவர்களின் வீட்டு முகவரியைக் கொடுத்து விட்டு வண்ணத்தில் படமெடுத்துக் கொண்டார்கள்.

டோக்கியோவில் 'கின்ஸா' தெரு என்று ஓர் இடம் இருக்கிறது. உலகிலேயே அழகு நிறைந்த அந்த இடத்தை எத்தனை முறை பார்த்தாலும் மகிழ்ச்சிக்குக் குறையேதுமில்லை. திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத்தான் தூண்டும்.

அந்த இடத்தில் திரு.அசோகன், லதாவின் முதுகில் சிறிய கைத்துப்பாக்கியை வைத்துச் செல்லும் காட்சியும் அண்ணனையும் அண்ணியையும் சந்திக்க வரும் தம்பியாகிய நானும் சந்திரகலாவும், திரு.நாகேஷும் தேடுவது போன்ற காட்சியும் அந்த வீதியில் பல இடங்களில் படமாக்கப்பட்டன.

கூடுமானவரையில் ஜப்பானியர்கள் தூரத்தின் தன்மையை மைல், பர்லாங்கு, கிலோ மீட்டர் போன்ற வார்த்தைகளால் சொல்வதில்லை. அரை மணிநேரப் பயணம் கால் மணிநேரம் பயணம் என்றுதான் சொல்லுகின்றனர்.

எத்தனை மைல் வேகத்தில் போனால் இந்த அரைமணி நேரப் பயணம் என்று சொல்லுவதில்லை. நமது தமிழகத்தில் கிராமப் பகுதிகளில் ''கூப்பிடு தொலைவில்'' என்பார்களே, அதுதான் இதைக் கேட்டபோது என் நினைவிற்கு வந்தது.



# 13

ஜப்பானில் டோக்கியோ நகரத்தில் இருந்த போது தோஹோ ஸ்டூடியோ பார்க்கப் போனோம். அங்கு படம் காட்டும் கொட்டகையில் படம் எடுத்த பிறகு, ரீ-ரிக்கார்டிங் என்று சொல்லுவார்களே அந்த ஒலியையும், காட்சிகளைப் படமாக்கும் போது எடுக்கப் பட்டிருக்கும் உரையாடல் போன்ற ஒலியையும் ஒன்றாக இணைப்பதற்கு ''மிக்ஸிங்'' என்று ஆங்கிலத்தில் சொல் வார்கள். அந்த வேலையைச் செய்வதைப் பார்க்க நாங்கள் அனுமதிக்கப்பட்டோம்.

நாங்கள் வெளிநாடு புறப்பட்டதிலிருந்து அன்று வரை தமிழ்ப் பத்திரிகைகளையே பார்க்கவில்லை. தமிழகத்தில் என்னென்ன புதிய சேதி என்றறியத் தவியாய்த் தவித்தோம். ''ஏர் பிரான்ஸ்'' கோபால் என்ற நண்பர் சென்னையிலிருந்து ஜப்பான் வந்தார். அவர் தமிழ்ப் பத்திரிகைகளைக் கொண்டு வந்திருந்தார்! அரசியல் பிரச்னைகள் பல எங்களுக்கு தமிழகத்தின் நிலையை உணர்த்தின.

ஜப்பானில் ஆங்கிலம் பேசியும் பயனில்லை. ஜப்பானிய

மொழியைக் கற்றுக் கொள்ளாமல் எப்படிப் பேசுவது என்ற பேச்சு வந்த போது நாகேஷ் ஒரு கதைச் சொன்னார்:-

ஒருவனுக்கு ஆங்கிலம் பேச வேண்டுமென்று நீண்ட நாளைய ஆசையாம். ஒருநாள் வாழைப்பழம் ஒன்றை வாங்கிச் சாப்பிட்டானதும் தோலைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு ஆங்கிலேயனிடம் சென்று, ''மிஸ்டர் இந்த லெதரை எங்கே போடுவது?'' என்று கேட்டானாம். இதை நாகேஷ் சொன்னதும் எல்லோரும் மீண்டும் சிரித்தோம்.

காரில் சென்று கொண்டிருந்த போது காரை நிறுத்திக் காரைப் பின்னால் (ரிவர்ஸ்) எடுக்க வேண்டியிருந்தது. நாங்கள் சென்ற காரை ஓட்டியவர், காரைப் பின்னால் நகர்த்திய போது வேறு காரிலிருந்த ஒரு பெண் கீழே இறங்க, ''உராய்ங்'', ''உராய்ங்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''என்னய்யா இது அக்கிரமம் - கார் மேலே உராயக் கூடாது; ஒதுக்கிடக் கூடாதா என்றுதான் சொல்லுவாங்க. இவங்க என்னாடான்னா- 'உராய் உராய்' அப்படீன்னு வலுக்கட்டாயப் படுத்துறாங்களே'' என்றார் நாகேஷ்.

முன்பு நான் குறிப்பிட்ட திரு.சந்தானம் ''உராய்'' என்று ஜப்பானிய மொழியில் சொன்னால் ''வா'' ''வா'' என்று தான் பொருள் கொள்ள வேண்டும் என்று சொன்னதும், திரு.நாகேஷ் எங்கள் குழுவிலிருந்த பிறரிடம் சொல்லி ''உராய் உராய்'' என்று சொல்லியவாறே கிண்டல் செய்து கொண்டிருந்தார்:

இப்படி நாகேஷ் அவருடைய இயற்கைப்படிப் பழகுவதால் எங்களைப் போன்ற பலருக்குப் பொழுது போகவும், மனத்திலுள்ள பாரம், குழப்பம் குறையவும் மிக்க உதவியாக இருந்தது.

ஹாங்காங் புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டிருந்தார் திரு.சித்ரா கிருஷ்ணாசாமி. நான் திரு.மணியன் அவர்களோடு 'சிறு சேமிப்பு' இயக்கத்தை நடத்துகின்ற அதன் தலைவரைக் காணச் சென்றேன்.

வாயிற்படியில் அந்தத் தலைவரின் பிரதிநிதி காத்திருந்தார். அவர் எங்களைக் கண்டதும் ஆங்கிலத்தில் ''நீங்கள்தானே எம்.ஜி.ஆர்?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றேன்.

அழைத்துப் போனார்.

எங்களை ஒரு தனி அறையில் அமரச் செய்து விட்டுச் சென்ற அந்த நண்பர், இரண்டு மூன்று நிமிடங்களுக்குள்ளாகவே தலைவரோடு வந்தார். தலைவர் என்னை வரவேற்று, ஜப்பானிய லிபியில் எழுதி வைத்திருந்த ஆங்கில வாசகங்களைப் படித்தார். ஏறத்தாழ அரைமணி நேரத்திற்கு மேல் என்னோடு அந்தத் தலைவர் பேசிக்கொண்டிருந்தார்.

சிறுசேமிப்பு தலைவரிடம் விடைபெற்று பிறகு இந்தியத் தூதரைச் சந்திக்கச்சென்றோம். எங்களது படப்பிடிப்புக்குத் தேவையான அனுமதிகளைப் பெற உதவி செய்ததற்காக அவரைக் கண்டு நன்றி கூறச் சென்றோம்.

அவர் லயோலா, பச்சையப்பன் கல்லூரிகளில் படித்தவராம். தமிழ்ப் பேசினால் புரிந்துக் கொள்வாராம். அந்தத் தூதுவரின் பழகும் கண்ணியமிக்க தன்மையினைக் கண்டு வியந்தேன். அவரிடம் நன்றி கூறிவிட்டு உதவியாளராகப் பணியாற்றும் திரு. ஜெயராமன் அவர்களோடு அவருடைய வீட்டிற்குச் சென்றோம். ''எங்காவது மோரும் சாதமும் கிடைக்குமா?'' என்று கேட்டேன். ''கிடைக்கிறதா பார்ப்போம். வாருங்கள்'' என்று எங்களிருவரையும் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

அவருடைய வீட்டில் குளிர்சாதனப் பெட்டியில் தயாராயிருந்த சாதத்தைப் பரிமாறினார். சாம்பாரையும் ரசத்தையும் ஒரு நொடியில் சூடாக்கினார். அப்பளத்தை யும் பொரித்தார். தமிழ் நாட்டில் அவரது வீட்டில் தயாரான ஊறுகாய் வைத்தார்.

எனக்கோ நல்ல பசி. சுவையோ மறக்க இயலாதது. நேரமோ மிகக் குறுகியது. இருப்பினும் விடவில்லை. அவசர அவசரமாக வயிற்றைப் பரிபூரணமாக நிரப்பினேன். திரு. ஜெயராமன் அவர்களின் அன்பு இருக்கிறதே அது உணவை விட அதிகமாக என் மனத்தை நிரப்பி விட்டது.

சில மணி நேரம் கழிந்த பின் உணவு ஜீரணமாகி விட்டால், மீண்டும் வயிற்றை நிரப்ப உணவு தேவைப்படலாம். ஆனால் **பிறரால் தரப்படும் அன்பு ஒருவனை, அவன் மனத்தினை, உணர்வினை நிரப்பி விடுமாயின், அது அந்த மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் மறக்கவும் மாற்றவும் இயலாததாகும்.** வயிற்றிற்கு உணவு, மனத்திற்கு உறவு இவை இரண்டையும் கலந்து தந்த அந்த நண்பருக்குக் குழந்தைப் பருவத்திலேயே அவருடைய பெற்றோர் ''ஜெயராமன்'', அதாவது 'வெற்றி ராமன்' என்று எவ்வளவு பொருத்தமாகப் பெயர் வைத்து விட்டிருக்கிறார்கள்!

அப்படிப்பட்ட அந்த அன்புராமன் எனக்கு, ஜப்பானில் அவரைச் சந்தித்ததற்காக இந்த அனுபவ நினைவு, அன்புறவு அகத்தில் மட்டும் நிலை பெற்று விட்டால் போதாதென்று, புற அடையாளமாக ஒரு அழகிய வேலைப்பாடமைந்த கைத்தடி ஒன்றையும் தந்தார். சில சமயங்களில் அதைக் கைத்தடியாகவும் எல்லா நேரங்களிலும் காலணியை அணிவதற்கு உதவியாகவும் பயன்படுத்தலாம்.

**நண்பர்கள் எனப்படுவோர் தமது நண்பனுக்குத் தன்னைப் போன்ற நல்ல நண்பர்கள் எத்தனை பேரை உறவாக்கு கின்றார்களோ, அதற்கேற்பத் தமது நண்பனை உயர்த்தி, வாழ்விக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.**

ஒரு சில நண்பர்கள் இருக்கின்றனர். தம்மைத் தவிர, வேறு யாரையும் தம் நண்பனோடு சேர அனுமதிக்க மாட்டார்கள். தமக்கிருக்கும் முக்கியத்துவம் எங்கே குறைந்து விடுமோ? மற்றவர்கள் தமது இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு



எம்.ஜி.ஆர்., சந்திரகலா

விடுவார்களோ? என்ற சுயநலத்தில் அப்படிச் செய்து விடுவார்கள். தன்னம்பிக்கை இருப்பவர்கள் அவ்வாறு ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

திரு.மணியன் அவர் களைப் பொறுத்த மட்டில் உண்மை நண்பன், தனது நண்பனுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை எந்தச்சுயநலமுமின்றிச் செயலாக்கி வந்தார்.

விமானக் கூடத்திற்குச் செல்ல வேண்டிய காலம் மிகக் குறுகி விட்டது. கார் ஓட்டி 'ஹியாட்டோ' புயல் வேகத்தில் காரை ஓட்டினார். ஓட்டிய வேகத்தில் திரும்ப வேண்டிய இடத்தை ஏழெட்டு கெஜ தூரம் தாண்டி விட்டார். வண்டியை நிறுத்தி வேதனைப் பட்டார்.

நான் கேட்டேன், ''திரும்பிச் சரியான பாதையில் போகலாமே. இதற்கு ஏன் இவ்வளவு வருத்தம்?'' என்று.

''இன்னும் நான்கைந்து மைல்கள் தூரம் நேரே சென்ற பிறகு திரும்பி வந்துதான் செல்ல வேண்டும்'' என்று 'ஹியாட்டோ' சொன்னார். நாங்கள் சென்று கொண்டிருந்த பாதை ஒற்றை வழிப்பாதை. எனவேதான் அந்த நிலை. ஜப்பானியர்கள் விதிமுறைகளை எப்படிப் போற்றி மதித்து நடத்துகிறார்கள் என்பதற்கு நல்லதொரு உதாரணமாக இது இருந்தது.

வண்டி தொடர்ந்து பறந்தது. சரியான பாதையில் குறிப்பிட்ட நேரத்திற்குள் விமானக் கூடத்தை அடைந்து விட்டோம். 'ஹியாட்டோ'வின் முகத்தில் கண்ட மகிழ்ச்சி (அதாவது தனது கடமையைச் சரியாக நிறைவேற்றியதில்) அளவில் அடங்காத தாகும். எனக்கும் மற்ற நண்பர்கட்கும் மலர்ச் செண்டுகள் கொடுத்தார். நானும் எனது நினைவாக ஒருசிலவற்றைக் கொடுத்தேன்.

விமானத்திற்குப் புறப்படுவதற்கு முன் அவரை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டேன். எனது கண்களில் நீர் ததும்பியது. அணைப்பி லிருந்து விடுபட்ட போது அவருடைய கண்ணி லிருந்தும் கண்ணீர் வழிவதைக் கண்டேன். மொழி,



எக்ஸ்போவில் எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

இனவேறுபாடு கொண்ட இருவருக்கிடையில், ஒரு சில நாட்கள் மட்டுமே தொடர்பு கொள்ள முடிந்த இருவருக் கிடையில், இப்படி ஒரு அன்புறவு எப்படி ஏற் படுகிறது என்பதோ, பல ஆண்டுகள் பழகியும் உள்ளம் ஒட்டுறவு கொள்ளாமல் அன்னிய ராகவே வாழுகிறோமே என்பதையும் சிந்திக்கும் போது என்னைப் பொறுத்தவரையில் பதில் கூற வலிவற்றவனாகவே இருக்கிறேன்.

எங்கோ ஏதோ ஒரு மூலையில் நம்மையும் அறியாது நமது பலவீனம் நம்மைப் பிறரிடமிருந்து அன்னியமாக்கி விடுகிறது என்பதை ஏனோ நாம் மறைக்க வேண்டும்? கொள்கை, ஆசை, தேவை இவைகளின் பேராவல் ஏன் நாம் நமது தன்னம் பிக்கையை, நமது அறிவின், ஆற்றலின் வலிவினைப் பலவீனமாக்கி, நமது குறையைப் பிறர் மீது சுமத்தி, அதன் பாதுகாப்பில் நம்மை உயர்த்திக் கொள்ள முயல வேண்டும்? ‘பிறரிடமிருந்து எதிர்பார்த்தல்’ என்பது பரநலத்தின்

அடிப்படையில் இருக்குமாயின் மேலே சொன்ன குதர்க்க வாதங்களை, ஏமாற்றங்களை ஏற்படுத்த நாம் நிச்சயம் காரணமாக அமைய மாட்டோம் என்பது உண்மை. ஜப்பானி லிருந்து இப்படிப்பட்ட அன்புள்ளங்களிடமிருந்து பிரியாவிடை பெற்று, விமானத்தில் ஹாங்காங்கிற்குப் பயணமானோம்.

விமானம் சுமார் 2-10 மணிக்குப் புறப்பட்டு ஏறத்தாழ 5.30 மணிக்கு ஹாங்காங் வந்து சேர்ந்தது. கரையைக் காண முடியவில்லை. எங்கு பார்த்தாலும் ''தண்ணீர் - நிலம் எங்கே இருக்கிறது? விமானம் எங்கே இறங்குகிறது?'' என்று நாங்கள் ஒருவரையொருவர் கேட்டுக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டோம்.

இரு பக்கத்திலும் தண்ணீர், இடையில் நிலம்; அந்த நிலப்பகுதியில்தான் விமானம் இறங்கியது.

விமான ஓட்டிகள் ஏதோ காரணத்தால் மிகச் சிறிய தவறிழைத்து விட்டாலும் தண்ணீருக்குள் விமானம் இறங்கி விடும். மூடுபனியினால் முன்பு ஒருமுறை தரை இறங்க வேண்டிய விமானம் தண்ணீரில் இறங்கிவிட்டதாகக் கூடச் சொன்னார்கள். எங்கள் (நாங்கள் பயணம் செய்த) விமானம் பத்திரமாகத் தரை இறங்கியது.

ஹாங்காங் விமான நிலையத்தில் பல தமிழ் நண்பர்கள் எங்களை அகமும் முகமும் மலர வரவேற்றார்கள். அவர்களில் பெரும்பாலா னோர் முஸ்லீம்களாக இருந் தனர். என்னை ஆரத்தழுவி அன்பு கொண்ட வாழ்த்துக் களோடு அவர்களது உறவின ராக என்னையும் குழுவினர் களையும் வரவேற்றார்கள்.

எங்களுக்குச் சென்னை யில் அறிமுகமாயிருந்த திரு. ரஹ்மான் அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் எங் களை வரவேற்றனர். திரு. விஸ்வநாதன் அவர்களும் வரவேற்றார். இருவரும் தங்கள் கார்களில் 'கவ்லூன்' என்று பெயர் பெற்ற அந்தப் பகுதியிலிருந்து அழைத்துச் சென்றனர். வழியில் வெள்ளத்தில் கார்களைப் படகுகளில் ஏற்றி ஹாங்காங்கிற்குச்

(எதிர் கரையில் உள்ள பகுதி) சென்றோம்.

ஃபெத்ரீ- என்றழைக்கப்படும் யந்திரப் படகில் நாங்கள் சென்ற கார்களோடு மேலும் பல கார்கள் ட்ரக்குகள் போன்றவைகளும் பயணம் செய்தன. தமிழகத்திலேயே ஒரு பழமொழி உண்டு- ''ஓடம் வண்டியில் ஏறும்; வண்டி ஓடத்திலும் ஏறும்'' என்று. இதை முன்பு நான் நேரில் கண்டிருந்தாலும் இன்று அது எத்தனைத் தத்துவங்களை உள்ளடக்கிய சொல் என்பதை நன்கு உணர முடிந்தது.

**எத்தனை பெரிய புகழ், பெருமை படைத்திருந்தாலும் தனி ஒரு மனிதன் என்ற நிலையில் அவனால் சாதிக்கக் கூடியது எதுவும் இல்லை என்பதை ஒரு மனிதனுடைய வாழ்க்கை - உண்மையைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கே விளங்கும்.**

படகின் விளிம்பில் நின்று, மாலை நேரத்தில் அந்தத் தண்ணீர்ப் பகுதியில் செல்லும் போது எதிர்ப்புறத்திலும் நம்மைச் சுற்றியும் போய் வந்து கொண்டிருக்கும் சிறு படகுகள் முதல் ஓரளவு பெரிய கப்பல்வரை காணும் போதும்... கொஞ்சம் கொஞ்சமாகக் கதிரொளி மறைந்து மின் ஒளி ஆங்காங்கே கட்டிடங்களில் ஒளி பாய்ச்சும் போதும்... அந்த அழகை, ஆஹா எப்படி வர்ணிப்பது! அதை விவரிக்கும் தமிழறிவு எனக்கு இல்லையே...



எம்.ஜி.ஆர்., மேட்டா ரூங்ராத்

பல்வேறு கற்கள் பதித்த கழுத்திலணியும் நகைகளைப் பார்க்கின்றோமா? காதணிகளின் அசைவில் அந்த ஜொலிக்கும் கற்களின் ஒளி, கட்டிடங்களில் யாராவது நின்று வேடிக்கை பார்ப்பதால் அப்படி நம்மை பிரமிக்க வைக்கிறதா? ஒன்றும் புரியவில்லையே...

இப்படி நான் மட்டுந்தானா எண்ணினேன்? என்னோடிருந்த அனைவருமே இவ்வாறு தான் எண்ணினார்கள் என்பதை நான் காதாரக் கேட்கும் வகையில் உரக்கவே பேசினார்கள்.

இரவு ஒட்டலில் உணவு உட்கொண்டோம். உறங்கப் போவதற்கு இடையில், மின் ஒளி பாய்ச்சும் அந்த அழகை உச்சியிலிருந்து பார்க்க வசதியாக ஒரு குன்றிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடத்திற்குச் சென்று பார்த் தோம். நாங்கள் நின்றிருந்த இடத்தில் மிகக் கொஞ்சமாக வெளிச்சம் இருந்தது. பிறை சந்திரன் வடிவத்தில் தண்ணீருக் குள்ளும் வெளியிலும் பல்வேறு வண்ண விளக்குகளின் அழகொளி நம்மைக் கவர்ந்து மெய்மறந்து பார்த்துக் கொண்டே இருக்கச் செய்து விடுகிறது.

மறுநாள், வேறு இடங்களைப் படப் பிடிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கச் சென்றோம். ஓர் இடத்தில் படி இறங்கி நடக்க வேண்டி இருந்தது. கூட்ட நெரிசல் இருந்தது. 'அய்யா' என்றொரு சப்தம் 'மிஸ்டர்' என்று இன்னொரு சப்தம். திரும்பினேன். காலில் ஒரு சிறு கட்டுப் போட்டுக் கொண்டிருந்த ஒருவர் கையை நீட்டி பிச்சை கேட்டார். இந்தியாவிலிருந்து ஐந்தாந் தேதி புறப்பட்டதற்குப் பிறகு அன்றுதான் 25-ஆம் தேதியன்று முதன் முதலாக மீண்டும் அங்குதான் பிச்சைக் காரரைச் சந்தித்தேன்.



# 14

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள்.

சிலரோ பசியைப் போக்கிக் கொள்ள அன்றி, பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாகவே கொள்கின்றனர்; மற்றும் சிலர் வறுமையின் கொடுமை தாங்காது வேறு வழியின்றி பிச்சை எடுக்கின்றனர்.

ஜப்பான் போன்ற இடங்களில் நான் கண்டவரையில் பிச்சைக்காரர்கள் இருக்கவில்லை; பிச்சை எடுப்பதை அவர்கள் கேவலமாகக் கருதுகின்றனர் போலும்.

இதை எழுதும் போது எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது-

''எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. உதவி செய்யுங்கள் என்று கேட்பதற்கும் பிச்சை எடுப்பது என்றுதானே பெயர். அப்படி யானால்...

''நிதி சேர்ப்பது'' போன்றவைகளுக்கு என்ன பெயர்?

பிச்சைக்காரர் தனக்காக அவரே கேட்கின்றார்: நிதி சேர்ப் பதிலோ குறிப்பிட்ட ஒருவருக்காக மற்றவர்கள் கேட்கிறார்கள்.

சில நேரங்களில் குறிப்பிட்ட நபரே கேட்கின்றார். ''எனக்கு நிதி தாருங்கள்'' என்று. இதற்கும் என்ன பொருள்?

**பைசாக் கணக்கில் கேட்பவன் பிச்சைக்காரன். ஆயிரக் கணக்கில் கேட்பவன் உரிமையாளன்.** அதாவது, அவனது பொதுத் தொண்டுக்கு இந்த நாடு செய்ய வேண்டிய கடமையும் பொறுப்புமாகும்!

அப்படியானால் நம்மைப் போலவே இந்த உலகத்தில் பிறந்து விட்டானே, அந்த அப்பாவியான பிச்சைக்காரனாக்கப் பட்டவன், அவனுக்கு மட்டும் இந்த நாடு ஏதும் கடமைப் பட்டிருக்கவில்லையா? அவனுக்குக் கல்வி அறிவோ, தொழில் வாய்ப்போ அளிக்காதது யார் குற்றம்? இந்தச் சமூகத்தின் குற்றமல்லவா?

இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு தோற்றுவித்த, அறிவு காட்டிய பாதையில் செயல்படத் தொடங்கி உலகுக்கே மிகப்பெரிய கேள்விக்குறி ஆகிவிட்டிருக்கும் சீனர்களின் சிவப்புக் கொடிகள் எங்குப் பார்த்தாலும் பளிச்சிட்ட காட்சினய, ஒரு நாள் வண்ண விளக்குகளின் ஒளிக்கிடையில் அசைந்து படபடத்து ஆடும் அழகைக் காணும் வாய்ப்பைப் பெற்றோம்.

ஹாங்காங் நகரத்தின் அழகையும் செல்வச் செழிப்பையும் கண்டு, மதி மயங்கும் ஒவ்வொருவரும் நான் மேலே குறிப்பிட்ட இதையும் காணத்தான் வேண்டும். செஞ்சீனாவின் விடுதலை விழா நாளை ஹாங்காங்கிலே உள்ள சீனர்களில் பெரும்பாலோர் மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

ஹாங்காங்கின் அழகிய கடற்கரைகளில் ஒன்றான 'பெல்ஸ் பீச்'சில் 'நிலவு ஒரு பெண்ணாக' என்ற பாடல் படமாக்கப் பட்டது.

'கபர்டீன்' என்றழைக்கப்படும் அப்பகுதியில், நானும் மஞ்சுளாவும் திரு.அசோகனிடமிருந்து தப்பி வரும் காட்சியில் தெருவில் நாங்களிருவரும் ஓடி ஓடி வரும் காட்சி படமாக்கப் பட்டது.



எம்.ஜி.ஆர்., மேட்டா ரூங்ராத்

எந்தப் பக்கம் பார்த்தாலும் எளிமை நிறைந்த சிறு சிறு கடைகள், சிறு சிறு படகுகள் வீதியை ஒட்டிப் பக்கத்திலிருந்த நதியில் மிதந்து கொண்டிருந்தன. அதன் முகப்பில் செங்கொடி பறந்து கொண்டிருந்தது.

''எல்லாப் படகுகளிலும் செங்கொடிகள் பறக்கின்றனவே, எல்லோரும் செஞ் சீனாவின் ஆதரவாளர்களா?'' என்றேன்.

அவர் அளித்த பதில் எனக்குத் திகைப்பையே தந்தது.

''சீனக் கடற்கரையோரத்தில் மீன் பிடிக்க வேண்டுமாயின் சீனாவின் அனுமதி வேண்டும். இக்கொடிகளோடு சென்றால் எளிதாக அனுமதி பெறலாம். அதனால்தான் இப்படி'' என்று பதில் சொன்னார். ஆனால் அவருடைய கூற்று தவறானது என்பது போன்றிருந்தது- மேலே குறிப்பிட்டிருக்கின்றேனே விழாக்கோலம், அது தக்க பதிலைத் தந்தது.

மீன் பிடிக்க வேண்டுமே என்பதற்காக அந்தப் படகுக் காரர்கள் செங்கொடிகளைத் தங்களது படகுகளில் கட்டி யிருந்தார்களாயின், ஹாங்காங் நகரத்திற்குள் சினிமாக் கொட்டகைகளிலும் வீடுகளிலும் கடைகளிலும் அலங்கார விளக்குகளோடு மாசேதுங்கின் சித்திரங்களைப் பெரிய 'பானர்'களாக அமைத்துக் கொண்டாடுவானேன்?



எந்த லாபத்திற்காக? ....

அரசியலில் மட்டும் அல்ல; இலக்கியம், கலை இவை போன்ற எந்தப் பிரச் னையிலும் நாம் போடுகின்ற தப்புக் கணக்குகள்... அதாவது நமது மனம் ஏற்றுக் கொண் டாலும் நம்மைப் பழக்கிக் கொண்டு விட்ட வழி யிலிருந்து மாறி விட முடியா மல், உண்மையைப் பொய்



விமானத்தில் வி.என்.ஜானகி,
எம்.ஜி.ஆர்., ப.நீலகண்டன்

யாக்கிக் கூறுவதன் வாயிலாக, நம் மனத்தை வேறு வழியில் திருப்திப் படுத்திக் கொள்ள முயலுகின்ற பலவீன மான கருத்துக்கள் எனது நண்பரின் கருத்துப் போலத்தானிருக்க முடியும்.

''சினிமாக்காரன்; இவனை யார் மதிக்கப் போகிறார்கள்?'' என்று கேலி பேசுவது; ஒரு வேளை அந்தக் கலைஞர் வெற்றி பெற்று விட்டால் ''மக்கள் ஏமாந்து விட்டார்கள்'' என்பது. இப்படி யாகத் தம்மைத் தாமே மாற்றிக் கொண்டு உளுத்துப் போன, ஒதிய மரத்தில் அஸ்திவாரமிடுபவர்களை எண்ணி நாம் அனுதாபப் படாமல் என்ன செய்வது?

நான் படமெடுத்த போது கூடுமான வரையில் அந்தப் பகுதி களில் சிலவற்றையும் படமாக்கினேன்.

'ஹாங்காங்'கில் 'பிரின்ஸஸ் பில்டிங்க்ஸ்' என்ற ஒரு வியாபாரத் தலம் உண்டு. எதிர் வரிசையிலுள்ள கட்டிடத்திலும் அதைத் தொடர்ந்து மேலே சென்றால் எதிர்வரிசையிலுள்ள, இந்தக் கடையின் மறு பகுதிக்குச் செல்ல வீதியின் குறுக்கே தெருப்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது அந்தக் கடைக்குச் சொந்தம்.

அந்தப் பாலம் இருபக்கமும் கண்ணாடிகளால் தடுக்கப்பட்டு மிக அழகாக இருந்தது. அந்த இடத்தில் நானும் மஞ்சுளாவும் சந்தித்து உரையாடும் காட்சியைப் படமாக்கினேன். நான் சென்றதும் அங்குள்ள தமிழன்பர்களும் இந்தியர்களும் எனக்கும் குழுவினருக்கும் இரவு 'ஹில்டன்' ஓட்டலில் விருந்து கொடுத் தார்கள்.

அங்கும் தமிழிசை, தமிழ்ப்பண்பு ஒன்றையொன்று போட்டி போட்டது போல் தமிழ் உணர்வும் எங்களோடு போட்டி இட்டது. என்னுடைய நினைப்பெல்லாம் நாளை எங்கு, எந்தக் காட்சியைப் படமாக்குவது என்பதிலேயே இருந்தது.

'ஹாங்காங்' என்பது இரு பகுதிகளாக உள்ளது. ஒன்று ஹாங்காங்; இன்னொன்று கல்லோன். இரண்டு பகுதி களையும் இணைப்பது கடல்.

லாரிகள், பெரிய கார்கள், சின்ன கார்கள், மக்கள் இப்படி எல்லாமே 'ஃபெர்ரி' என்ற மிகப் பெரிய படகுகளில்தான் கடத்தப்படுகிறது. யந்திரத்தால் இயங்கும் இந்தப் படகுகளிலும் ஓரிரு நாட்கள் பயணம் செய்தோம். இரவில் அந்தப் படகில் முன்பே சொன்னது போல் வண்ண விளக்குகளின் அலங்காரங்கள் கண்கொள்ளாக் காட்சியாகும்.

''டைகர்பாம்'' என்பது ஒரு மருந்து, அதை விற்றுச் சம்பாதித்த பணத்திலிருந்து இந்த தோட்டத்தைப் பல லட்சம் ரூபாய்களைச் செலவு செய்து அதன் உரிமையாளர் தோற்று வித்திருப்பதாகக் கூறினார்கள். ''டைகர் பாம் கார்டன்'' என்ற அந்த இடத்தில் ஒரு பாடல் காட்சியைப் படமாக்கினேன்.

ஹாங்காங்கில் மட் டும் அல்ல. சிங்கப்பூரி லும் இதைப் போன்ற 'டைகர்பாம் கார்ட'னை வேறு மாதிரியாக அமைத்திருக் கிறார்கள். குழந்தைகளுக்கு நல்லதொரு பொழுதுபோக்கும் இடமாக இது அமைக்கப்பட்டிருக்கிறது.

அங்கு மிகப் பெரிய கோடீஸ்வரரான, இந்தியாவைச் சேர்ந்த திரு.ஹரிலீலா அவர்கள் தங்களது வீட்டிலேயே படம் எடுக்க அனுமதித்தார். 'தங்கத் தோணியிலே' என்ற பாடலை அவருடைய விசேட இயந்திர படகிலேயே படமாக்க அனுமதித்தார்.

இவ்வாறு நண்பர்களின் அன்பு அரவணைப்பில் நாங்கள் செல்லக் குழந்தைகளாக்கப் பட்டுச் சீரோடும் சிறப்போடும் பண்போடும் பாதுகாக்கப்பட்டோம். எங்கள் படத்தொழிலுக் கும் அவர்கள் மறக்க முடியாத உதவி செய்தார்கள்.



எம்.ஜி.ஆர்., மஞ்சுளா

**மனிதனாக இவ்வுலகில் ஒருமுறைதான் பிறக்கின்றோம்; இந்தப் பிறவியில், இறைவன் படைத்த உலகை முழுவது மாகப் பார்த்து ரசிப்பது என்பது எல்லோருக்கும் இயலாத காரியம்.**

உலகத்தைச் சுற்றிப் பார்க்க எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை, இறைவன் கொடுத்த நல்ல வாய்ப்பாகவே கருதுகிறேன். அதனை முழுமையாகப் பயன்படுத்தி இந்தப் படத்தை உருவாக்கியிருப்பதாக நினைக்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் இருக்கும் ரசிகனும் ஜப்பான், ஹாங்காங், டோக்கியோ, சிங்கப்பூர் போன்ற நாடு களைப் பார்த்த உணர்வை இந்த படத்தின் மூலம் பெறுவான் என்றால், அதுவே 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் வெற்றி என்று சொல்லுவேன்.

**என்றும் உங்கள்**

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்று பெரியவர்கள் சொன்னாலும் சொன்னார்கள்; அந்தச் சொல் என்னை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்து விட்டது என்பதை எண்ணும்போதெல்லாம், எனக்கே சிரிப்பு அடக்க முடியாத அளவுக்கு வருகிறது. ஏனெனில் பணம் சம்பாதிக்கச் சென்றேனா, செலவு செய்யச் சென்றேனா என்பதை நினைத்தல்ல; கையில் போதிய பணம் இல்லாத நிலையில், இயற்கை நியதி யின் வலிவு பொருந்திய கரங்களில் என்னை ஒப்படைத்துக் கொண்டதன் வாயிலாக, என்னை நம்பிய நல்ல பண்புள்ள கலைஞர் களையும் பரிதாபமான நிலைக்கு ஆளாக்கும் விபரீதச் சூழ்நிலைக்குச் சென்றேன்.

ஆமாம், அந்த அன்புள்ளங்கொண்ட, அந்த நல்ல நண்பர்களை, கையில் பணமில்லாத ஏழைகளாக, உறவினர்களில்லாத அனாதைகளாக, என்னுடைய எந்த முடிவிலும் அவர்கள் அசைய வேண்டியவர்களாக, சுருங்கச் சொன்னால் என்னைத் தவிர, வேறு துணையற்றவர்களாக ஆக்கிவிட்ட நிலையில் இவர்களை என்னோடு வெளிநாட்டுப் பயணத்தில் கலந்து கொள்ள அழைத்துச் சென்றேன்.

நான் அழைத்துச் சென்றேனா?....

உங்கள் அன்பன்,



எம்.ஜி.ஆர்., தூரக்கிழக்கு நாடுகளில் 'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்பை நடத்திய போது ஏற்பட்ட அனுபவங்களையும், சுவையான சம்பவங்களையும், விவரிக்கும் புத்தகம்,

விஜயா பப்ளிகேஷன்ஸ்